# தேவனை மையமாகக்கொண்டு ஜெபித்தல்

சகரியா பூணன்

எம் ஜெபம் கேட்கப்படும்படி, தேவா!
நீரே எம் வாழ்வின் மையமாகிட அருள் புரிவாய்!!

★ ஆறாம் பதிப்பு (2019)

## *ஜெபம் நாடி . . .*


| | |
|---|---|
| *1.* நாம் எப்படி ஜெபிக்கக்கூடாது? . . . . . . . . . . . . . . . . | 5 |
| *2.* தேவாதி தேவன் நம் சொந்த தகப்பன் . . . . . . . . . . . | 16 |
| *3.* தேவனுடைய நாமம் மகிமைப்படுதல் . . . . . . . . . . | 28 |
| *4.* தேவனுடைய ராஜ்யம் . . . . . . . . . . . . . . . . . . . . . | 41 |
| *5.* தேவனுடைய பரிபூரண சித்தம் . . . . . . . . . . . . . . . | 47 |
| *6.* நம் சரீரத் தேவைகள் . . . . . . . . . . . . . . . . . . . . . | 53 |
| *7.* நம் பாவங்கள் மன்னிக்கப்படும் புண்ணியம் . . . . . . | 65 |
| *8.* தீமையிலிருந்து சம்பூரண விடுதலை . . . . . . . . . . . . | 77 |
| *9.* தேவனுக்கே சகல மகிமையும் உரித்தாகுக . . . . . . . . | 90 |


**தேவனை மையமாகக் கொண்டு ஜெபித்தல் (God - Centred Praying) -** 1990

Copyright - ZAC POONEN

*இப்புத்தகத்தின் செய்திகள் தவறாகக் கையாளப்படுவதை தவிர்ப்பதற்காக இப்புத்தகம் பதிப்புரிமையைப் பெற்றுள்ளது. ஆசிரியரின் அனுமதியில்லாமல், இச்செய்திகள் மொழி பெயர்க்கப்படவோ அல்லது அச்சிடப்படவோ கூடாது.*

*ஆசிரியர் முகவரி:*
Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149
Karnataka
India
email: cfc@cfcindia.com

## சுயம் ஒழிந்து, கிறிஸ்து வாழ்வதே 'அவரது மையம்!'

*வல்லமையான ஜெபத்திற்கு இரண்டு பிரதானமான காரியங்கள் கட்டாயமாகத் தேவை! முதலாவது, தேவனால் அருளப்பட்ட* **மனபாரம்** *நமக்குள் இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் தேவன் மூலமாக, நம் இருதயத்திற்குள் வழங்கும் மனபாரமே, வலிமையான ஜெபத்திற்கு முதல் தேவையாகும்! இரண்டாவது, பிரதானமான தேவை,* **விசுவாசம்.** *அவரில் நம்பிக்கை வைத்திடவே தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார். நம் அவிசுவாசம், அவரை அவமதிப்பதற்கு ஒப்பாகும். ஏனெனில், அவிசுவாசம் தன்னில் மறைத்து வைத்திருக்கும் செய்தி:"ஓர் பூமிக்குரிய தகப்பன் தன் பிள்ளைகளிடம் அக்கறை கொள்வதைக் காட்டிலும், இந்த தேவன் என்மீது வைத்திருக்கும் அக்கறை குறைவுள்ளது!" என்ற செய்திதான். இவ்வித அவிசுவாசத்தில் செய்திடும் ஜெபத்தில் எந்த பலனும் கிடைப்பதில்லை!*

*மேலும், ஜீவியத்தை சார்ந்தே ஜெபம் இருக்கிறது! ஓர் நீதியுள்ள நம் வாழ்க்கையைப் பொறுத்தே நம் ஜெபம் வலிமை கொண்டதாய் இருக்க முடியும்! இவ்வித மனிதன் மாத்திரமே, தேவனுடைய மனதிற்கு உகந்த விதத்தில் ஜெபித்திட முடியும்! நம் சரீரம் ஜீவிப்பதற்கு "சுவாசம்" எவ்வளவு அத்தியாவசியமோ, அதேபோல் நம் ஆவிக்கு "ஜெபம்" என்ற சுவாசம் அத்தியாவசியமாய் இருக்கும்படி தேவன் செய்திருக்கிறார்.*

*ஜெபத்தில் போராட்டம் உண்டு என்பது உண்மைதான் (கொலோ.4:12). ஏனெனில், "வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" என வாசிக்கிறோமே! (எபே.6:12). ஆகிலும், ஜெபம் ஓர் "மந்தமான சடங்காக" மாறிவிட்டால், சுவாசிக்க கஷ்டப்படும் "ஆவிக்குரிய ஆஸ்துமா வியாதி" உங்களுக்கு ஏற்பட்டுவிட்ட அறிகுறியாக உணருங்கள்! இவ்வித விசுவாசிகள், நோயாளிகள்! "எப்படி ஜெபிக்க வேண்டும்?" என்ற சிறந்த போதனையைக் கொண்ட புத்தகம், இவர்கள் வியாதியை சொஸ்தமாக்கிட முடியாது. மாறாக இவர்கள் தங்கள் ஜீவியத்தை மறுபரிசீலனை செய்து, ஜீவியத்தில் "முதலிடமாய்" இருக்க வேண்டியவைகளைச் சீர்ப்படுத்த வேண்டும். அது ஒன்றே, அவர்கள் சுகம் பெற வழிவகுக்கும்!*

*இந்தப் புத்தகமும் அதற்காகவே எழுதப்பட்டதாகும்!*

*நம் வாழ்வின் "முதலிடமானவைகளை" சரிசெய்துகொண்டு, தேவனையே நம் வாழ்வின் மையமாக்கும்போது, இந்த "ஆஸ்துமா வியாதி" பஞ்சாய் பறந்தே போய்விடும். ஜெபம், ஓர் வலுக்கட்டாயமான சடங்காச்சாரமாக ஒருக்காலும் இருப்பதில்லை! ஜெபம், பேரானந்தம் நிறைந்த, பரவசமாகவே எப்போதும் நிலைத்திருக்கிறது!*

*நண்பரே, இந்த இனிய ஜெப வாழ்க்கை உங்களுக்கும் வேண்டுமல்லவா? அப்படியானால்... இந்த புத்தகம் உங்களுக்காகவே எழுதப்பட்டதாகும்!*

**கிறிஸ்துவின் அடிமை,**

(Zac Poonen)

வாழ்வின் “நடுமையமாக” தேவன்
இல்லையென்றால்.... ஜெபம் என்ற புனிதத்தை
ஒரு மனிதனும் பெற்றிட இயலாது!
சுயம் அழிந்து, தேவனை மையம்
வைத்திடும் ஜெபம்,
தேவனோடு பேசுவதுபோன்ற
இனிமையானது! பரவசம் நிறைந்தது!
“ஜெபமே ஜெயம்!” என, உங்கள் வாழ்வினை
‘பரத்தின் படிகளாய்’ மாற்றி
அமைத்திடும் வலிமை கொண்டது!



# 1

## நாம் எப்படி ஜெபிக்கக் கூடாது?

*"நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம்பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்கு பலனளிப்பார்.*

*அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள் அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.*

*நீங்கள் ஜெபம்பண்ண வேண்டிய விதமாவது: பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே,* **உம்முடைய நாமம்** *பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக;* **உம்முடைய சித்தம்** *பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்" என்பதே.*

**"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" என, தன் சீஷர்களிடம் இயேசு கூறினார் (மத்.6:5-15).**

*இந்த ஜெபம் ஒன்றையே தன் சீஷர்கள் ஜெபிக்கும்படி இயேசு கற்றுத் தந்தார். எனவே இச்ஜெபத்தை நாம் சரியான முறையில் அறிந்து கொண்டால், அது நம் வாழ்விற்கு மிகுந்த பிரயோஜனமாயிருக்கும் என்பது திண்ணம்!*

*'நீங்கள் ஜெபிக்கும் பொழுதெல்லாம்' இவ்விதமாய் ஜெபியுங்கள் என்றல்லவா இயேசு கூறினார் (வச.9). இருப்பினும், நாம் ஜெபிக்கும் பொழுதெல்லாம், திரும்பத்திரும்ப* **இதே வாக்கியங்களைச்** *சொல்லி ஜெபிக்கவேண்டும் என்று இயேசு இங்கு பொருள்படுத்தவேயில்லை. மாறாக, அவர் பொருள்படுத்தியதெல்லாம், நம்முடைய எல்லா ஜெபங் களும் 'இதே வழிமுறையை'* (Pattern) *பின்பற்றியிருக்க வேண்டும் என்பது தான்.*

*இயேசு கற்றுத்தந்த ஜெபத்தின் ஒவ்வொரு வாக்கியத்தையும், நம் மனதில் ஏற்றுக்கொண்டு,* **அதைக் கடைபிடித்து,** *'பின்பு' அதே வாக்கியங்களைக் கூறி ஜெபிப்போமென்றால், அதில் எவ்வித தவறும் இல்லை. ஆனால், அது அவ்வளவு எளிதான காரியமல்ல! தொடர்ந்து இப்புத்தகத்தை வாசிக்கும்போது நீங்களே அதை புரிந்துகொள்வீர்கள்.*

*பாருங்கள், எப்படி ஜெபிக்க வேண்டும் என சீஷர்களுக்கு இயேசு கற்றுத்தருவதற்கு முன்பாக, எப்படி ஜெபிக்கக் கூடாது என்றல்லவா முதலாவதாகக் கற்றுத் தந்தார்!*

**மாய்மாலக்காரர்களாய் ஜெபிக்கக்கூடாது!**

*நாம் எப்படி ஜெபிக்கக் கூடாது என இயேசு முதலாவதாக முக்கியப்படுத்தி கூறியது யாதெனில், நாம் மாய்மாலக்காரர்களாக ஜெபிக்கக் கூடாது என்பதுதான்! (வசனம் - 5,6).*

*எல்லா சுவிசேஷங்களையும் கவனித்து வாசித்துப் பாருங்கள். அவைகளில் மாய்மாலத்தைப் பற்றி இயேசு நிறைய காரியங்கள் கூறியுள்ளதைக் காண்பீர்கள். பரிசேயர்கள் மாய்மாலக்காரர்களாய் இருந்ததினிமித்தம், அவர்களை இயேசு எப்படியெல்லாம் சாடினார் பார்த்தீர்களா! இந்தப் பரிசேயர்களிடம் அநேக நல்ல காரியங்கள் இருக்கத்தான் செய்தன. அவர்கள் அனுதினமும் ஜெபித்தார்கள்; வாரத்தில் இருமுறை உபவாசித்தார்கள்; அவர்கள் தசமபாகமாகத் தங்கள் பணத்தை மாத்திரமல்லாமல், தங்கள் சமயலறையின் பின் புறத்தில் விளைந்த ஒர்த்தலாமிலும், சீரகத்திலும்கூட தசமபாகம் செலுத்தினார்கள். தேவனுடைய பிரமாணங்கள் என அவர்கள் அறிந்து கொண்டவைகளில், மிக நுணுக்கமான காரியங்களையும் அதிக கவனமாய் பின்பற்றினார்கள்! கற்புஒழுக்கத்திலும், நேர்மையிலும் அவர்கள் வெளியரங்கமாய்* (Externally) *சிறந்து விளங்கினார்கள்! தங்கள் ஆலயத்தில் நடைபெறும் ஓய்வுநாள் ஆராதனையை அவர்கள் ஒரு போதும் தவறவிடுவதேயில்லை. மேலும், வேத வாக்கியங்களால் அதிகமாகப் போதிக்கப்பட்டும் இருந்தார்கள். இப்படியெல்லாம் இருந்தும், தங்கள் சக விசுவாசிகளின் புகழ்ச்சியைப் பெறுவதற்காகவே இவ்வனைத்தையும் அவர்கள் செய்தபடியால், இயேசு அவர்களை கடுமையாகக் கண்டித்தார். ஆம், "அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும்* **மனுஷரால் வருகிற மகிமையை** *அதிகமாய் விரும்பினார்கள்" (யோவான் 12:43).*

மேற்கண்ட பரிசேயர்களைத் தொன்றுதொட்டு வழிவந்தோர் - அதாவது, தேவனிடமிருந்து வரும் புகழ்ச்சியைக்காட்டிலும், தங்கள் மூத்த தலைவர்களின் மற்றும் தங்கள் சகமனிதர்களின் புகழ்ச்சியை அதிகமாய் விரும்பித் தேடியவர்கள் - இன்றும் இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு சபைகளிலும், ஐக்கியங்களிலும் இருக்கிறார்கள்... ஆம், "நன்றாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!"

'மாய்மாலக்காரன்' (HYPOCRITE) என்ற வார்த்தை கிரேக்க பதத்தி லிருந்து தோன்றியதாகும். அதன் சரியான பொருள் 'நடிப்பவன்' என்ப தாகும். 'ஆலிவுட் திரையில்' (Hollywood Movie) யோவான்ஸ்நானகனாக நடித்த நடிகனை எண்ணிப்பாருங்கள். இவனோ, தன் நிஜ வாழ்க்கையில் குடிகாரனாகவும்; இரண்டு அல்லது மூன்று மனைவிகளை விவாகரத்து செய்து வாழ்ந்த வேசிக்கள்ளனாகவும் இருந்தான். ஆனால் திரைப் படத்திலோ இவன் 'பரிசுத்தமான தீர்க்கதரிசி!' இவ்விதம் தன் நிஜ வாழ்க்கையில் மாறுபட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, மனுஷர் முன்போ நேர்மையாளனைப் போல நடிப்பவனே 'மாய்மாலக்காரன்'.

இவ்வித மாய்மாலக்காரன், தான் ஒரு முழு இருதயமான கிறிஸ்தவனைப் போலவே மற்ற விசுவாசிகளுக்கு முன்பாக நடிப்பான். ஆனால், அவன் வீட்டில் தன் மனைவியை நடத்தும் விதத்தையும், அவன் தன் அலுவலகத்தில் உள்ள மற்றவர்களோடு பழகும் விதத்தையும் காண்பீர்களென்றால், அங்கு அவனை முற்றிலும் மாறுபட்ட மனிதனாகவே காண்பீர்கள். ஏன்? இங்கு இவன், 'இப்போது' நடிக்கவில்லை! ஆம், அவன் தன் வீட்டிலும், தன் அலுவலகத்திலும், தன் உண்மை சொரூபத்தைக் காட்டும் மனிதனாய் இருக்கிறான். இப்படிப்பட்டவன் ஓர் மதஸ்தனாய் இருக்கலாம், ஆனால் **ஆவிக்குரியவன்** அல்லவே அல்ல!

அரங்கில் கூடியிருப்பவர்கள், தன் நடிப்பைப் பாராட்ட வேண்டும் என்பதற்காகவே ஓர் நடிகன் நடிக்கிறான். அவ்விதமே ஒவ்வொரு மாய்மாலக்காரனும் செய்கிறான். முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த பரிசேயர்கள் இவ்விதமே கிரியை நடப்பித்தார்கள். இப்போது 20-ம் நூற்றாண்டில் வாழும் பரிசேயர்களும் இவ்வித கிரியையைத்தான் நடப்பிக்கிறார்கள்! இவர்கள் எதைச் செய்தாலும், அது 'ஜெபிப்பது' போன்ற புனிதமானதேயானாலும், அவைகள் **மனுஷரால் பாராட்டப்பட வேண்டும்** என்றே விரும்புகிறார்கள். இவர்கள் மிக அழகாகப் பரவசத்துடன் ஜெபிக்கக்கூடும். ஆனால் அவைகளை ஜனங்கள் காண வேண்டும் என்பதற்காகவே ஜெபிக்கிறார்கள்!

நேர்மை உள்ளம் கொண்ட விசுவாசிகள் யாவருமே, தாங்கள் அநேகம் தடவை இவ்விதம் 'தேவனைவிட, மனிதர்கள் தன் ஜெபத்தைக் கவனிக்கிறார்கள் என்ற உணர்வோடு' ஜெபித்ததை ஒத்துக் கொள்வார்கள்! நாம் பொது இடத்தில் ஜெபிக்கும்போது, நம் தனி ஜெபத்தில் நாம்

ஜெபித்ததைப்போலவே ஜெபிக்கவில்லை என்பதை உணர்ந்தவர்களாய் நம் ஆண்டவரிடம் அவைகளை அறிக்கை செய்ய வேண்டியதும் நமக்கு அவசியமாயிருக்கிறதே! ஒருவேளை நாம், **ஜனங்களைக் கவரும்படியான** வண்ணஜால வார்த்தைகளையும்; அல்லது வீரமிக்க வைராக்கிய வசனிப்புகளையும் கொண்டு பொது இடத்தில் ஜெபித்திருக்கக் கூடும்! மனுஷர் முன்பு இப்படியெல்லாம் ஜெபித்து விடாதபடி ஜாக்கிரதை கொண்டிருக்கவே, இயேசு நம்மை எச்சரித்திருக்கிறார். ஏனெனில், இவ்விதமான ஜெபங்கள் ஒருபோதும் தேவனிடம் போய் சேருவதேயில்லை!

உங்கள் பிரசங்கமோ; ஜீவியமோ; அல்லது ஜெபமோ ஆகியவற்றில் உருவாகும் மாய்மாலத்திலிருந்து உண்மையாகவே நீங்கள் விடுதலையாக விரும்புகிறீர்களா? அப்படியானால், "தேவனே! மனுஷர்கள் என்னைப் புகழ்வதைவிட நீர் என்னைப் புகழ்வதையே மேலாக விரும்பி நாட்டம் கொள்வதற்கு என்னில் உம்மைக் குறித்த அதிகமான தெய்வபயத்தைக் கொடுத்தருளும்" என கெஞ்சி ஜெபியுங்கள். நாம் இவ்விதமாய் தேவனுக்குப் பயப்படும் பயத்தை நம் வாழ்வில் கற்றுக்கொள்ளும்வரை, நம் ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும், மனுஷர்களுக்கு முன்பாக சதா நடிக்கிறவர்களாகவே நாம் காணப்படுவோம்.

எந்தப் பாவத்தையும்விட இயேசு இந்த 'மாய்மாலத்தையே' அதிகமாகக் கண்டித்தார்!

**பொய் தோற்றத்தைத் தரும்படி பாசாங்கு செய்யாதீர்கள்!**

ஆதி சபையில் நாம் வாசிக்கும் முதலாவது பாவம் மாய்மாலமே! அப்போஸ்தலர் 5-ம் அதிகாரத்தில் அனனியா, சப்பீராள் மூலம் இந்நிகழ்ச்சி நடந்ததாக வாசிக்கிறோம்.

அவர்களின் பாவம் என்ன?

அவர்கள் தங்கள் காணியாட்சியை விற்ற எல்லாப் பணத்தையும் தேவனுக்குக் கொடுக்கவில்லை என்பதா அவர்களின் பாவம்? இல்லை! அதல்ல, அவர்களின் பாவம்! பின் வேறெது அவர்களின் பாவமாயிருந்தது? நீங்கள் உங்கள் சொத்துக்களை ஒரு இலட்சம் ரூபாய்க்கு விற்றுவிட்டு அதில் ஐம்பதாயிரம் ரூபாய் மாத்திரமே தேவனுக்குக் கொடுக்கத் தீர்மானித்திருப்பீர்களென்றால் அது நிச்சயமாய் பாவமில்லை! இவ்விதம் நீங்கள் விற்ற பணத்தில் ஒரு ரூபாய் கூட தேவனுக்குக் கொடுக்காவிட்டாலும், அதுவும் பாவமில்லை! நீங்கள் எவ்வளவு தேவனுக்குக் கொடுக்க வேண்டும் எனத் தீர்மானிப்பது முழுக்க முழுக்க உங்களையே சார்ந்ததாகும். ஏனெனில், மனப்பூர்வமாய்! மகிழ்ச்சியுடன்! கொடுப்பவனிடத்திலேயே தேவன் பிரியமாயிருக்கிறார். நீங்கள் அவ்விதம் மனப்பூர்வமாய் மகிழ்ச்சியுடன் கொடுக்கவில்லையென்றால், நீங்கள் ஒன்றும் கொடுக்காமலிருப்பதே நல்லது. அவருக்கு உங்கள் பணம் தேவையில்லை என்பதை இன்று அறிந்து கொள்ளுங்கள்! இந்த

ஆண்டவருக்கு வெள்ளியும் பொன்னும் ஏராளம், ஏராளமாயிருக்கிறது!

பின் ஏன் அனனியா, சப்பீராள் மரித்தார்கள்? இங்கே கூறப்படும் காரணத்தைக் கேளுங்கள். அனனியா, அப்போஸ்தலருடைய பாதத்தில் கொண்டுவந்து வைத்த பணம், காணியாட்சியை விற்ற **முழு பணத்தைப் போல** பாவனை செய்தான்! தன் முகத்தில் பரிசுத்தக் களையோடும், பக்தி விநயத்தோடும் காணப்படும் இந்த அனனியாவைப் பாருங்கள்!? இவன் எந்த வித்தியாசமுமில்லாமல், தங்களைப் பூரணமாய் அர்ப்பணித்த மற்றவர்களைப்போலவே காணப்படுகிறான்! ஆம், அவன் நடிகன்.... ஓர் மாய்மாலக்காரன்!

ஆனால் பேதுருவோ ஓர் தேவமனிதன். அவன் ஏமாற்றப்பட முடியவில்லை. அனனியாவின் அர்ப்பணத்தில் காணப்பட்ட பொக்குத் தன்மையைக் காணும்படி தேவன் பேதுருவுக்குப் பகுத்தறியும் வல்லமையைக் கொடுத்தார். எனவே, பேதுரு, "அனனியாவே! பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" எனக் கேட்டான் (அப்.5:3). இங்கு, அனனியா எந்தப் பொய்யைக் கூறினான்? அவன் தன் வாயைக்கூட திறக்கவில்லையே!

அப்படியானால் அவன் பொய் சொன்னான் என்பது எப்படி பொருள்படும்? "**பொய்யாகத் தோற்றமளித்ததே**" பொய் சொல்லியதற்குப் பொருளாகும். நீங்கள் உங்கள் வாயைத் திறக்காமலேயே ஒரு பொய்தோற்றத்தைக் கொடுத்துவிட முடியும்!

இதைத்தான் அனனியா செய்தான். தானும் ஓர் முழு இருதயமான சீஷனே என மற்றவர்கள் புகழவேண்டுமென விரும்பினான். ஆனால் அவனோ 'உண்மையில்' முழு இருதயமான சீஷனல்ல!

அவன் தனக்காக கொஞ்சத்தை வைத்துக்கொண்டான். நாம் ஏற்கனவே பார்த்ததுபோல, அப்படியவன் தனக்கென வைத்துக் கொள்வது பாவம் இல்லைதான். ஆகிலும், எப்போது அது பாவம் இல்லையென்றால், அவன் பேதுருவிடம், "சகோதரன் பேதுருவே, நான் என் முழு காணியாட்சிகளையும் விற்றுவிட்டேன். ஆனால் நான் விற்ற எல்லாவற்றையும், மற்றவர்கள் கொடுத்ததுபோல கொடுத்துவிடத் தூண்டப்படவில்லை. இருப்பினும், இதோ அர்ப்பணத்தில் ஒரு பங்கை மாத்திரம் இங்கே வைக்கிறேன்!" எனக் கூறியிருப்பானென்றால், அது பாவம் இல்லை. அவன் மரித்திருக்கவும் மாட்டான். இன்னமும் சொல்வோமென்றால், அவன் ஓர் "நேர்மையாளனாய்" இருந்திருப்பான்! அவனின் நேர்மைக்காக, தேவனும் அவனை மெச்சியிருப்பார்!

ஆனால் அவனோ பாசாங்கு புரிந்தான்! அதுவே அவனுடைய பாவமாயிருந்தது. எனவே அவன் மரித்தான். சிறிதுநேரம் கழித்து அவனுடைய மனைவியும் வந்து, தன் பங்காக மிக நேர்த்தியாய் நடித்துவிட்டாள்! எல்லாவற்றையும் கொண்டுவந்து வைத்து விட்டது போல் அவளும் பாசாங்கு செய்தாள். எனவே அவளும் மரித்தாள்.

**கொஞ்சம் புளித்த மாவைப்போல்** ஆதி சபைக்குள் இந்த மாய்மாலம் பிரவேசித்தது! இந்த புளித்த மாவு உடனே அகற்றப்படாவிட்டால், சீக்கிரமே முழு சபையும் கறைபட்டுவிடும் என்பதை தேவன் அறிந்திருந்தார். எனவேதான் அவர் அவர்களை **உடனடியாக** மரித்து விழும்படி செய்தார்.

உங்கள் ஜீவியத்தின் **ஒவ்வொரு** பகுதியிலும் மாய்மாலத்தைக் குறித்து எச்சரிக்கையாயிராவிட்டால், உங்கள் ஜெப வாழ்க்கையில் காணும் மாய்மாலத்தை நீங்கள் ஒருக்காலும் ஜெயித்துவிட முடியவே முடியாது. மேலும், மனுஷரின் பாராட்டைப் பெறுவதற்காக நீங்கள் ஜெபிப்பீர்களென்றால், "நீங்கள் உங்கள் பலனை அடைந்து தீர்ந்த தென்றும்" இயேசு கூறினார் (மத்.6:2). உங்களுக்கு இருந்த வாஞ்சையெல்லாம், உங்கள் ஜெபத்தின் மூலமாக தேவன் மகிமைப்பட வேண்டும் என்றில்லாமல் "நீங்கள் எவ்வளவு அருமையாக ஜெபிக்கிறீர்கள்!" என்பதை ஜனங்கள் அறிந்து கொள்வதற்காகவே ஜெபித்தீர்கள். உங்கள் விருப்பத்தின்படியே **அந்த பலனையும்** பெற்று விடுவீர்கள் .... இப்போது திருப்திதானே!

ஆனால் அந்தோ! உங்களுக்கு அவைகள் மட்டும்தான் கிடைக்கும். அதைத்தானே நீங்கள் விரும்பினீர்கள்.... அதை நீங்கள் பெற்று விடுவீர்கள்!

கிறிஸ்தவ ஜீவியத்திற்கே இது ஓர் முக்கியமான சூத்திரமாகும். அதாவது, நம் உதடுகளால் கேட்பதை நாம் ஒருபோதும் பெற்றிட மாட்டோம் ..... நம் இருதயத்தில் நாம் ஆழமாய் வாஞ்சித்துக் கேட்பது எதுவோ அதைப் பெற்றுவிடுவோம், இது உறுதி! தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள். ஆம், நீங்கள் எதை நிஜமாகவே வாஞ்சித்துத் தேடினீர்களோ, அதைக் கண்டடைந்து விடுவீர்கள்!

ஓர் ஆடையைப்போல உள்ள நம்முடைய எல்லா வெளித் தோற்றமும் உரிந்து களைந்து போட்டவர்களாகவே நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கப்போகிறோம். இனியும் ஒருவன், அந்நாளில் ஓர் நடிப்பவனாக இருந்துவிட முடியாது. அந்நாளில் ஒவ்வொருவனும் 'நாம் உண்மையில் எவ்விதம் இருக்கிறோமோ' அவ்விதமே காணப்படுவோம்! எனவேதான் இன்று நாம் மிகுந்த ஜாக்கிரதையோடு நடந்திட வேண்டுமென வேதாகமம் எச்சரிக்கிறது. இல்லாவிட்டால், நாம் அனைவரும் ஒருநாள் நம்முடைய வெளித் தோற்றம் முழுவதும் உரிந்து போடப்பட்டு, நிர்வாணமாய் வெட்கமடைய வேண்டிய நிலைக்குள்ளாவோம்!

1 யோவான் 2:28, "பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்". ஆம், இன்று இப்பூமியில் தங்கள் ஜீவியத்தை நடித்து ஜீவிப்பவர்கள், அன்று அந்நாளில் வெட்கமடைவார்கள்!

இவைகளையெல்லாம் "விசுவாசிகளுக்கே" எழுதுகிறேன். "மலைப்பிரசங்கம்" யாருக்குப் பிரசங்கிக்கப்பட்டது தெரியுமா? மத்தேயு 5:1,2 வசனங்களை கவனித்து வாசியுங்கள். அங்கே மலைப் பிரசங்கத்தை தன் சீஷர்களுக்கே இயேசு உபதேசித்தார் என்பதைக் கண்டுகொள்வீர்கள். அவர் சீஷர்களைப் பார்த்துதான், "மனுஷர் காணவேண்டுமென உங்கள் நீதியைச் செய்யாதிருங்கள்" என எச்சரித்தார் (மத்.6:1). மேலும் அவர், சீஷர்களிடம்தான் "மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்றும் கூறினார் (லூக்கா 12:1).

**நெஞ்சில் நேர்மையின் ஒளி வேண்டும்!**

சத்திய வேதம் 1 யோவான் 1:7 நாம் ஒளியில் நடக்காவிட்டால் தேவனோடு ஐக்கியம்கொள்ள முடியாது என ஆணித்தரமாகக் கூறுகிறது. நாம் ஒவ்வொருவரும் ஒளியில் நடந்துவிட்டால், நாம் நிச்சயமாக எதையும் மறைத்துவைத்திட முடியாது! ஏனெனில் ஒளியானது சகலத்தையும் வெளியரங்கத்திற்குக் கொண்டுவந்துவிடும். தன் ஜீவியத்தில் மறைத்து வைக்கும்படியானவைகள் உள்ளவன் மாத்திரமே இருளில் நடப்பான். நம்முடைய ஜீவியம் ஓர் திறந்த புத்தகத்தைப் போலிருக்க வேண்டும்! அவ்வாறிருக்கும்போது மாத்திரமே, நம் தனிப்பட்ட ஜீவியத்தையும்; நம் வரவு-செலவு கணக்குப் புத்தகத்தையும்; மற்ற வேறு எதையும் வந்து சோதிக்கும்படி நாம் பிறரை அழைத்திட முடியும். நாம் ஒன்றையும் மறைத்திட விரும்பவே மாட்டோம். இதற்குப் பொருள், நாம் பூரணராகி விட்டோம் என்பதல்ல. மாறாக, இதற்குப் பொருள் நாம் நேர்மையாக நடந்து கொள்கிறோம் என்பதுதான்.

நம் எல்லோரிடமும் தேவன் முதலாவதாக எதிர்பார்ப்பதெல்லாம் நூற்றுக்கு நூறு நேர்மையே! நாம் மாத்திரம் நேர்மையாய் இருந்திட விருப்பம் கொண்டுவிட்டால், ஏராளமான நம்முடைய பிரச்சனைகள் வெகு விரைவில் தீர்ந்துவிடும்.

**ஓர் அஸ்திபார சட்டமாய் விளங்கும், "தேவனுக்கும் மனிதனுக்கும் முன்பாக நேர்மையாய் இருத்தல்" என்பதின்படி நாம் ஜீவித்துவிட்டால், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் குதித்து எழும்பி விரைவாய் வளர்ச்சியடைந்து விடுவோம்!**

ஆனால் இந்த நேர்மைக்காக ஓர் யுத்தம் செய்ய வேண்டியிருப் பதையும் நீங்கள் கண்டுகொள்வீர்கள். நீங்கள், "நான் இந்த புத்திமதியை மிகுந்த ஜாக்கிரதையோடு கைக்கொள்ளப்போகிறேன். இன்றிலிருந்து நான் மிக நேர்மையாக நடந்து கொள்வேன்" எனக் கூறலாம். ஆனால் ஒருவாரம் முடிவதற்கு முன்பே நீங்கள் மறுபடியும் ஓர் நடிப்பவனாக மாறுவதற்கு சோதிக்கப்படுவதையும், தேவனுடைய புகழ்ச்சியைவிட மனுஷருடைய புகழ்ச்சியையே மறுபடியும் தேடுவதற்குச் சோதிக்கப் படுவதையும் கண்டுகொள்வீர்கள். காரியம் இப்படியாய் இருப்பதால்,

"நான் தொடர்ச்சியாகப் போராடி, ஜெயித்தே தீருவேன்" என்ற உறுதியான தீர்மானத்தை நீங்கள் எடுக்கவேண்டியது மிகவும் அவசியம். இன்று எண்ணற்ற கிறிஸ்தவர்கள் மறுபடியும் பிறந்து இருபது, முப்பது அல்லது நாற்பது வருடங்களாகியும் இந்த அடிப்படையான "நேர்மை" என்ற பாடத்தைக் கற்றுக்கொள்ளாததால் இன்னமும் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளராமல் இருப்பதைக் காண்பது தேவனுக்கு மிகுந்த துக்கமேயாகும். நம் ஜீவியத்தில் மாய்மாலம் காணப்பட்டால், ஒருக்காலும் ஆவிக்குரிய முன்னேற்றம் காணமுடியாது என்பதை அறிந்து கொள்ளுங்கள். இதனிமித்தமாய் உங்கள் ஜெபங்களும் ஒருக்காலும் கேட்கப்படாது. நீங்கள் ஒருவேளை "முழு இரவு ஜெபம்" வைத்து ஜெபிக்கலாம். ஆனால் நீங்கள் உங்கள் நேரத்தைத்தான் வீணடித்தவர்களாய் இருப்பீர்கள். ஆம், நம்முடைய மாய்மாலத்தை நாம் களைந்தெறியாவிடில், நம் ஜெபத்தை ஆண்டவர் ஒருபோதும் கேட்டிடமாட்டார்!

நாம் தேவனுக்கு முன்பாக எவ்விதம் காணப்படுகிறோமோ அதுவே நம்முடைய உண்மையான ஆவிக்குரிய மதிப்பு என்பதையும், இதைத் தவிர வேறு எதுவும் செல்லுபடியாகாது என்பதையும், நாம் யாவரும் தெளிவாக உணர்ந்திருக்க வேண்டும். நமக்கு எவ்வளவு வேத அறிவு உள்ளது? நாம் எவ்வளவு நேரம் ஜெபிக்கிறோம்? எத்தனை ஆவிக்குரிய கூட்டங்களுக்குச் செல்கிறோம்? நம்முடைய மூப்பர்கள் மற்றும் சபையில் உள்ளவர்கள் நம்மைக் குறித்து என்ன எண்ணுகிறார்கள்? என்பதை வைத்து நம் ஆவிக்குரிய நிலையை நாம் கணக்கிடவே முடியாது. இதற்கு மாறாக, "என் ஜீவியத்தின் ஒவ்வொரு எல்கைப் பகுதியையும் உற்றுப்பார்க்கிற தேவன் என்னைக் குறித்து என்ன எண்ணுகிறார்?" என்ற கேள்வியை உங்களுக்கு நீங்களே கேட்டுப் பாருங்கள். இக்கேள்விக்கு நீங்கள் பெறும் பதில் மாத்திரமே உங்கள் உண்மையான ஆவிக்குரிய நிலையை நிர்ணயம் பண்ணும் அளவு கோலாகும். இவ்விதமாய் உங்களை நீங்களே கேட்டுக் கொள்வதும்... அதற்கு நீங்கள் பதில் பெறுவதும், நாள்தோறும் தொடரட்டும்! இல்லாவிட்டால் நீங்கள் மீண்டும் ஓர் நடிப்பவனாய் மாறும் அபாயத்திற்குள்ளாவதைக் காண்பீர்கள்.

இயேசு நாத்தான்வேலைப் பார்த்து, "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" எனக் கூறிய வார்த்தைகள் என்னைக் கவர்ந்த மிக அருமையான வார்த்தைகளாகும் (யோவான் 1:47). இதே பொன்னான வார்த்தைகளை இயேசு என்னையும் உங்களையும் வைத்து கூறிவிடுவாரென்றால் அது எத்தனை பெரிய நற்சான்றாய் இருக்கும்! இந்த, அவரளிக்கும் நற்சான்றுக்கு வேறு எதுவுமே இணையாகிட முடியாது! நாத்தான்வேல் ஒன்றும் பூரண புருஷனல்ல. அவன் பூரணமற்றவன்தான். ஆகிலும் அவனோ, தன் பூரணமற்றத் தன்மையைக் குறித்து நேர்மையுள்ளவனாய் இருந்தான்! தனக்குள் இல்லாத ஒன்றை இருப்பதுபோல் அவன் பாசாங்கு செய்து நடித்திடவில்லை. இந்த

இடத்தில்தான் நாத்தான்வேல், அனனியா சப்பீராளுக்கு முற்றிலும் மாறுபட்டவனாய் காணப்படுகிறான்!

**அலப்பலற்ற ஜெபம் வேண்டும்!**

இரண்டாவதாக இயேசு எச்சரித்துக் கூறியது யாதெனில், நாம் அஞ்ஞானிகளைப் போல அர்த்தமில்லாமல் ஒரே வாக்கியத்தைத் திரும்பத் திரும்பக் கூறி ஜெபிக்கக்கூடாது என்ற எச்சரிப்பேயாகும்.

நாம் எத்தனை வார்த்தைகளைக் கூறி ஜெபிக்கிறோம் என்பதை தேவன் ஒருபோதும் காண்பதில்லை. அவர் காண்பதெல்லாம் நம் ஜெபத்தோடு இணைந்துவரும் இருதயத்தின் வாஞ்சையைத்தான்! வாஞ்சையோடுகூடிய இருதயத்தின் ஏக்கமே உண்மை ஜெபமாகும். இந்த வாஞ்சையின் ஏக்கம்தான் தேவனை கிட்டிச் சேர்ந்து பதிலையும் பெற்றுத் தருகிறது.

நீங்கள் உண்மையாகவே பொருளை உணர்ந்து ஜெபிக்கும் பட்சத்தில், திரும்பத் திரும்ப ஒரே வார்த்தையைக் கூறினாலும் அது சரியே! கெத்செமனே தோட்டத்தில் ஒரே ஜெபத்தை இயேசு மூன்று தடவை ஜெபித்தார் (மத். 26:44). ஆனால் அவ்விதம் அவர் திரும்பத் திரும்ப ஜெபித்த வார்த்தைகள் அர்த்தமற்ற "கிளிப்பிள்ளையின்" ஜெபமல்ல! அவர் ஜெபித்த ஒவ்வொரு நேரமும், வார்த்தைகள் இருதயத்தின் பாரமாகப் பொங்கி வந்தது. ஒருநாளில் நீங்கள் ஒரே வார்த்தையைக் கூறி பத்து தடவைகூட ஜெபிக்கலாம். ஆனால், அந்த ஒவ்வொரு தடவையும் நீங்கள் உங்கள் இருதயத்திலிருந்தே உண்மையாக ஜெபித்திட வேண்டும். அப்படியானால் தேவன் அந்த ஜெபங்களை நிச்சயமாய் கேட்பார்.

இன்று கிறிஸ்தவர்கள் வாரத்தின் ஆறு நாட்களைவிட ஞாயிற்றுக் கிழமைகளில்தான் தேவனிடம் ஏராளமான பொய்களைக் கூறும் குற்றத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஏன் தெரியுமா? ஏனெனில் இவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில்தான், "என்னை முற்றும் ஒப்புவித்தேன் இயேசுவே!" என்றும் "பொன்னும் வெள்ளியும் உமக்கே, அதில் ஒரு சல்லியும் எனக்கல்ல!" போன்ற வாசகங்கள் கொண்ட பாமாலை கீர்த்தனைகளை மிகவும் துணிந்து தேவனிடம் கூறி வாய் இனிக்கப் பாடுகிறார்கள்.

பாடல் புத்தகத்தில் மேற்கூறிய வார்த்தைகள் இருப்பதால் அதை நீங்கள் பாடுவதில் தவறில்லை. ஆனால் நீங்களோ அவ்வார்த்தைகளின் அர்த்தத்தை உணர்ந்து பாடவில்லையே! இவ்வித பாமாலைகளைப் பாடும் நீங்கள், "நான் தேவனுடன் நேருக்கு நேராய் பேசுகிறேன்" என்பதையும் உணரவில்லையே! நீங்கள் ஒருவேளை பாடலின் வார்த்தை களைவிட "இராகத்திற்கே" முக்கிய கவனம் செலுத்தியிருக்கக் கூடும்! இவையெல்லாம் என்ன? நீங்கள் தேவனிடம் பொய் சொல்லுகிறீர்கள்.

“மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்” (மத்தேயு 12:36) என்றல்லவா இயேசு எச்சரித்துக் கூறினார். ஆனால் இன்றோ, தேவனுக்குரிய பயம் சிறிதும் இல்லாமல், இவ்வித ஆண்டவரின் கண்டிப்பான எச்சரிக்கையை உதாசீனம் செய்யும் கிறிஸ்தவ சந்ததியின் நடுவிலேயே நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்!

திரும்பத் திரும்பக் கூறும் வீணான ஜெப வார்த்தைகள், அஞ்ஞானிகள் தங்கள் தேவர்களுக்கு முன்பாக வந்து, தாங்கள் அர்த்தம் கொள்ளாத அக்கறையற்ற வார்த்தைகளைக் கூறி ஜெபிப்பதற்கே அடையாளமாகும்! இவ்வித போக்கு நம்முடைய ஜெபத்திலோ அல்லது நாம் பாடுவதிலேயோ ஒருபோதும் காணப்படவே கூடாது!

**‘நீண்ட ஜெபமே கேட்கப்படும்’ என்ற நம்பிக்கையை விட்டு விடுங்கள் :**

அதிக வசனிப்போடு கூடிய ஓர் நீண்ட ஜெபமே கேட்கப்படும் என புறஜாதியார்கள் நினைப்பதாக இயேசு மேலும் கூறினார்.

இன்றும், அநேக விசுவாசிகள் தாங்கள் ‘முழு இரவு ஜெபக் கூட்டம்’ வைத்து நீண்ட நேரம் ஜெபித்துவிட்டால், அதற்கு தேவன் எப்படியும் பதில் கொடுத்துவிடுவார் என நினைக்கிறார்கள். ஆனால் இவ்வித ஜெபமோ அஞ்ஞானிகள் பின்பற்றிய வழிமுறையே ஆகும்.

கர்மேல் பர்வதத்தின் நிகழ்ச்சியை நாம் யாவரும் அறிவோம். அங்கே ஒரு பக்கம் பாகாலின் தீர்க்கதரிசிகளாகிய 450 பேர் நின்று கொண்டிருந்தார்கள். மறுபக்கம் எலியா நின்று கொண்டிருந்தான். யாருடைய தெய்வம் உண்மையான தெய்வம் எனக் கண்டு கொள்ளும்படி இவர்கள் இருவருமே வானத்திலிருந்து அக்கினி கொண்டு வருவதற்கு முயற்சித்தார்கள். பாகாலின் தீர்க்கதரிசிகள் ஒரு நீண்ட ஜெபக் கூட்டத்தை ஒழுங்கு செய்தார்கள். அவர்கள் ஜெபித்தார்கள்... ஜெபித்தார்கள்... ஜெபித்துக் கொண்டேயிருந்தார்கள்! பின்பு குதித்தார்கள்... நடனமாடினார்கள்... கூக்குரலிட்டார்கள்! ஆனால் அக்கினியோ இறங்கி வரவில்லை. இருதயத்தை ஆராய்ந்து பார்க்கும் தேவன் இவர்களின் உணர்ச்சிப் பெருக்கத்தைக் கண்டோ அல்லது அவர்களின் பலத்த சத்தத்தைக் கேட்டோ கொஞ்சமும் ஈர்க்கப்படவே யில்லை (1 இராஜா.18:20-29).

இப்போது எலியா ஜெபித்தான்! அவனின் ஜெபம் ஒரு நிமிடத்திற்கும் குறைவாகவே இருந்தது! ஆனால்.... வானத்திலிருந்து அக்கினி இறங்கியது! இதுதான் உண்மையான பரிசோதனை. நீங்கள் ஒரு நிமிடம் ஜெபித்தீர்களா, அல்லது முழு இரவும் ஜெபித்தீர்களா என்பதல்ல கேள்வி. மாறாக, தேவன் உங்கள் ஜெபத்திற்குப் பதில் கொடுத்தாரா அல்லது இல்லையா என்பதுதான் அந்த பரிசோதனையாகும்.

நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாய்

*இருக்கிறது என வாசிக்கிறோம் (யாக்கோபு 5:16). இந்த திருவசனத்தைக் குறிப்பிட்ட யாக்கோபு, இதைத் தொடர்புபடுத்தி எலியாவையே மாதிரியாக வைத்து எழுதினார். ஆம், பல மணி நேரங்கள் எலியா கூக்குரலிட்டதற்காக அவனின் ஜெபம் கேட்கப்படாமல், அவன் ஒரு நீதிமானாய் இருந்தபடியால்தான் அவனின் ஜெபம் கேட்கப்பட்டது!*

*தன் சீஷர்கள் எப்படி ஜெபிக்க வேண்டும் எனப் போதிப்பதற்கு முன்பாக, நாம் மேற்கண்ட அடிப்படையான பாடங்களையே இயேசு முதலாவதாக அவர்களுக்குக் கற்பித்தார். ஆம், முதலாவது "நாம் எவ்விதம் ஜெபிக்கக் கூடாது" என கற்றுக் கொள்ளாவிட்டால், "எவ்விதம் சரியாக ஜெபிக்க வேண்டும்" எனக் கற்றுக்கொள்வது ஒருக்காலும் சாத்தியமாகாது!*

*(இதுகாறும் நான் கூறியவைகளை நீங்கள் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக கீழ்காணும் கடைசிப் பாராவைக் குறிப்பிட வேண்டியது எனக்கு அவசியமாகிறது.)*

*ஓர் முழு இரவு ஜெபம் நடத்துவதில் எந்த தவறும் இல்லை. ஓர் சமயம், இயேசு கூட இராமுழுவதும் ஜெபித்தார் (லூக்கா 6:12). அதிகமாய் ஜெபிப்பதை இயேசு ஒருபோதும் கண்டித்ததில்லை. ஆனால், அதிக வசனிப்போடு ஜெபித்தல்* (Many Words) *என்பதற்கும் 'அதிகமாய் ஜெபித்தல்'* (Much Praying) *என்பதற்கும் ஏராளமான வித்தியாசங்கள் இருக்கிறது. நம்முடைய ஜெபம் அதிக வசனிப்போடு மாத்திரமே இருக்குமென்றால் அது வீணாக்கப்படும் நேரமே ஆகும்! ஜெபத்திற்கு ஓர் முழு இரவையும் செலவழித்து இயேசு வல்லமையாய் ஜெபிக்க முடிந்ததற்கு காரணம், அவரின் இருதயம் 'செம்மையாகவும்' 'தேவனே தந்தருளிய ஓர் பாரத்தை' அவர் பெற்றிருந்ததுமேயாகும்.*

*இங்கு சொல்லப்பட்ட சத்தியத்தின் சாராம்சம் இதுதான்: ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுப்பதையும் அல்லது பதில் கொடுக்காததையும் நிர்ணயிப்பது, நீண்ட நேரம் செலவழித்து ஜெபிக்கும் ஜெபமல்ல! மாறாக, அந்த ஜெபத்தை ஜெபிக்கும் மனிதனின் செம்மையான வாழ்க்கையை வைத்தே நிர்ணயிக்கப்படுகிறது!!*



# 2

## தேவாதி தேவன் நம் சொந்த தகப்பன்

### “பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே”

பொதுவாக சிறு குழந்தைகள், “அன்புள்ள இயேசுஸ்வாமி” என இயேசுவை நோக்கி ஜெபிப்பதுண்டு! இதில் தவறொன்றுமில்லை. ஆனால், எப்படி ஜெபிக்கவேண்டும்? என இயேசு தன் சீஷர்களுக்குக் கற்றுத்தந்த ஒரே பாடமாகிய அந்த ஜெபத்தில், அவர்கள் தங்கள் ஜெபத்தை “தேவனாகிய பிதாவினிடத்திலேயே” ஜெபிக்கும்படி கற்றுத் தந்தார். இதை நாம் எப்பொழுதும் நினைவிற் கொள்ள வேண்டும்: நாம் ஆவியினால் (IN) குமாரன் மூலமாகப் (THROUGH) பிதாவினிடத்தில் (TO) ஜெபிக்கிறோம்!

இருப்பினும், யார் வேண்டுமானாலும் தேவனைப் பிதா என அழைத்துவிட முடியாது. இந்த பூமியில் நாம் யார் மூலமாகப் பிறந்தோமோ, அவரையே நாம் பிதா என அழைத்திட முடியும். இதையே, நாம் தேவனிடத்தில் ஜெபிக்கும்பொழுதெல்லாம் நினைவிற் கொள்ள வேண்டும். ஒருவன் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவைத் தன் வாழ்வின் ஆண்டவராக இருக்கும்படி அவருக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து, தேவனுடைய பிள்ளையாக மறுபடியும் பிறப்பவனே, தேவனை நோக்கி “பிதா” அல்லது “தகப்பனே” என அழைத்திட முடியும்!

**தேவன் நமக்குப் பிதாவாய் இருப்பதே புதிய ஏற்பாட்டின் சிலாக்கியம்!**

இஸ்ரவேலர்கள் தேவனைத் தங்கள் பிதா என ஒருபோதும் அழைக்க முடியவில்லை. “பிதா” என்ற பெயரை முதன் முதலாக இயேசுதான் அறிமுகம் செய்தார். பரமண்டலத்திலிருக்கும் பிதாவிடம் இயேசு தொடர்பு கொண்டபோதெல்லாம் பிதா என்ற பெயரையே தொடர்ச்சியாக உபயோகித்தார். தேவனை “**என் பிதா**” என அழைப்பது சொல்லிமுடியா ஒப்பில்லா சிலாக்கியமாகும். இந்த சிலாக்கியத்தை இன்று அநேகர் உணராமல் இருப்பது துரதிருஷ்டமேயாகும்!

பழைய ஏற்பாட்டில், யூதர்களுக்குத் தேவன் **பரிசுத்தத்தைக்** கற்றுத் தரும்படியாக, ஆலயத்தில் தான் வாசமாயிருந்த மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு முன்பாக அவர்கள் கிட்டிச் சேர முடியாதபடி ஓர் திரையை வைத்தார். அவர் வாசமாயிருந்த மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் ஒரு மனிதனும் பிரவேசிக்கவே முடியாது! மகா பிரதான ஆசாரியன் மாத்திரமே வருடத்திற்கு ஒருமுறை அவரின் ஸ்தலத்திற்குள்

*பிரவேசித்திட முடியும்! நீங்கள் 2,500 வருடங்களுக்கு முன்பாக இருந்த யூதர்களிடம் சென்று, "எல்லோரும் கர்த்தருடைய சமூகத்திற்குச் செல்லும்படியான ஓர் வழியைத் தேவன் திறக்கப்போகிறார்" எனக் கூறுவீர்களென்றால், அதற்கு அவர்கள் என்ன சொல்லுவார்கள் தெரியுமா? அது ஒருக்காலும் சாத்தியமாகாது! என்றே கூறியிருப்பார்கள்.*

*ஆனால் இன்றோ, புதிய உடன்படிக்கையின் கீழ் வாழும் நமக்கு இந்த ஒப்பில்லா சிலாக்கியம் கையளிக்கப்பட்டுவிட்டதே! ஆம், திரை இரண்டாகக் கிழிக்கப்பட்டுவிட்டது! இப்போது நாம் பிதாவின் சமூகத்திற்குள் பிரவேசிக்கும் தைரியத்தையும் பெற்றுவிட்டோம்! அவரை 'அப்பா' 'பிதாவே' என அழைக்கவும் செய்கிறோம்! புதிய உடன்படிக்கையின் இந்த ஒப்பில்லா சிலாக்கியத்தை எண்ணி எண்ணி வியக்க வேண்டுமென்றால் நீங்கள் பழைய ஏற்பாட்டை நன்றாக வாசித்திருக்க வேண்டும்!?*

*கெட்டகுமாரனின் உவமையில், நாம் தேவனை ஓர் தகப்பனின் இருதயமுடையவராகக் காண்பது மிகுந்த வியப்பிற்குரியதாகும். அந்த கெட்டகுமாரன் தகப்பனின் ஆஸ்தியை வீணாக்கி, தன் தகப்பனின் பெயருக்கு அபகீர்த்தி உண்டுபண்ணிவிட்டு, மீண்டுமாக அவரிடம் திரும்பினான். அவனைக் கண்ட மாத்திரத்தில் அந்த தகப்பன் உடனடியாக ஓடிச்சென்று அவனைத் தழுவிக்கொண்டான். இங்கு தேவனைப் பிதாவாகச் சித்தரிக்கும் காட்சியை உங்களால் காண முடிகின்றதா? முழு வேதாகமத்திலும், இந்த ஒரு இடத்தில்தான் தேவன் ஓடிச்சென்று, மனந்திரும்பும் ஒரு பாவியைத் தழுவிக்கொள்ளும் காட்சியை நாம் காண்கிறோம்!! (லூக்கா 15:20).*

*இந்தக் காட்சிக்கு ஒப்பாகவே இயேசு எப்போதும் தேவனை ஜனங்களுக்கு முன்பாக உயர்த்திக் காண்பித்தார். ஜனங்களின் மனதில் வேதபாரகர்களும், பரிசேயர்களும் புகட்டியிருந்த தேவனைக் குறித்த தவறான அபிப்ராயத்தை அழித்துவிடவே இயேசு தீவிரமாய் செயல்பட்டார். இயேசு உயிர்த்தெழுந்தவுடன், கல்லறையண்டையில் நின்றுகொண்டிருந்த மகதலேனா மரியாளைச் சந்தித்து, அவளிடம் "நான் என் பிதாவினிடத்திற்கும்* **உங்கள் பிதாவினிடத்திற்கும்** *ஏறிப்போகிறேன்" எனக் கூறினார் (யோவான் 20:17). கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பிறகுதான், அவருடைய சீஷர்கள் ஒருபோதும் இருந்திராத அளவு தேவனோடு நெருங்கிய ஐக்கியத்திற்குள் வந்தார்கள். இப்போது அவர்கள், தேவனைத் தங்கள்* **சொந்தத் தகப்பனாக** *அழைத்திட முடிந்தது. ஓர் குழந்தை தன் தகப்பனின் மடியில் உட்கார்வதற்கொப்பாக, இன்று ஒருவன் தேவனிடம் நெருங்கிய ஐக்கியம் கொண்டிட முடியும்!*

**அவர், அன்புள்ள தகப்பன்!**

*இன்று அநேகர் பிதாவாகிய தேவனை ஓர் மிகுந்த கண்டிப்புள்ளவராகவும்; இயேசு மாத்திரமே தங்களை நேசிப்பதாகவும் தவறாக*

*அபிப்ராயம் கொண்டிருக்கிறார்கள். சத்தியத்தை சாத்தான், ஜனங்களுக்குள் எவ்வளவாய் திரித்து வழங்கியிருக்கிறான் என்பதற்கு இது ஒரு சான்றாகும். நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கும்படி இயேசுவை அனுப்பியதே பிதாவினுடைய அன்பு தான்! இயேசு சீஷர்களுக்கு கூறும்போது, "பிதா தாமே உங்களை சிநேகிக்கிறார்!" எனச் சொன்னார். மேலும் அவர் சீஷர்களிடம் கூறும்பொழுது,* **"உங்கள் பரமபிதா"** *ஆகாயத்துப்பறவைகளைப் போஷித்து, காட்டுப் புஷ்பங்களை உடுத்துவிப்பாரென்றால், உங்களை பராமரிப்பது அதிக நிச்சயமல்லவா! எனக் கூறினார். தொடர்ந்து அவர் கூறும்போது, "உங்களின் பரமபிதா உங்கள் எல்லாத் தேவைகளையும் அறிந்திருக்கிறபடியால், நீங்கள் ஒன்றிற்கும் கவலைப்படாதீர்கள்" எனவும் கூறினார் (மத்.6:26-34). மேலும் அவர் தன் சீஷர்களிடம், "இந்த உலகத்தகப்பன் தன் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா, நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" என்றும் கூறினார் (மத்.7:11).*

*"இதெல்லாம் என்ன? சாதாரண அற்பக் காரியங்கள்தானே!" என நீங்கள் கூறலாம். ஆனால் நீங்கள் தேவனிடம் ஜெபிக்கும்பொழுது, அவர் உங்கள் வேண்டுதல்களைக் கேட்டுப் பதில் தருவாரென நீங்கள் உண்மையாகவே விசுவாசிக்காமலிருந்த எத்தனையோ நேரங்களை எண்ணிப்பாருங்கள். நீங்கள் ஏன் அவ்விதம் விசுவாசிக்கவில்லை? ஏனெனில், அவர் உங்கள் மீது வைத்திருக்கும் பட்சமும் பாசமுமான* **தகப்பனுடைய அன்பை** *திட்டவட்டமாக உங்கள் கண்கள் காணாததினாலேயே நீங்கள் விசுவாசிக்கவில்லை. இவ்விதமாய், நம்முடைய அவிசுவாசத்தினால் நாம் தேவனை மட்டுப்படுத்தி அவரைத் தூர நிற்க வைத்துவிடுகிறோம். நீங்கள் ஜெபிக்கும்பொழுது, "நான், என் ஜெபத்தைக் கேட்க ஆவலோடிருக்கும், என் மீது அக்கறை கொண்ட ஓர் அன்பின் தகப்பனிடம் ஜெபிக்கிறேன்" என உண்மையாகவே விசுவாசிப்பதுண்டா? இன்று அநேகர், தாங்கள் முதிர்ச்சியடைந்த ஓர் பரிசுத்தவானாய் 'மாறிய பிறகுதான்' தேவன் தங்களின் ஜெபத்தைக் கேட்பார் என எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்! நம் பூமிக்குரிய தகப்பனிடத்தில் இந்தக் காரியம் எப்படியாய் இருக்கிறது? அத்தகப்பனுக்கு அநேகம் பிள்ளைகள் இருப்பார்களென்றால், தன் மூன்று வயது மகளைவிட, இருபது வயது மகனுக்குத்தான் அதிகமாய் செவி கொடுப்பாரோ? அத்தகப்பன் தன் சிறு மகளைப் பார்த்து, "என்னோடு பேசுவதற்கு நீ மிகவும் சின்னவள்! நீ சொல்வதை நான் கவனிக்க முடியாது!" எனக் கூறிடுவாரோ? நிச்சயமாய் இல்லை! நாம் உண்மை பூர்வமாய் கூறுவோமென்றால், இவ்வுலகத்தின் ஓர் தகப்பன், தன் மூத்த பிள்ளை கூறுவதைக் கவனிப்பதைவிட, தன் சின்னஞ்சிறு இளைய பிள்ளை கூறுவதைக் கவனித்திடவே மிகுந்த ஆர்வம் காட்டுவார்! இதைப்போலவேதான் தேவனிடமும் சம்பவிக்கிறது!*

அவர் அன்போடு, "சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை (பிதாவாக) அறிவார்கள்" எனக் கூறினார் (எபி.8:11). அவர் "**சிறியவனை**" முதலாவதாக குறிப்பிட்டதைக் கவனித்தீர்களா!

ஒருவேளை நீங்கள், நேற்றுதான் மறுபடியும் பிறந்தவராக இருந்தாலும், நீங்களும் தேவனைத் தைரியத்தோடு கிட்டிச் சேர்ந்து, "ஓ தேவனே, நீர் என் தகப்பன்! நான் உம்முடைய பிள்ளை! உம்மோடு பேசி உறவாடும் உரிமை எனக்கும் உண்டே!" எனக் கூறிடலாம். தேவனிடம் ஜெபிக்கும்பொழுது **இவ்விதமே** அவரைக் கிட்டிச் சேரும்படி இயேசு சீஷர்களிடம் கூறினார்.

நாம் ஜெபிக்கும் ஒவ்வொரு சமயமும், நம்மில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு நம்மை நேசிக்கும் பிதாவாகிய தேவனைக் கிட்டிச் சேருகிறோம் என உணர்ந்தே ஜெபித்திட வேண்டும். அப்போது மாத்திரமே நம்முடைய விசுவாசம் வர்த்திக்கப்பண்ணப்படும். அவ்வித விசுவாசமில்லாமல் நாம் ஜெபிப்பதில் ஒரு பிரயோஜனமுமில்லை!

நம் தேவன் மிகவும் நல்ல தேவன். அவர் எப்போதுமே தன் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுப்பதில் பிரியம் கொள்கிறார்! சத்திய வேதம், சங்கீதம் 84:11-ல் கூறியிருப்பதை வாசித்திருக்கிறீர்களா? "உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு **நன்மை** வழங்காதிரார்". அதாவது, உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு எந்த ஒரு நன்மையானவைகளையும் அவர் ஒளித்துக்கொள்ள மாட்டார் என்பதே இதன் பொருளாகும். மேலும் சங்கீதம் 37:4-ல், "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்" என்றும் வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டில் காணும் இவ்வித வாக்கு தத்தங்களையெல்லாம் புதிய ஏற்பாட்டில் இயேசு அங்கீகரித்து உறுதிப் படுத்தியது மாத்திரமல்லாமல், இன்னும் ஏராளமான வாக்குதத்தங் களோடு அவைகளை விசாலப்படுத்தியும் இருக்கிறார்!

நாம் தேவனை, நம்முடைய **அன்புள்ள தகப்பனாக** மனதார உணர்ந்து அறிந்திருக்க வேண்டும். இதுவே நம்முடைய விசுவாசத்திற்கு அடிப் படையான அஸ்திபாரமாகும்.

**நம் தேவன், பரிசுத்தமுள்ள தேவன்!**

நாம் தேவனை "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" என்றே கூப்பிட்டு அழைக்க வேண்டும். ஆம், அவர் நம்முடைய பிதா மாத்திரமல்ல, அவர் சர்வ வல்லமையுள்ள தேவன்! நாம் ஜெபத்தில் அவரைக் கிட்டிச் சேரும்போது **இந்த இரு உண்மைகளையும்** மனதில் வைத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஆம், நாம் அவரை பயபக்தியோடு அண்டிச் சேருகிறோம். ஏனெனில், "நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே!" (எபி.12:29).

இன்று ஏராளமான கிறிஸ்தவர்கள், தேவனைத் தங்கள்

"தாத்தாவாகவே" (Grand Father) எண்ணி வைத்திருக்கிறார்கள்! தாத்தாக்கள் எவ்விதம் நடந்துகொள்வார்கள் என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம். "தாத்தாக்கள்" தங்கள் பேரப்பிள்ளைகளை அவர்களின் இஷ்டம்போல் விட்டுவிட்டு, எந்தக் கண்டிப்பும் காட்டிட மாட்டார்கள்! தங்கள் பேரப்பிள்ளைகள் எந்த தீய செயல்கள் புரிந்தாலும், அவைகளை 'கண்டும் காணாததுபோல' அலட்சியமாக விட்டு விடுவார்கள். இன்று அநேகக் கிறிஸ்தவர்கள் தேவனைத் தங்களுக்கு தாத்தாவாக வைத்திருப்பதினிமித்தமே, பாவத்தை அவர்கள் கொடிய பயங்கரமாக எடுத்துக்கொள்வதே இல்லை! தேவனைத் தாத்தாவாகக் கொண்டிருக்கும் இந்த 'ஐடியா' முழுக்க முழுக்கத் தவறாகும். தேவனோ, நமக்கு ஓர் தகப்பன்!

அவர் தகப்பன் மாத்திரமல்ல, தேவாதி தேவனுமானவர். பரலோகத்தில் இந்த மகத்துவமானவருக்கு முன்பாக சேராபீன்களும் தங்கள் முகத்தை செட்டைகளினால் மூடி, "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என பயபக்தியுடன் கூப்பிடுகிறார்கள் (ஏசாயா 6:3). ஒருபோதும் பாவம் செய்யாதவர்களே இந்த சேராபீன்கள்! இருப்பினும், தேவனை அவர்கள் கிட்டிச்சேரும்போது, தங்கள் முகத்தை மூட வேண்டியுள்ளதே! ஏனெனில், தேவனாகிய கர்த்தரின் பரிசுத்தத்தை இவர்களால் நேருக்கு நேர் காணக்கூடாமல் இருந்ததே அதற்கு காரணம்!. இந்நிகழ்ச்சி நமக்குப் போதிப்பது யாது? ஆம், அளவிடமுடியா தேவனுடைய பரிசுத்தத்தை, நம் குறுகிய அளவிற்குட்பட்ட மனதால் ஒருபோதும் அளந்திடமுடியாது என்பதுதான்!

வேதாகமத்தில் தேவனுடைய தரிசனத்தைப் பெற்ற பரிசுத்த வான்கள் அடைந்த அனுபவத்தை எண்ணிப்பாருங்கள். ஏசாயா, தேவனுடைய மகிமையைக் கண்ட மாத்திரத்தில், தான் மிகவும் கேடான கொடிய பாவி என்ற உணர்வைப் பெற்றான் (ஏசாயா 6:5). மோசே, தேவனை நோக்கிப் பார்க்க பயந்து, தன் முகத்தை மூடிக் கொண்டான் (யாத்.3:6). தானியேல் தேவ தரிசனத்தைக் கண்டபடியால், தன் பெலனெல்லாம் போயிற்று என்றான் (தானி.10:8). யோவான் அப்போஸ்தலன், இயேசுகிறிஸ்துவின் தரிசனத்தைப் பெற்று, அவர்முன் செத்தவனைப்போல் விழுந்தான் (வெளி.1:17). பார்த்தீர்களா! இப்படி யெல்லாம் இருக்க, இன்று அநேகர் தேவனை இவ்வித பயபக்தியுடன் அறிந்து கொள்ளாததினாலேயே அவர்களின் ஜீவியம் ஆழமற்றதாயும், மேலோட்டமாயும் உள்ளது!

இன்று தேவனைக் கிட்டிச்சேரும் ஜனங்கள் இரண்டு தாறுமாறான எதிர்முனைகளுக்கு (two extremes) ஓடுகிறவர்களாகவே இருக்கிறார்கள். ஒரு முனையை நோக்கி ஓடும் ஜனங்கள், தாங்கள் ஒருபோதும் தேவனைக் கிட்டிச் சேர முடியாது என எண்ணி அவரின் அன்பை கொஞ்சமும் அறியாதவர்களாகவே ஜீவிக்கிறார்கள். இவர்களோ, தேவனைக் குறித்தப்

பீதியினால் தொடர்ச்சியாக ஆட்கொள்ளப்பட்டு அவரை வெவ்வேறு வழிகளில் சமாதானப்படுத்தவும் முயற்சிக்கிறார்கள். இன்னொரு எதிர்முனைக்கு ஓடுகிறவர்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவர்களே! இவர்கள், தேவனோடு ஓர் **தூய்மையற்ற** சௌஜன்ய நெருக்கத்தைத் தங்களுக்குள் உருவாக்கிக் கொண்டு, அதனிமித்தம் அவர்களுக்குத் தேவாதி தேவன் பட்சிக்கிற அக்கினியாயிராமல், **அவரைக்குறித்த பயமற்றவர்களாயும்** ஜீவிக்கிறார்கள்.

பயபக்தியோடு தேவனை நெருங்காத ஒருவன், தேவனை அறியவே இல்லை எனலாம். நாம் அவரை எவ்வளவு அதிகமாய் அறிகிறோமோ, அவ்வளவு அதிகமாய் நாம் அவரை ஜெபத்தில் கிட்டிச்சேரும் பொழுதெல்லாம் அவருக்குப் பயந்து அவரை பக்தியோடு கனம் பண்ணுவோம். அவர் நம்முடைய அன்புள்ள பிதாவாய் இருக்கிற படியால், அவருக்கு முன்பாக **தைரியமாயும்** வந்து நிற்கிறோம். இருப்பினும், அவர் தேவாதி தேவனாய் இருக்கிறபடியால் அவருக்கு முன் பயபக்தியோடும் வந்து நிற்கிறோம். பவுல் தன் 13-நிருபங்களிலும் (ரோமரிலிருந்து பிலேமோன் வரை) அவைகளை ஆரம்பிக்கும்போது, 'நம்முடைய பிதாவாகிய தேவனால் (GOD OUR FATHER) உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக' என்றே ஆரம்பிக்கிறார். உன்னதரைப் பவுல் தேவனாகவும், ஓர் தகப்பனாகவுமே அறிந்திருந்தார்! இதேபோலவே மற்றவர்களும் அவரை அறிந்து கொள்ளும்படி பவுல் விரும்பினார்.

**தேவன் சர்வத்தையும் செம்மையாய் ஆளும் வல்ல அதிபதி!**

“பரமண்டலங்களிலிருக்கிற...” என்ற வாக்கியமானது, நாம் ஜெபிக்கின்ற தேவன், சர்வத்தையும் சர்வ வல்லமையோடு பரமண்டலங் களிலிருந்து ஆட்சிபுரிபவர் என்பதையே நினைவுறுத்துகிறது.

தன் ஜனத்தை தேவன் சர்வ வல்லமையோடு ஆட்சிபுரிகிறார் என்பதை பழைய ஏற்பாட்டிலும் தேவன் உணர்த்த விரும்பினார். சங்கீதம் 46:10-ல் அவர் ஜனங்களைப் பார்த்து, “**நீங்கள் அமர்ந்திருந்து** நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந் திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்” எனக் கூறினார். ஆம், அவர் பூமிக்கு மேலாக சர்வத்தையும் ஆளும் வல்லவராக வீற்றிருப்பதால், நாம் அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிருக்கலாம்!

தேவன் சகல ஜாதிகளுக்கும், வல்லமைகளுக்கும் மேலாக **சர்வ வல்லமை** பொருந்தியவர் என்றும்; இயேசுகிறிஸ்து **சர்வ அதிகாரத்தோடு** சகலத்தையும் ஆட்சிபுரிகிறார் என்றும் உள்ளதான இந்த மகா மேன்மையான சத்தியத்தை இந்நாட்களில் சபை அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

அவரின் சர்வ வல்லமையுள்ள ஆளுகையை அறிந்து கொள்ளும் படியான ஓர் நிகழ்ச்சியைப் பாருங்கள். இன்று இஸ்ரவேல் தேசத்தின்

எதிரிகளில் மிகப் பிரதானமான எதிரி சோவியத் ரஷ்யா என்பதை நாம் யாவரும் அறிவோம். இஸ்ரவேல் தேசம் பூமியிலிருந்து அழிக்கப்பட்டு போகுமானால், அதனிமித்தம் ரஷ்யா மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்துவிடும். ரஷ்யாவின் மனநிலை இவ்வாறிருக்கும் சமயம் ஓர் நிகழ்ச்சி நடந்தது. அதாவது 1948-ம் ஆண்டு மே மாதம் பிரிட்டன், யூதர்களுக்குப் பாலஸ்தீனா தேசத்தைத் தருவதாக கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டது. அச்சமயம் இஸ்ரவேலுக்கு ஆதரவாக ரஷ்யா போட்ட ஓட்டானது ஐக்கிய நாடுகள் (The United Nations) இஸ்ரவேல் மாநிலம் மீண்டும் ஸ்தாபிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளும்படி செய்துவிட்டது. ஆனால் உண்மையில் ரஷ்யா ஓட்டு போட்டதின் நோக்கம், பிரிட்டிஷ் அரசை பாலஸ்தீனாவிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பதற்குத்தான்! அப்படியிருக்க, நடந்தேறி விட்ட நிகழ்ச்சிகள் தேவன் எவ்வளவாய் சர்வத்தையும் செம்மையாய் ஆளுகிறார் என்பதை அழகூட்டிச் சித்தரிக்கின்றது. ஆம், ஓர் "கிறிஸ்தவ நாடு" என அழைக்கப்பட்ட தேசம் தன் வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டது. ஆனால் தேவனோ, யூதர்களுக்கு அவர்களின் தேசத்தைத் திரும்பத் தருவேன் என்ற வாக்குறுதியை நிறைவேற்றத் துரிதம் கொண்டார். அவரோ தன் சர்வ ஆளுகையின் வல்லமையினால், ஓர் "நாத்திக தேசத்தையே" தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தன் வார்த்தையை நிறைவேற்றிவிட்டார்!

சர்வலோகத்திற்குமுரிய மகா சிங்காசனத்தில் தேவன் வீற்றிருக்கிறார்! இவ்வுலகத்தின் நிகழ்ச்சிகள் அத்தனையும் அவருடைய ஆளுகைக்குள் அடங்கியே இருக்கிறது!! இந்த சத்தியத்தில் **நம்முடைய விசுவாசம்** வேரூன்றி நிலைத்திருக்கும்போதுதான், இனிவரும் நாட்களில் நம்மைச் சுற்றி என்ன சம்பவித்தாலும், நம்முடைய இருதயம் பூரண இளைப்பாறுதலுக்குள் இருந்திட முடியும்!

நாம் அரசாங்கத்திற்காக ஜெபிக்க வேண்டுமென்றும் வேதம் கூறுகிறது (1 தீமோ.2:1,2). ஆனால், உருவாகியிருக்கும் ஒரு சூழ்நிலையை நம்முடைய ஜெபங்கள் மாற்றிட முடியும் என்பதை நாம் விசுவாசிக்கா விட்டால், அரசாங்கத்திற்காக ஜெபிப்பதில் ஒரு பயனும் இல்லை. அரசாங்கத்தின் ஓர் தீர்மானத்தையும்; தேர்தல் நேரத்தில் ஓட்டுப் போடுவதின் முடிவையும்; சர்வத்தையும் ஆளும் தேவன் என் ஜெபத்திற்குப் பதில் தந்து மாற்றிட முடியும் என நான் விசுவாசிக்காத பட்சத்தில், அரசாங்கத்திற்காக ஜெபித்து என் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. கடந்த காலங்களில், நம் தேசத்திற்காக நாங்கள் சபையாய் ஜெபித்து, அந்த ஜெபங்கள் தேவனுடைய தீர்மானம் நம்முடைய தேசத்தில் நிறைவேறும் பொருட்டு அற்புதமான பதிலைக் கொண்டு வந்திருப்பதைக் கண்கூடாகக் கண்டிருக்கிறோம்.

நீதிமொழிகள் 21:1, "ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில்

நீர்க்கால்களைப் போல இருக்கிறது; அதை தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்'' எனக் கூறுகிறது. நாம் ஜெபிப்பதினால், இவ்வுலகத்தின் எவ்வளவு பெரிய மகா சக்கரவர்த்தியின் தீர்மானங்களையும் தேவன் மாற்றிட முடியும்.

இந்தியாவின் பிரதம மந்திரி உங்கள் தகப்பன் என வைத்துக் கொள்ளுங்கள்! அப்படியானால், உங்கள் வாழ்வில் நீங்கள் சந்திக்கும் எந்தக் கஷ்டங்களையும் பிரச்சனைகளையும் ஓர் பொருட்டாக எண்ணுவீர்களா? உங்கள் வீட்டுச் சொந்தக்காரர் உங்களைப் பயமுறுத்தினாலோ; அல்லது உங்கள் மேலதிகாரி இடைவிடாமல் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தாலோ; அல்லது யாரேனும் ஒருவர் உங்களிடத்தில் அநீதியாய் நடந்து கொண்டாலோ; அல்லது ஏதேனும் ஒரு காரியம் துரிதமாய் செய்யப்பட வேண்டும் என்பதற்காகவோ - நீங்கள் கவலைப்படுவீர்களா? ஒருக்காலும் இல்லை! பிரதம மந்திரியைத் தகப்பனாகக் கொண்ட நீங்கள் என்ன செய்வீர்கள்? உடனே உங்கள் அப்பாவிற்கு நீங்கள் 'போன்' செய்து, அந்தப் பிரச்சனையைத் தீர்த்துவைக்கும்படி பேசிவிட்டு, நிம்மதியாக போனைக் கீழே வைத்து விடுவீர்கள்!

உங்கள் ஆண்டவர் இந்தியாவின் பிரதமரைக் காட்டிலும் பெரியவரல்லவா? சற்றே சிந்தியுங்கள்!

ஆனால், வாழ்க்கையின் பிரச்சனைகளைச் சந்திக்கும் நாம் என்ன செய்கிறோம்? நாம் உண்மையில், "நான், சர்வலோகத்தையும் ஆளுகை புரியும் என் பரமண்டல தகப்பனிடம் என் பிரச்சனைகளைக் கூறுவேன். அவர் அப்பிரச்சனைகளை நிச்சயமாய் மிக எளிதில் தீர்த்துவிடுவார்'' எனக் கூறுகிறோமா? அல்லது "ஐயோ, இந்த சமயத்தில் எனக்குத் தெரிந்த ஓர் மத்திய மந்திரியோ அல்லது ஓர் போலீஸ் ஆபீஸரோ இருந்தால் எவ்வளவு நலமாய் இருந்திருக்கும்! அப்படி இருந்திருந்தால், அவர்கள் எனக்கு உடனே உதவி செய்திருப்பார்களே!'' எனக் கூறுகிறோமா? இந்த இரண்டில், நம் ஜீவியத்தின் பிரச்சனைகளில், எது நம்முடைய **முதலிடமான நடவடிக்கையை** ஆக்கிரமிக்கிறது?

இன்று அநேகக் கிறிஸ்தவர்கள், அன்றாட தங்களின் நடைமுறை ஜீவியத்தில் பிரச்சனைகள் வரும்பொழுது, "நாத்திகர்களாக'' மாறி விடுகின்றனர். இவர்கள், "தேவன்மேல் விசுவாசம் வைத்திடுங்கள்!'' என கூட்டங்களிலேயும், தங்கள் வீடுகளிலேயும் 'வாயாரப்' பேசுகிறார்கள். ஆனால் இவர்களுக்குப் பூமிக்குரிய பிரச்சனைகள் தோன்றும்போது ஓர் நாத்திகனைப் போலவே பயத்தினாலும் பதட்டத்தினாலும் நிறைந்து விடுகிறார்கள்!

இன்று பயமானது, நம் நாட்களில் இருப்பதுபோல் இதற்கு முன் ஒருபோதும் இருந்ததில்லை! இதை இயேசுவானவர் கூறும்பொழுது, "கடைசி நாட்களில் பூமியின்மேல் இனி என்ன ஆபத்து வருமோ என

எதிர்பார்த்துப் பயப்படுவதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்து போகும்" என்றார் (லூக்கா 21:26). ஆனால் நாமோ, இப்படிப்பட்ட சமயத்தில்தான், பயமின்றி நிமிர்ந்து பார்த்து கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கி, நம்முடைய தலையை உயர்த்த வேண்டும் என இயேசு புத்தி சொன்னார் (லூக்கா 21:28).

**பிதாவண்டையில் காணப்படும் சம்பூரண பாதுகாப்பு!**

நமக்கு ஓர் சர்வ வல்லமையுள்ள பிதா இருக்கிறபடியால் நாம் நிச்சயமாக .... நிச்சயமாகவே .... அனாதைகள் இல்லை! எனவே இனியும் நாம் அனாதைகள்போல் நடந்து கொள்ளாதிருப்போமாக! நீங்கள் பயத்தினாலும் பதட்டத்தினாலும் ஆட்கொள்ளப்படுவீர்களென்றால், உங்கள் பரமதகப்பனை நீங்கள் நிந்திக்கிறீர்கள் என்பதுதான் பொருள். இதன் மூலம் நீங்கள் அவரிடம் கூறுவது யாதெனில், "தேவனே! எனக்கு உம்மீது நம்பிக்கையில்லை" என்பதுதான். மேலும், "என்னுடைய இந்தக் கஷ்டமான சூழ்நிலையில் எனக்கு உதவி செய்வதற்கு நீர் சத்துவமற்ற கையாளாகாதவர்" என்றும், "என் மீது உமக்கு அக்கறையே இல்லை" என்றும் கூறுகிறவர்களாய் இருப்போம். ஆம், அவிசுவாசத்தால் நிறைந்த ஓர் இருதயத்திலிருந்து வருவதே இவ்வித சாட்சியாகும்.

நீங்கள் நிஜமாகவே, தேவன் சர்வ வல்லமையுள்ளவர் என்றும், உங்களை அன்புகூர்ந்து விசாரிக்கிறவரென்றும் விசுவாசிப்பவர் களாயிருந்தால், நீங்கள் எதற்காகிலும் கவலைப்பட வேண்டிய அவசியமுண்டோ? இரு பறவைகள் பேசிக்கொள்வதைப் போல் உள்ள ஓர் பாடல் எனக்கு மிகுந்த சவாலாக இருந்தது. அந்தப் பாடல் யாதெனில்,

**ஓர் ராபின் குருவி ஓர் சிட்டுக் குருவியிடம் கேட்டது:**

"சின்னஞ்சிட்டுக் குருவியே சின்னஞ்சிட்டுக் குருவியே
இவ் வையகத்து மானிடர், இவ்விதம் சிதறிய மனமும்
பதறியே ஓடி பயந்தே வாழும் காரணம் யாதோ?
இனிய சிட்டுக்குருவியே இதன் காரணமும் நீ அறிவாயோ?"

**உடனே சிட்டுக்குருவி ராபின் குருவிக்குப் பதில் கூறியது :**

"நேசமுள்ள ராபினே நேசமுள்ள ராபினே!
நானறிந்த பதிலையும் கூறிட நீ கேளாயோ,
என்னையும் உன்னையும் காத்திடவே
பரம தகப்பன் தான் உண்டே - இந்த நல்ல
பாக்கியமும் இம் மானிடர்க்கு இல்லையோ?
இதுவே என் பதிலாக ஏற்றிடுவாய் ராபினே!"

"பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" என்றே இயேசு கூறினார் (மத்.10:31). இப்பூமியில், நம் வாழ்வின் குறிக்கோளாக எதையும்

*வைத்துக் கொள்ளாமல்* **தேவனுடைய சித்தம்** *மாத்திரமே செய்வதற்கு விருப்பங்கொண்டு, இயேசு நம்முடைய* **வாழ்க்கையின் ஆண்டவராக** *இருப்பாரென்றால் நமக்கோ அல்லது நம்மைச் சுற்றியோ எது நடந்தாலும், "சகலமும் நம்முடைய நன்மைக்கேதுவாகவே நடக்கிறது" என்பதை கொஞ்சமும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் உறுதியாக எடுத்துக்கொள்ள முடியும்! (ரோமர் 8:28).*

*ஓர் தகப்பனுக்குரிய அன்பையும் அக்கறையையும் காட்டும் தன்னிடம், நாம் பூரண பாதுகாப்போடு வாழ்வதற்கே தேவன் விரும்புகிறார். நாம் இவ்வுலகில் பிறப்பதற்கு முன்பாகவே தேவன் நம்மீது அக்கறை செலுத்தத் துவங்கிவிட்டார் என்பதை திட்டமாய் அறிந்திருக்க வேண்டும். யார் நமக்குப் பெற்றோராய் இருக்க வேண்டும்? நம்முடைய சுபாவம் (Temperament) எவ்விதம் அமைய வேண்டும்? எவ்வளவு கல்வி நாம் கற்றிட வேண்டும்? எங்கே வாழ வேண்டும்?.... ஆகிய எல்லா வற்றையும் நம் தேவனாகிய தகப்பன் முன்கூட்டியே தீர்மானித்திருக் கிறார். இவ்விதம் நாம் திட்டவட்டமாக அறிந்திருக்கும் போதுதான், நம்முடைய சூழ்நிலையைக் குறித்தோ அல்லது நம் பெற்றோர்களைக் குறித்தோ அல்லது வேறு எவர்களையும் குறித்தோ ஒரு கடுகளவுகூட முறுமுறுப்பும் குறைசொல்லும் இல்லாமல்* **பூரண இளைப்பாறுதலுக்குள்** *நாம் ஜீவித்திட முடியும்! (சங்.139:16).*

*மனுஷனுடைய கோபத்தைக்கூட தன் மகிமை விளங்கப்பண்ணும் படிக்கே தேவன் மாற்றிவிடுவார் என்பதை நீங்கள் அறிவீர்களா! (சங்.76:10). யோசேப்பின் வாழ்க்கை இதற்கு ஓர் மிகச்சிறந்த உதாரணமாய் அமைந்திருக்கிறது. ஆதியாகமம் 37-50 அதிகாரங்கள் வரை கவனமாய் வாசித்துப் பாருங்கள். அங்கே, யோசேப்பிற்கு ஒருவர் பின் ஒருவராக பலர் தீங்கிழைத்தனர். ஆனால் தேவனோ, தன்னுடைய ஆளுகையின் வல்லமையினால் இந்த எல்லாத் தீமைகளையும் ஒன்று திரட்டி.... அவைகள் அனைத்தையும் யோசேப்பிற்கு நல்லதாக முடியும்படிச் செய்துவிட்டார்! யோசேப்பு தன்னுடைய தேவனுக்கு உண்மையாயிருந்த ஒரே காரணத்தினிமித்தம், அவனின் ஜீவிய நிகழ்ச்சிகளில் தேவன் பிரவேசித்துச் சகலத்தையும் நன்மைக்கேதுவாக செய்துமுடித்தார்!*

*தன் பெற்றோர்களைக் கனம் பண்ணுவோர்கள் இவ்வுலகில் நீடிய ஆயுசோடு ஜீவிப்பார்கள் என தேவன் இஸ்ரவேலர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார் (எபே.6:2-3). இவ்வசனத்திற்குத் தகுதியான ஒருவனை, அவன் தன் எதிரிகளால் கொலை செய்யப்படுவதிலிருந்தும்; புற்று நோயினால் மரிப்பதிலிருந்தும்; விபத்தினால் சாவதிலிருந்தும் தப்புவித்து* **அவனைக் காத்துக்கொள்ளுவதற்குத்** *தேவன் சர்வ வல்லமை பொருந்தியவராய் இருப்பதினிமித்தமே, அவர் இவ்விதமான வாக்கு தத்தத்தைக் கொடுத்தார். ஆம், இன்றும் தேவன் இவ்விதமாய் சர்வ வல்லமை பொருந்தியவராகவே கிரியை செய்கிறார். ஆனால், தேவனின்*

இவ்விதமான சம்பூரண ஆளுகையின் வல்லமை பொழிந்திடும் நன்மைகளை நாம் பெற்று ஆனந்தித்திட முடியாமல் நம்முடைய "அவிசுவாசமே" நம்மைத் தடைசெய்கிறது!

**தேவன் ஓர் முழு குடும்பத்திற்கும் தகப்பனானவர்!**

கடைசியாக, நாம் தேவனை '**என்னுடைய** பிதாவே' என்றல்ல "எங்கள் பிதாவே" என்றுதான் அழைக்க வேண்டுமென இயேசு நமக்குக் கற்பித்ததை நினைவிற் கொள்வோமாக. இதில் ஓர் முக்கியமான விஷயம் அடங்கியுள்ளது. இயேசு கற்பித்த ஜெபம் ஓர் குடும்ப ஜெபமாகும்! நம் பரமதகப்பனுக்கு அநேகம் பிள்ளைகள் இருக்கிறார்கள். நான் அவர் சமூகத்தைக் கிட்டிச்சேரும்போதெல்லாம் இந்த உண்மையை மனதிற் கொண்டிருக்க வேண்டும். ஆம், அவரின் அநேகம் பிள்ளைகளில் நானும் ஒருவனாக இருக்கிறேன்! இந்தக் குடும்பத்தில் ஒருவரும், இன்னொருவரைக் காட்டிலும் விசேஷித்தவர் களல்ல. எல்லோரும் ஒரே சமமானவர்களே! அவர் **நம்முடைய** தகப்பன்!

இந்த சத்தியத்தின்படி, தேவனுடைய குடும்பத்திலிருக்கும் என்னுடைய **சக விசுவாசிகளோடு** நான் கொண்டிருக்கும் உறவு (Horizontal Relationship) சரியாக இல்லையென்றால், நான் **தேவனோடு** சரியான முறையில் உறவு (Vertical Relationship) கொள்வதும் ஒருக்காலும் முடியாது. இரண்டு மரங்களால் செய்யப்பட்டதே சிலுவை ஆகும். ஒரு மரம் செங்குத்தாகவும், இன்னொரு மரம் படுக்கையாகவும் வைக்கப் பட்டிருக்கிறது. இந்த இரண்டு மரங்களுக்கொப்பாகவே நாம் உறவுகொள்ளும் ஐக்கியத்திற்கும் 'இருதிசையான உறவு' உள்ளது. ஒன்று தேவனோடு கொள்ளும் நேர் செங்குத்தான (Vertical Relationship) உறவு. மற்றொன்று தேவனுடைய குடும்பத்திலிருக்கும் மற்றவர்களோடு கொள்ளும் படுக்கைவசமான (Horizontal Relationship) உறவு. அதாவது தேவனுடைய குடும்பத்திலிருக்கும் என்னுடைய சகோதர, சகோதரிகளிடம் கொண்டிருக்கும் உறவு சுமூகமாய் இல்லையென்றால் .... அவர்களில் யாராகிலும் ஒருவரோடு என்னால் பேச முடியாதிருக்கு மென்றால்; அல்லது யாராகிலும் ஒருவர்மீது மனதிற்குள் கசப்பு இருக்குமென்றால்; அல்லது ஒருவர்மீது எனக்குக் கோபம் இருக்கு மென்றால்; அல்லது யாராகிலும் ஒருவரை நான் மன்னிக்காமல் இருந்தால், நான் நிச்சயமாய் .... நிச்சயமாய் தேவனைக் கிட்டிச்சேர்ந்து "எங்கள் பிதாவே" என ஒருக்காலும் கூறிட முடியாது. நான் யாரை மன்னிக்கவில்லையோ அவருக்கும் தேவன் பிதாவாகத்தானே இருக்கிறார்!?

கிறிஸ்துவின் சரீரத்திலிருக்கும் யாரேனும் ஒருவரை நாம் உதாசீனம் செய்துவிட்டு ஒருக்காலும் தேவனுடைய சமூகத்தைக் கிட்டிச்சேர்ந்திட முடியாது. பரிசேயன் ஒருவன் ஜெபித்த ஜெபத்தை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம். அவன் ஜெபிக்கும்போது, "தேவனே நான்

*அநியாயக்காரர் போலவும்... இந்த ஆயக்காரனைப் போலவும் இராத தினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்" என ஜெபித்தான் (லூக். 18:11). இவ்வித மனோபாவத்தோடு நாம் ஜெபத்தில் தேவனிடம் கிட்டிச் சேருவது முடியவே முடியாது. தேவனைப் பொறுத்தமட்டில் உங்கள் சமூக அந்தஸ்தும்; உங்கள் கல்வித்திறனும்; உங்களின் சிறந்த ஆவிக்குரிய நிலையேயாயினும்.... ஆகிய, இவைகள் எவ்விதத்திலும் உங்கள் சக விசுவாசிகளைவிட உங்களை மேலாக உயர்த்திட முடியாது. எனவே நீங்கள் உங்களின் எல்லா சக விசுவாசிகளின் ஸ்தானத்திற்குச் சமமாக இறங்கிவர உங்களுக்கு விருப்பமில்லையென்றால், இயேசு கற்பித்த "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே...." என்ற ஜெபத்தை உங்களால் ஒருபோதும் ஜெபித்திட முடியாது. ஏனெனில் நாம் எல்லோருமே ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களாகவே இருக்கிறோம்.*

*ஒவ்வொரு ஸ்தல சபையின் ஐக்கியமும் இவ்விதமாய் ஓர் "குடும்பத்தின் சூழலைக்" கொண்டிருக்கவே தேவன் விரும்புகின்றார். இங்கே சகோதரர்களும், சகோதரிகளும் ஒரே குடும்பத்தின் உறுப்பினர் களைப்போலவே இருக்கிறார்கள். வெளியிலிருந்து வரும் ஒருவன், இவர்கள் குழுமியிருக்கும் இடத்திற்குள் பிரவேசிப்பானென்றால் ஓர் குடும்பத்திற்குள் பிரவேசிப்பதாகவே உணர்வான். அப்படியில்லை யென்றால், சபையிலுள்ள தேவனுடைய பிள்ளைகள், இயேசு இந்த ஜெபத்தில் கற்றுத்தந்தவைகளை ஆழமாய் மனதிற் கொள்ளத் தவறி விட்டார்கள் என்பதே காரணமாகும்.*

*எனவே, நாம் ஜெபிக்கும் பொழுதெல்லாம், கீழ்காணும் அடிப்படையிலேயே தேவனைக் கிட்டிச் சேரமுடியும்:*

- *தேவாதி தேவன்* **என் தகப்பன்** *என்ற ஸ்தானத்தையும் அவரின் அன்பின் கரிசனையையும் உணர்ந்து, அவரண்டையில் தைரியத் தோடு கிட்டிச்சேர வேண்டும்!*
- *அவர்* **மகா பரிசுத்தமுள்ள** *தேவன் என்பதை உணர்ந்து, அவரண்டையில் கிட்டிச்சேர வேண்டும்!*
- *பரமண்டலத்தில் வீற்றிருந்து சர்வத்தையும் செம்மையாக* **ஆளுகைபுரியும்** *வல்ல தேவன் என்பதை உணர்ந்து, அவரண் டையில் விசுவாசத்தோடு கிட்டிச்சேர வேண்டும்!*
- *ஓர் பெரிய* **முழு குடும்பத்திற்கும்** *அவர் பிதா என்பதை உணர்ந்து, அவரண்டையில் அக்குடும்பத்தின் ஓர் உறுப்பினராகவே கிட்டிச் சேர வேண்டும்!*



# 3

## தேவனுடைய நாமம் மகிமைப்படுதல்
### "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக"

பிரதானமாக, நம் வாழ்க்கையைத் தழுவியே ஜெபம் இருக்கிறது. எனவேதான், "எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும்" என இயேசு கூறினார் (லூக்கா 18:1). இவ்வசனத்திற்கு, நாம் 'எல்லா நேரமும் முழங்காலில் நிற்கவேண்டும்' என பொருளாகாது. நாம் தேவனுக்கு முன்பாக முழங்காலில் நின்று ஜெபிக்க வேண்டிய தருணங்கள் இருக்கத்தான் செய்கிறது. ஆகிலும் நாம் எல்லா நேரமும் "ஜெப ஆவியினால்" மூழ்கியே இருக்கவேண்டும். இந்த ஜெப-ஆவி நம் முழு ஜீவியத்தையும் 'ஊடுருவி' நம்மை ஆட்கொண்டிருக்க வேண்டும்.

**ஜெபத்தில் முதலிடமாய் இருக்க வேண்டியவைகள்!**

நம்முடைய ஜீவியத்தில் எவைகளுக்கு முதலிடம் தரவேண்டும் என்பதையும், எவைகளின்மேல் தீராத வாஞ்சை கொண்டிருக்க வேண்டும் என்பதையும், இயேசு தன் சீஷர்களுக்கு கற்பித்த ஜெபம் வெளிப்படுத்துகிறது. இயேசு கற்பித்த ஜெபத்தில் ஆறு விண்ணப்பங்கள் அடங்கியுள்ளன. முதல் மூன்று விண்ணப்பங்கள் தேவனைப் பற்றிய தாகும் : 1) உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக 2)உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக 3) உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. அடுத்த மூன்று விண்ணப்பங்கள் நம்மைப் பற்றியதாகும் : 1) எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும் 2) எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் 3) எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான காரியம் உண்டு. அதாவது, **பிரதானமான** நம் ஜெப விண்ணப்பங்கள் நம் சொந்தப் பிரச்சனையைப்பற்றியதாய் இருக்கக்கூடாது! ஆவிக்குரிய பிரச்சனைகள் உட்பட ஏராளமான பிரச்சனைகள் நமக்கு இருக்கக்கூடும். ஆனால் அவைகள் நம் ஜெபத்தின் முதலிடத்தை ஆக்கிரமித்து விடக்கூடாது. **தேவனுடைய மகிமையே** நம்முடைய முதல் இலக்காக இருக்க வேண்டும்.

நம்முடைய வாஞ்சையை தேவனிடம் விண்ணப்பிக்கும்படி நம் இருதயத்தில் முதலிடமாக கொண்டிருப்பவைகள் எவைகள்? என சோதித்துப் பார்க்கக்கடவோம். இத் தற்பரிசோதனையில், நாம்

மேற்கூறிய ஒழுங்கின் வரிசைப்பிரகாரமாக ஜெபிக்கவில்லை என்பதையே கண்டுகொள்ள முடியும். இப்போது, நாம் இயேசுவின் போதனையை ஆழ்ந்த அக்கறையோடு கைக்கொள்ளவில்லை என்பதும் தெளிவாகி விட்டது. நாம் தேவனுடைய வார்த்தையைத் துல்லிய மாகவும், கவனமாகவும் வாசித்திருப்போமென்றால், "தேவனுக்கும்-அவரின் மகிமைக்கும் முதலிடம் கொடுத்து ஜெபிப்பதே" நாம் ஜெபிப்பதற்கென இயேசு போதித்து வகுத்துத் தந்த ஒரே வழி என்பதை அறிந்திருக்க முடியும்.

**எல்லாவற்றிற்கும் தேவனையே மையமாகக் கொண்டிருத்தல்!**

தன்னை மையமாகக்கொண்டே மனிதனை தேவன் சிருஷ்டித்தார். தேவனையே தலையாகக் கொண்டு, அத்தலைக்குக் கீழ்ப்பட்ட சரீரமாக இருக்கும்படியே மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். நம் சரீரத்தில் தலையானது உயரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாக தலையானது சரீரப்பிரகாரமாக "மேலே வைக்கப்பட்டது" மாத்திர மல்லாமல், நம் முழு சரீரத்தையும் இந்த தலையே ஆளுகை செய்வதையும் காண்கிறோம். இவ்விதம் நம் சரீரத்தின் கிரியைகளை நம் தலையே முழு பொறுப்பெடுத்து ஆளுகை செய்யும் பட்சத்தில் மாத்திரமே நாம் மிகுந்த ஆரோக்கியத்துடன் வாழ்ந்திட முடியும். மாறாக, ஒரு மனிதனின் தலை (மூளை) சரிவர வேலை செய்யவில்லை யென்றால், அந்த மனிதனின் சரீரம் கிரமமாக ஆளுகை செய்யப்பட முடியாத நிலைக்கு ஆளாகிவிடும். இந்நிலையிலிருக்கும் ஒரு மனிதனை புத்தி சுவாதீனமற்றவனென்றும், பைத்தியமென்றுமே அழைக்கிறோம். ஆனால் மனிதன் இக்கதியை அடைவற்கு தேவன் ஒருபோதும் விரும்பவேயில்லை.

ஆவிக்குரிய பிரகாரமாக "நாம் தலை நிமிர்ந்து நடந்திடவே" தேவன் விரும்புகிறார் (லேவி.26:13). இன்று அநேக விசுவாசிகளிடம் காணும் பிரச்சனை யாதெனில், அவர்களின் தலை அது இருக்க வேண்டிய உரிய இடத்தில் இல்லாதிருப்பதுதான்! தங்கள் வாழ்வில் தேவன் இருக்க வேண்டிய ஸ்தானத்தை இவர்கள் தேவனுக்குக் கொடுக்க மறுத்து விடுகிறார்கள். நம் ஜீவியத்தில்; நம் வாஞ்சைகளில்; நம் விருப்பங்களில்; நம் குறிக்கோள்களில் **தேவனுக்கு முதலிடம்** தரப்படுகிறதா? இவ்வாறு தேவனுக்கே முதலிடம் தரப்பட்டு, **தேவனும்–அவரின் மகிமையுமே** தீராத வாஞ்சையாக நம் ஜீவியத்தில் பற்றி எரிந்து கொண்டிருக்குமென்றால், நாம் ஜெபத்தில் தேவனை கிட்டிச்சேரும் போதெல்லாம் இந்த அனலின் தகிப்பை நாம் தெளிவாக உணர்ந்திட முடியும்!

இன்று நம் ஜீவியத்தில் அநேக காரியங்கள் ஏன் சீராக இல்லை? ஏன் ஒழுங்கின்மையும் குழப்பமும் நிறைந்துள்ளது? இதற்கு ஒரே காரணம், நமக்கு தேவனே முதலாவதாக இல்லாதிருப்பதுதான்! மேலும் நாம் ஜெபிக்கும் பொழுதெல்லாம் **ஈவுகளை கொடுப்பவரைவிட,** அவர் கொடுக்கும் ஈவுகளையே அதிகம் விரும்புகிறவர்களாய் இருக்கிறோம்.

**ஓர் ஆவிக்குரியவனின் மிகச் சிறந்த அடையாளம் யாதெனில், ஈவுகளைவிட அந்த ஈவுகளைக் கொடுப்பவரையே அதிகமாய் சிநேகிப்பான்!**

*மேலும் இந்த ஆவிக்குரிய மனிதன், ஒரு ஈவுகளைக்கூட தேவனிடத்திலிருந்து பெறாவிட்டாலும், ஈவுகளை வழங்குகிறவர்மீது கொண்டிருக்கும் அவனின் சிநேகமோ சிறிதுகூட குறைந்திடாது!*

*நாம் ஆவிக்குரிய மனம் உடையவர்களாயிருக்கிறோமா? இல்லையா? என்பதை கண்டுகொள்வதற்கான பரிசோதனைகளில் கீழ்காணும் கேள்விக்குரிய விடையும் ஒன்றாகும்: "தேவன் நம் ஜெபங்களுக்குப் பதில் தருவார் என எதிர்பார்த்திருந்த ஜெபத்திற்கு பதில் தராவிட்டாலும், மனநிறைவோடும், இருப்பதுபோதும் என்றும் திருப்தியாக இருக்கின்றோமா?"*

*இன்று ஏன் அநேக விசுவாசிகள் தங்கள் ஜெபங்களுக்குத் தேவன் பதிலளிக்காததினிமித்தம் குறை கூறி முறுமுறுக்கிறார்கள்? ஏனென்றால் இவர்கள் அவரின் ஈவுகளை மாத்திரமே விரும்புகிறார்கள். ஈவுகளை வழங்குகிறவர் மீதோ இவர்களுக்கு நாட்டம் இருப்பதில்லை! இப்படிப்பட்டவர்களே கெட்டகுமாரனைப் போலிருக்கிறார்கள். இந்த கெட்டகுமாரன் தன் தகப்பனிடமிருந்து பெற விரும்பியதைப் பெற்றவுடன், தகப்பனின் சமூகத்தை விட்டு விலகி உல்லாசமாய் இருக்கச் சென்றுவிட்டான். இவனுக்கு வேண்டியதெல்லாம் தகப்பனின் சொத்துக்கள்தான்! இவன் தகப்பனின் ஈவுகளைத் தின்று தீர்த்த பின்பே மீண்டுமாகத் தகப்பனிடம் வந்தான். அதுவும், ஏதாவது தகப்பனிடம் கிடைக்கும் என்ற எண்ணத்துடனேதான் வந்தான்! (லூக்கா 15:11-24).*

*கர்த்தருடைய ஜெபத்தில் 50% தேவனையும் அவரின் மகிமையையும் குறித்தே இருப்பதைக் கவனித்தீர்களா! அவர் கற்றுத்தந்த ஜெபத்தின்படி ஜெபிக்க வேண்டும் என தீர்மானித்து, ஓர் சடங்காச்சாரமான முறையில், "ஆண்டவரே, உம்முடைய நாமம் மகிமைப்படுவதையே முதலாவதாக நானும் விரும்புகிறேன்" என்ற ஒரு வாக்கியத்தை ஒரு நிமிடம் ஜெபித்துவிட்டு, அடுத்த ஒரு மணிநேர ஜெபத்தில்.... நாம் விரும்புகிற தேவைப்பொருட்களின் நீண்டப் பட்டியலை அவரிடம் கொடுப்பது முறையாகுமா? எனவே இங்கு நாம் கூறுவதெல்லாம் ஓர் குறிப்பிட்ட ஜெப வடிவத்தை அல்ல! மாறாக, நம் முழு நோக்கமும் மாற்றப்பட்டு, தேவனும்-அவரின் மகிமையுமே பிரதான சிந்தையாக நம்மில் இருப்பதற்கு நம் மனம் புதிதாக சீர்பொருந்தப்பண்ணப்பட வேண்டும். இந்த மாற்றத்தையே கர்த்தருடைய ஜெபம் நம்மில் கொண்டுவர வேண்டும்!*

**நம் – சுயம் மையம் கொண்ட வாழ்க்கையே எல்லாப் பாவங்களுக்கும் வேர்!**

*தன்னையே மையமாகக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே தேவன் சகலத்தையும் இப்பாருலகில் சிருஷ்டித்தார். சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும், கிரகங்களையும் பாருங்கள்.*

அவைகள் தங்களுக்கென்று ஓர் விருப்பம் கொண்டிருக்கவில்லை! அவையாவும் மிகத் துல்லியமாகத் தங்களைப் படைத்தவருக்குக் கீழ்ப்படிகின்றன. எந்தக் கேள்வியும் கேட்காமல் பூமி சூரியனைச் சுற்றி வருகிறது. அதேபோல பல்லாயிரம் ஆண்டுகளாகத் தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஓட்டப்பாதையில் நட்சத்திரங்கள் சுற்றி வருகின்றன. இவைகள் யாவும், தேவன் தங்களுக்கு நியமித்த பாதையில் நிலையாகவும், உறுதியாகவும் இருப்பதைக் காண்கிறோம். ஆகிலும், உயிரற்ற இப்பொருட்களின்மேல் தேவன் மகிழ்ச்சி கொள்வதில்லை! அவர், குமாரர்களையே விரும்புகிறார்!

தேவன் முதலாவதாகத் தூதர்களையே, சுயாதீனமான சித்தத்தை அவர்களுக்கு கொடுத்து சிருஷ்டித்தார். ஆனால் தூதர்களுக்குத் தலைவனாய் இருந்த **லூசிபர்** தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்தான். ஏனென்றால், அவன் தேவனின் மையத்திற்குள் தன்னை வைத்துக்கொள்ள விருப்பமில்லாதவனாகப் போனான். இவ்விதம் படைக்கப்பட்ட **ஓர் சிருஷ்டி, தன்னையே மையமாகக் கொண்டு** வாழ விரும்பியதிலிருந்துதான் பாவம் உருவாகிப் பிறந்தது (ஏசா. 14:12-15).

இதை நாம் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகும். ஏனென்றால், பாவம் இன்னதென்று நாம் அறிந்துகொள்ள, அது எவ்விதம் உருவாகிப் பிறந்தது என்பதையும் அறிந்திருக்க வேண்டும். எனவே இப்போது நமக்குப் பாவத்தைக்குறித்த தெளிவு கிடைக்கிறது. நாம் எண்ணுகிறபடி விபச்சாரமும், கொலையும், கோபமும், பொறாமையும் போன்றவைகளே பாவம் என்பது யாது? என்பதற்கு விடையாக இல்லை. ஆம், சுயத்தை - மையமாகக் கொள்வதிலிருந்துதான் பாவம் வேர் கொள்கிறது!

இந்த சுயத்தின் மையமே ஓர் தேவதூதனைக் கணப்பொழுதில் பிசாசாக மாற்றியது. அதைப்போலவே **இன்றும்** சுயத்தை மையமாக் கொள்ளும் வாழ்க்கை, மக்களைப் பிசாசாக மாற்றிவிடுகின்றது!

இந்த சுயத்தை மையமாகக் கொண்ட ஜீவியமே ஆதாமைப் பாவமாக்கி வீழ்ச்சியுறச் செய்தது. ஏதேன் தோட்டத்தில் இரண்டு மரங்கள் இருந்தன. ஒன்று, ஜீவவிருட்சம். மற்றொன்று நன்மை தீமை அறியச்செய்யும் மரம். இவ்விதம் ஆதாம் வாழ்வதற்கென இரு அடிப்படைகளைக் கொண்ட வாழ்க்கை அவனுக்கு முன் வைக்கப் பட்டது. ஒன்று, தேவனை மையமாகக் கொண்டிருக்கும் வாழ்க்கை. மற்றொன்று, ஆதாம் தன்னையே மையமாகக் கொண்டிருக்கும் வாழ்க்கை. விலக்கப்பட்ட கனியை ஏவாள் புசிக்கும்படி சாத்தான் தூண்டியபோது, "உன் கண்கள் திறக்கப்பட்டு **நீயே தேவனைப்போல்** மாறிவிடுவாய். பின்பு தேவனுக்குரிய சுதந்தரத்தோடு நீ வாழலாம்" எனக் கூறினான். இதற்கு ஆதாமும் ஏவாளும் செவிசாய்த்து சாத்தானுக்குரிய வாழ்க்கையைத் தங்களுக்கெனத் தெரிந்து கொண்டார்கள். ஆம்,

**தங்களையே மையமாகக் கொண்டு** தேவனில்லாமல் தாங்களாகவே சுதந்தரமாய் வாழும் ஓர் வாழ்க்கையைத் தெரிந்து கொண்டார்கள்!

தனக்கு ஏதோ ஆதாயத்தை விரும்புவதால், தன்னை மையமாகக் கொண்டு வாழ ஆண்டவர் நம்மை அழைக்கவில்லை! அப்படி இல்லவே இல்லை!! நூற்றுக்கு நூறு நம்முடைய நன்மைக்காகவே நம் ஜீவியத்தில் அவரை மையமாகக் கொண்டு வாழ தேவன் அழைக்கிறார். இவ்விதம் நாம் தேவனையே மையமாக பூஜித்து ஆராதிக்கவில்லையென்றால், ஒன்று நம்மை நாமோ அல்லது பிசாசையோ அல்லது உலகத்தையோ நாம் நிச்சயமாய் ஆராதித்துவிடுவோம்! இவ்விதம் மாயையை ஆராதித்து நம்மைநாமே அழித்துக்கொள்வதிலிருந்து நம்மை காப்பதற்காகவும், நம் சொந்த இரட்சிப்பிற்காகவும், நம் சொந்த நன்மைக்காகவுமே, தேவன் நம்மைப் பார்த்து, "என்னை ஆராதித்திட கற்றுக்கொள்ளுங்கள்! என்னையே மையமாகக் கொண்டு வாழ்ந்திட கற்றுக்கொள்ளுங்கள்!" என வருந்தி அழைக்கிறார்.

சூரியனைப் பூமி சுற்றி வரும்படியே தேவன் படைத்தார். ஆனால் பூமியோ ஒருநாள், "போதும், போதும், நான் சூரியனைச் சுற்றி வந்தது போதும்! இன்றிலிருந்து சூரியன் என்னைச் சுற்றி வரட்டும்" எனக் கூறுமென்றால், என்ன சம்பவிக்கும்? இவ்விதம் பூமியானது தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் மீறுமென்றால், பருவகாலங்கள் மாறி வராது! பூமியின் ஜீவராசிகளும் வெகு சீக்கிரத்தில் அழிந்துபோகும்! பார்த்தீர்களா, **தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமை** எப்போதும் மரணத்தையே கொண்டுவரும்!

இதைப்போலவேதான் ஆவிக்குரிய மரணமும் இவ்வுலகத்திற்கு சம்பவித்தது. தன்னை மையமாகக் கொண்டு வாழ்வதற்காகவே மனிதனை தேவன் சிருஷ்டித்தார். ஆனால் மனிதனோ தேவனை மையமாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டான்! அந்த நாளில்தானே மனிதன் மரித்துப் போனான்! இந்த உண்மையை நீங்கள் உணருகின்றீர்களா? அப்படியானால், சுயம்-மையம் கொண்ட வாழ்விலிருந்து மீட்கப்படுவதே இரட்சிப்பின் பொருள் என்பதையும் நீங்கள் அறிந்தவர்களாய் இருப்பீர்கள்!

ஒரு மனிதன் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், முதலாவது அவன் மனந்திரும்ப வேண்டுமென புதிய ஏற்பாடு போதிக்கிறது. மனந்திரும்புவதின் பொருள் யாதெனில், நம் பழைய ஜீவியத்தின் வழியை விட்டு நாம் திரும்புவதாகும். இதன் பொருள் மிக ஆழமானதாகும். குடிப்பது, சூதாடுவது .... போன்ற கெட்ட பழக்க வழக்கங்களை விட்டு விடுவதைக் காட்டிலும் மேலான பொருள் இவ்வித மனந்திரும்புதலுக்கு உண்டு. நம் பழைய ஜீவியத்தின் வழியோ, சுயத்தை மையமாகக் கொண்ட வாழ்க்கையாக இருக்கிறது. நாம் மெய்யாகவே மனந்திரும்புகிறோமென்றால், ஆண்டவரைப் பார்த்து, "ஆண்டவரே நான் என்னையே

மையமாகக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கையால் இளைத்துப்போனேன்! இப்போதோ, நான் உம்மை மையமாகக் கொண்டு உம்மிடத்தில் திரும்பி வர விரும்புகிறேன்" எனக் கூறுவதே அந்த மெய்யான மனந்திரும்புதலாகும்!

**சுயம்–மையம் கொண்ட வாழ்விலிருந்து விடுதலையாதல்!**

நம்மைப் பாவத்திலிருந்து இரட்சிக்க இயேசு வந்தார் என்பதை வேறுவிதமாகச் சொல்வோமென்றால், நம்மை சுயம்-மையம் கொண்ட வாழ்விலிருந்து விடுதலை செய்ய இயேசு வந்தார்! என்றே சொல்ல வேண்டும்.

புதிய ஏற்பாட்டில் 'பாவம்' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'சுயம்-மையம் கொண்டிருத்தல்' என்ற வார்த்தையைப் போட்டு வாசித்துப் பாருங்கள். இப்போது வசனத்தின் பொருள், உண்மையான ஆழத்தோடு வருவதைக் காண்பீர்கள். உதாரணமாக, "பாவம் உங்களை மேற் கொள்ள மாட்டாது" என்ற வசனத்தை "சுயம்-மையம் கொண்டிருத்தல் உங்களை மேற்கொள்ள மாட்டாது" என வாசித்துப் பாருங்கள் (ரோமர்.6:14). ஆம், தேவன் தன் ஜனத்திற்காகக் கொண்ட விருப்பமெல்லாம் இக்கொடிய சுயத்திலிருந்து பெற்றிடும் இரட்சிப்புதான்!

நம் ஜீவியத்தை ஆழமாய் சோதித்துப் பார்ப்போமென்றால், நாம் மிகத் தூய்மையானது என எண்ணும் விருப்பங்களில்கூட சுயம்-மையம் கொண்டிருத்தலைக் கண்டிட முடியும். பரிசுத்தாவியின் வல்லமையைக் கொண்டு ஓர் பெரிய பிரசங்கியாகவும் அல்லது ஓர் பிரபல்யமான சுகமளிப்பவராகவும் மாறிட விரும்புவதற்காக "பரிசுத்தாவின் அபிஷேகத்தை" நீங்கள் பெற விரும்பினால், அதுவும்கூட சுயத்தை மையமாகக் கொண்ட விருப்பமென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை! இந்த விருப்பம், ஒரு மனிதன் **இவ்வுலகில்** மாபெரும் தலைவனாக வர விரும்பும் சுயம்-மையம் கொண்ட விருப்பத்திற்கே ஒப்பானதாகும். இவ்விதமாய், பாவம் மகா பரிசுத்த ஸ்தலத்திலும் பிரவேசித்திருப்பதை உங்களால் காணமுடிகின்றதா?!

எனவேதான், நாம் ஜெபிக்கும்படி இயேசு கற்றுத் தந்தபோது **எல்லாவற்றிற்கும் முதலாவதாக,** ஆவியினால் நாம் நிரப்பப்பட வேண்டும் என்று கூட இல்லாமல், **தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும்** என்றே ஜெபிக்க கற்றுத் தந்தார்.

"உம்முடைய நாமம் மகிமைப்படுவதாக" என்ற ஜெபத்தை ஓர் உண்மையான ஆவிக்குரிய மனிதன் மாத்திரமே நேர்மை உள்ளத்தோடு ஜெபிக்க முடியும். இல்லாவிட்டால் இந்த ஜெபத்தை யார் வேண்டுமானாலும் திரும்பத் திரும்ப கூறிவிட முடியுமே! இதுபோன்ற செயலை ஓர் கிளி கூட நேர்த்தியாய் செய்துவிடும்! ஆனால் நம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவன் கூறியதை அப்படியே பொருள் படுத்தி ஜெபிக்க வேண்டுமானால், அதற்கு தேவனை முழு நெஞ்சாய் தியானிக்கும் (Devotion to God) ஓர் வாழ்க்கை தேவை! இவ்விதம்

தேவன்மீது கொண்ட முழு தியானமான ஓர் வாழ்க்கையில், அவரே ஜீவியத்தின் முதன்மையாய் வீற்றிருப்பார்! நாமும் அவரில் மையம் கொண்டிருப்போம்! "இப்போது" நாம் தேவனின் ஆசீர்வாதத்தைவிட "தேவனையே" முழு நெஞ்சாய் வாஞ்சித்திடுவோம். ஒருவேளை, அவர் நமக்குத் தனது வரங்களைக் கொடுப்பாரென்றால் அது நல்லதுதான்! இவ்விதமாய் ஒரு வரம்கூட நமக்குத் தராவிட்டாலும் அதுவும் மிக நல்லதுதான். ஏனென்றால் நம்முடைய தீராவாஞ்சையின் விருப்ப மெல்லாம், தேவன் மாத்திரமேயல்லாமல் அவருடைய வரங்களல்ல!

முழு இருதயத்தோடு கர்த்தரையும், தன்னை நேசிப்பதுபோல் தன் அயலானையும், நேசிக்க வேண்டும் என தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஏன் போதித்தார்? அவர்களின் சுயம்-மையம் கொண்ட வாழ்விலிருந்து அவர்களை விடுவிப்பதற்காகவே! என்பதை நாம் அறிந்திடக்கடவோம்.

'Joy' - என்ற ஆங்கிலப் பதத்திற்கு ஓர் சொல் அலங்காரம் உண்டு. அதன்படி, J - என்பதற்கு Jesus The First (இயேசுவே முதலானவர்) எனவும்; O - என்பதற்கு Others Next (அதற்கடுத்து மற்றவர்கள்) எனவும்; Y - என்பதற்கு Yourself Last (நானோ, என்றும் கடைசியே!) எனவும் வரிசைப்படுத்தி கூறப்படுகிறது. இந்த வரிசைப்படி உங்கள் ஜீவியம் இருக்குமென்றால் உங்களில் Joy - மகிழ்ச்சி நிரம்பி வழிந்தோடிவிடும். தேவனும் இவ்விதமே நிறைவான மகிழ்ச்சியில் சதா இருக்கிறார். அங்கே பரலோகத்தில் துக்கம் அல்லது பதஷ்டம் என ஒன்றுகூட இல்லை. ஏனென்றால், அங்கே சகலமும் தேவனையே மையமாகக் கொண்டுள்ளது. அங்கே தூதர்களும் சதா மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கிறார்கள், ஏனெனில் அவர்களும் தேவனையே மையமாகக் கொண்டல்லவா வாழ்ந்து வருகிறார்கள்!

நாம் இருக்க வேண்டிய சரியான-மையம் கொண்ட வாழ்வைத் தெரிந்து கொள்ளாததாலேயே நம்மில் சந்தோஷத்தையும், சமாதானத் தையும், இன்னும் அநேக ஆவிக்குரிய நற்பண்புகளையும் இழந்த வர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாமோ, தேவனை நம் சொந்த வழிக்கு இழுப்பதற்கே முயற்சிக்கிறோம். நம்முடைய ஜெபமெல்லாம், "ஆண்டவரே, **என்னுடைய** வியாபாரத்தை விருத்தியாக்கும்.... **என்** அலுவலில் நான் பதவி உயர்வு பெற உதவி செய்யும்... ஓர் நல்ல வீட்டை **எனக்குத்** தாரும்...." என முடிவில்லாமல் சென்று கொண்டேயிருக்கிறது. "அலாவுதீனின் அற்புத விளக்கு" கதையில் வரும் பூதத்தைப்போல் நாம் தேவனை ஓர் வேலைக்காரனாக நடத்தி, அவர் நம் பூலோக ஜீவியத்தை "குஷி - குஷியாக" மாற்றிவிட விரும்புகிறோம். இன்று அநேக விசுவாசிகள் ஜெபிக்கும் தேவன் இப்படிப்பட்டவராகத்தான் இருக்கிறார். ஏனெனில் இவர்களின் இந்த ரகமாக தேவன் மாத்திரமே, ஒருவன் இவ்வுலகில் முன்னேற்றமடைந்து லாபமடைய வழி செய்கிறார்!? ஆனால் புதிய ஏற்பாட்டில் உள்ள தேவனோ, நீங்கள் ஒலிம்பிக் 100-மீட்டர்

ஓட்டப்பந்தயத்தில் ஜெயிப்ப தற்காகவும், உங்கள் வியாபாரப் போட்டியில் உங்களுக்கு வெற்றிக்கொடி நாட்டுவதற்காகவும் வந்து நிற்கும் தேவன் அல்லவே அல்ல!

நம்முடைய ஜெபங்களே, நாம் எவ்வளவாய் சுயத்தை மையம் கொண்டு வாழ்கிறோமென்பதை அம்பலமாக்கிவிடுவதைப் பார்த்தீர்களா!

"கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை (வாஞ்சைகளை-Desires) உனக்கு அருள் செய்வார்" என வேதம் கூறுகிறது (சங்.37:4). தேவனை நம் ஜீவியத்தின் மையத்தில் வீற்றிருக்கச் செய்வதே, கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிருப்பதாகும். இவ்விதமாய் தேவனை-மையமாகக் கொண்டு வாழும் மனிதனே தன் இருதயத்தின் வாஞ்சைகள் யாவும் பெற்றுவிட்ட மனிதனாக இருப்பான்! மேலும், "உத்தமமாய் நடப்பவர்களுக்கு (நேர்மையாய் **தலைதூக்கி** நடப்பவர்கள் - அதாவது **தேவனையே தங்கள் ஜீவியத்தில் தலையாக** இருந்து ஆளும்படி செய்தவர்களுக்கு), கர்த்தர் நன்மையை வழங்காதிரார்" என்றும் வாசிக்கிறோம்! (சங்.84:11)

யாக்கோபு 5:16, "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாய் இருக்கிறது" என கூறுகிறது. ஆம், தேவனை மையமாகக் கொண்ட அந்த நீதிமானே, தன் ஜெபத்திற்கு பலனைக் காண்பவனாவான்! இதற்கு மாறாக சுயத்தை மையமாகக் கொண்ட மனிதனின் ஊக்கமான ஜெபம்.... அவன் இராமுழுவதும் ஜெபித்தாலும், ஒரு பலனையும் கொண்டு வராது! நாம் வாழும் வாழ்க்கையின் தரமே, நம் ஜெப வாழ்வின் தரத்தை மெருகூட்டச் செய்கிறது.

எனவேதான் 1) பிதாவே உமது நாமம் பரிசுத்தப்படுவதாக (மகிமைப்படுவதாக) 2) உமது இராஜ்ஜியம் வருவதாக 3) உமது சித்தம் செய்யப்படுவதாக, ஆகிய இவைகளே நம் ஜீவியத்தின் முதல் இடத்தை வகிக்கும் மூன்று பிரதான விருப்பங்களாய் இருக்க வேண்டும்.

நம் ஜீவியத்தில், "ஆண்டவரே என் முதுகு வலியை சுகமாக்கும், நான் ஜீவிப்பதற்கு ஓர் நல்ல வீட்டை எனக்குத் தாரும், என் மகனுக்கு ஓர் வேலை கிடைக்க உதவி செய்யும்...." போன்ற ஏராளமான விண்ணப்பங்கள் நமக்கு இருக்கலாம். இவைகள் நல்ல விண்ணப்பங்கள் தான். ஆகிலும் நீங்கள், "பிதாவே எனக்கு நீர் இந்த விண்ணப்பங்களுக்குப் பதில் தராவிட்டாலும் பரவாயில்லை .... என் பிரதான விருப்பமெல்லாம், எப்படியாகிலும் உம்முடைய நாமம் மகிமைப்பட வேண்டும்..... அதுபோதும்" எனவும் உங்களால் ஜெபித்திடக் கூடுமோ? அப்போது மாத்திரமே, நீங்கள் ஓர் ஆவிக்குரிய மனிதனாய் இருப்பீர்கள்!

**தேவனுடைய நாமமே மகிமைப்படுதல் வேண்டும்!**

"உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்ற இம்முதல்

விண்ணப்பத்தின் பொருள் யாது? பரிசுத்தம்; பரிசுத்தமாகுதல்; பரிசுத்தவான்கள்; ஆகிய புதிய ஏற்பாட்டின் உன்னத வார்த்தைகளின் பிறப்பிடத்திலிருந்துதான், "பரிசுத்தப்படுவதாக!" (மகிமைப்படுவதாக) என்ற வார்த்தையும் தோன்றியுள்ளது. இதன் நேரடிப் பொருள் யாதெனில் "தனியே பிரிக்கப்படுவதாக!" (Set apart) என்பதுதான். அதாவது, **தீமையும் அசுத்தமுமான யாவற்றிலிருந்தும் பிரித்தெடுக்கப்படுவதாக** என்பதே இதன் பொருளாகும். எனவே இங்கு ஏறெடுக்கப்படும் விண்ணப்பம் யாதெனில், "பிதாவே, உம்முடைய நாமம் பயப்படவும், பக்தி செலுத்தப்படவும், கனமடையவும், மகிமைப்படவுங்கடவதாக" என்பதே. கர்த்தருடைய ஜெபத்தில் 'இந்த விண்ணப்பமே' முதலிடத்தை வகிக்கிறபடியால் நம் இருதயத்தின் மேலோங்கிய வாஞ்சையும், **தெய்வபயம்** இப்பூமியில் என்றும் நிலைத்திருக்க வேண்டுமென்பதாகவே இருத்தல் வேண்டும்! உங்களைக் குறித்து என்ன? தெய்வபயத்தால் நிறைந்து இப்பூமியில் வாழ்வதே உங்களுடைய வாஞ்சையாயுமிருக்கிறதா?

மனுஷனுடைய அக்கிரமத்தைத் தொகையிட்டு ஒரே வசனமாக, "அவர்கள் கண்களுக்கு முன்பாக தெய்வபயமில்லை" என ரோமர் 3:18-ம் வசனம் கூறுகிறது. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி.1:7). அதாவது, தெய்வபயமே கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்ப அரிச்சுவடியாகும். இந்த ஆரம்ப ABC பாடத்தைக்கூட நீங்கள் கற்றுக் கொள்ளாவிடில், வரையியல் (Geometry), இரசாயனம், பௌதீகம் ஆகிய உயர்ந்த பாடங்களை எங்ஙனம் கற்றுக்கொள்வீர்கள்? எனவே தெய்வபயம் கொண்டிருப்பதாகிய ஆரம்ப கிறிஸ்தவ ஜீவியத்தின் ABC பாடங்களைக் கற்றுக்கொள்ளாத ஒருவன், ஒருக்காலும் ஆவிக்குரிய வளர்ச்சியை அடைந்திடவே மாட்டான்!

நம்முடைய ஆவிக்குரிய தன்மையை அறிந்துகொள்ள ஓர் நல்ல பரிசோதனை உள்ளது. அதாவது, நம்முடைய பெயரைவிட தேவனுடைய பெயரின்மேல் அல்லது அவரது நாமத்தின்மேல் நாம் அதிக அக்கறை கொண்டிருக்கிறோமா? என்ற கேள்வியே அந்த பரிசோதனை. யாரோ ஒருவர், உங்கள் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்துவதைக் கேள்விப்படும் நீங்கள் எங்ஙனம் அந்நிகழ்ச்சிக்குப் பிரதிபலிப்பீர்கள்? வெகுண்டு எழுவீர்களோ...? அதே சமயம், இயேசுவின் நாமத்திற்கு இழுக்கு ஏற்படுவதை உணரும் நீங்கள், அந்நிகழ்ச்சிக்கு எங்ஙனம் பிரதிபலிப்பீர்கள்? ஆம், இன்று புறஜாதியார் மத்தியில், தங்களை தேவ ஜனம் என சொல்லிக் கொள்பவர்களின் துன்மார்க்க ஜீவியத்தின் மூலமாக தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுவதால் நீங்கள் உண்மையாகவே விசனமடைகிறீர்களா? இப் பாரத தேசத்தில் இயேசுகிறிஸ்துவின் நாமம் இவ்வாறு தூஷிக்கப்படுவது உங்களைப் பாதித்திருக்கிறதா? நம் தேசத்தில் தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டுமே என்ற பாரத்தோடு நீங்கள் என்றாவது ஆண்டவருக்கு முன் முழங்கால்படியிட்டதுண்டா? இவைகள்

*தான் உங்கள் ஆவிக்குரிய தன்மையை நிதானித்து அறியும் பரிசோதனைகளாகும்!*

*அத்தேனே பட்டணம் முழுவதும் விக்கிரகங்களால் நிறைந்து, அங்கிருந்த ஜனங்கள் விக்கிரகாராதனை செய்ததைக் கண்ட பவுல், தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்தான் என அப்.17:16 கூறுகிறது. அவன் அவ்வளவாய் சாத்தான் மீது கடுங்கோபம் கொண்டவனாய் இருந்தான். நீங்களும், மெய்யாகவே பரிசுத்தாவியால் நிறைந்திருப்பீர்களென்றால், நம் தேசத்தில் விக்கிரகாராதனை நிறைந்திருப்பதைக் கண்டு, பவுலைப் போலவே சாத்தானுக்கு எதிராக மிகுந்த கோபத்தால் நிறைந்துவிடுவீர்கள்!*

*தேவாலயத்தில் 'தேவனுடைய பெயரால்' பணம் சம்பாதித்துக் கொண்டிருந்த ஜனங்களைக் கண்ட இயேசு, தன் ஆவியில் கடுங்கோபம் கொண்டு எழுந்ததைப் பார்க்கிறோமே! நீங்களும் நானும் தேவனுடைய இசை நாணுக்கு* (Tune) *சமமாய் முடுக்கப்பட்டிருந்தால், இன்றும் நம் தேசத்தில் கிறிஸ்துவின் நாமத்தில் பணம் சம்பாதிப்பவர்களைக் கண்டு நாம் கடுங்கோபம் கொள்வோம் என்பதில் சந்தேகமேயில்லை!*

**சகலமும் தேவனுடைய மகிமைக்காகவே செய்யப்பட வேண்டும்!**

*2 இராஜாக்கள் 17:33, "அவர்கள் கர்த்தருக்குப் பயந்தும் (அதே சமயத்தில்) தாங்கள் விட்டுவந்த ஜாதிகளுடைய முறைமையின்படியே தங்கள் தேவர்களை(யும்) சேவித்தும் வந்தார்கள்"* என்ற வசனத்தைச் சிந்தித்துப் பாருங்கள். இன்று, தேவனை ஆராதிக்கிறோம் எனக்கூறும் ஜனங்களோடு இவ்வசனத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். ஆம், ஞாயிற்றுக் கிழமைகளில் இவர்கள் தேவனை ஆராதித்துவிட்டு மற்ற எல்லா நேரங்களிலும் தங்கள் சொந்த விக்கிரகங்களையே ஆராதிக்கிறார்கள்!

இன்று நாம், வேதம் வாசித்தல்; ஜெபித்தல்; கைப்பிரதி விநியோகித்தல்; பிரசங்கித்தல் முதலானவைகளையே பரிசுத்தமான கிரியைகள் என எண்ணுகிறோம்! புசித்தல், குடித்தல், உறங்குதல், பேசுதல், கடைக்குச் சென்று பொருள் வாங்குதல் ஆகிய இவைகளைப் போய் லௌகீக கிரியைகள் எனக் கருதும் நிலைக்கு ஆளாகி விட்டோம்! இவ்வித மாறுபட்ட கருத்தின் விளைவாக, **மார்க்க சம்பந்தமான கிரியைகளே** (Religious Activities) தேவனுடைய மகிமைக்காக செய்யப்படும் கிரியைகள் என்று நீங்கள் எண்ணும் படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. ஆகவேதான், இவ்வித மார்க்க கிரியைகளை நிறைவேற்றிய பின்பு நீங்கள் உங்கள் இல்லத்திற்கு திரும்பி **வேறொரு ஜீவியம்** (!) செய்யவும்; ஜனங்களோடு சேர்ந்து புறங்கூறவும்; கோள் சொல்லவும்; வாக்குவாதம் செய்வதுமாய் வாழலாம் என எண்ணிக் கொள்கிறீர்கள். சில நாட்கள் கழித்து நீங்கள் கூட்டங்களுக்குச் செல்லும்போது நீங்கள் மறுபடியும் பரிசுத்தமாக வேண்டுமே என மீண்டும் நினைக்க ஆரம்பிக்கிறீர்கள். இவையெல்லாம் என்ன? வெறும்

*மாய்மாலம்! ஆம், "நீங்கள் புசித்தாலும், குடித்தாலும்,* **எதைச் செய்தாலும்** *எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" என்றே வேதவசனம் மிக அழகாகப் போதிக்கின்றது (1கொரி.10:31). நம் ஜீவியத்தில் நாம் ஈடுபடும் ஒவ்வொரு சிறிய கிரியைகள்கூட தேவனுடைய மகிமைக்காகவே செய்யப்பட வேண்டும்!*

*'ப்ரூத்தர் லாரன்ஸ்'* (Bruther Lawrance) *என அழைக்கப்பட்ட 'நிக்கொலோஸ் ஹெர்மன்'* (Nicholas Herman) *பல வருடங்களாக ஓர் ஆசிரமத்தில் சமையற்காரராக பணிபுரிந்தார். அந்நாட்களில் அவர் கூறிய வாசகங்களைக் கேளுங்கள்: "நான் முழங்காற்படியிட்டு கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்போது உணரும் பரிசுத்தமான தேவப் பிரசன்னத்தை .... நான் சமையற்கட்டில் வேலை செய்யும் போதும், என்னைச் சுற்றிலும் குவிந்துகிடக்கும் சாப்பிட்ட தட்டுகளை கழுவும், "டிங் ... கடகட ... டிங்" என்ற பெருத்த ஓசையின் மத்தியிலும் அதே தேவப்பிரசன்னத்தை என்னைவிட்டு விலகாமல் பாதுகாத்திட என்னால் முடிகிறது" எனக் கூறினார். இவ்வாறு தாங்கள் செய்யும் யாவுமே "பரிசுத்தமானதுதான்" என உணருபவர்களே கர்த்தருடைய சமூகத்தில் என்றென்றும் ஜீவிப்பார்கள்!*

**சரியான நோக்கத்தோடு ஜெபித்தல்!**

*ஆண்டவர் நமக்கு ஜெபிக்கக் கற்றுத் தந்த விண்ணப்பத்தை சரியாகப் புரிந்துகொண்டோமானால், ஜெபத்தில் நம்முடைய நோக்கங்களும் சீர்செய்யப்பட்டுவிடும். ஏனெனில் இன்று அநேக ருடைய ஜெபங்களுக்கு பதில் கிடைக்காமலிருப்பதற்குக் காரணம், அந்த ஜெபங்கள்* **தவறான நோக்கங்களோடு** *ஏறெடுக்கப்பட்டதினிமித்தமே ஆகும். ஆனால் ஒருவன் உண்மையாகவே, "உம்முடைய நாமம் மகிமைப்படுவதாக" என ஜெபித்து அதுவே தன்னுடைய பிரதானமான விண்ணப்பமாக கொண்டிருப்பானென்றால், அப்படிப்பட்ட ஒருவன் தன் ஜெபங்களில் ஒருபோதும் தவறான நோக்கத்தை வைத்திருக்க மாட்டான்! அவனுடைய ஜெபமோ, "ஆண்டவரே என்னுடைய சூழ்நிலைகள் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்! நீர் என்னுடைய ஜெபங்களுக்குப் பதில் கொடாமற் போனாலும் பரவாயில்லை. ஆனால் உம்முடைய நாமம் எப்படியாகிலும் மகிமைப்பட வேண்டும்" என்பதாகவே இருக்கும்.*

*தாவீது ராஜா, தேவனுக்கு ஒரு ஆலயம் கட்டும்படி பேராவல் கொண்டிருந்தான். இந்த விருப்பம் மிக நல்ல விருப்பமே ஆகும். ஆனால் 2சாமுவேல் 7:12,13 வசனங்களில், "நீ அல்ல! உன் குமாரனாகிய சாலொமோனே எனக்கு ஆலயத்தைக் கட்டுவான்" என தேவன் கூறி விட்டார். இந்த பதிலைக் கேட்டவுடன் தாவீது மனக்கசப்பு அடைந்து விடவில்லை! அவன் முறுமுறுக்கவும் இல்லை. அவன் தேவனிடம் கூறியதெல்லாம், "தேவரீர்! உம்முடைய நாமம் என்றென்றைக்கும்*

*மகிமைப்படுவதாக!" என்பதாக இருந்தது. தாவீதின் இந்தச் செயலே நாம் எல்லோரும் பின்பற்ற வேண்டிய நல்ல மாதிரியாகும் (2சாமு.7:26).*

*இன்று நீங்கள், "பரம பிதாவே, எங்கள் தேசத்திற்கு பரிசுத்தத்தின் எழுப்புதலை அனுப்பும்! நீர் அந்த எழுப்புதலை வேறொரு சபை மூலமாக துவக்க விரும்பினாலும் அது எனக்கு மெத்த பிரியமே! எப்படியாகிலும் பரிசுத்தத்தின் எழுப்புதல் உண்டாகட்டும். இந்தப் பரிசுத்தத்தின் எழுப்புதலில் என்னை உபயோகிக்காமல் நீர்* **வேறு யாரைக் கொண்டு** *உபயோகித்தாலும் அதுவும் எனக்குச் சம்மதமே! ஆம், எவ்விதமாகிலும் உம்முடைய நாமம் மகிமைப்பட வேண்டும்" என உங்களால் ஜெபித்திட முடியுமா?*

*"பிதாவே,* **எப்படியாகிலும்** *உம்முடைய நாமம் மகிமைப்படட்டும்" என நீங்கள் உண்மையாகவே ஜெபிக்க முடியுமென்றால், உங்களுக்குள் இருக்கும் ஏராளமான சுயநல நோக்கங்கள் விரட்டியடிக்கப்பட்டு விடும்! இது உண்மை!*

**பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்துதல்!**

*இயேசு மொழிந்த வார்த்தைகளை நினைத்துப் பாருங்கள். அவர், "மனுஷகுமாரன் ஓர் கோதுமைமணி போல பூமியிலே விழுந்து மனுஷர்களால் மிதிக்கப்பட்டு மரிக்கும் நேரம் வந்தது. நான் என்ன சொல்லுவேன்? பிதாவே இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ? இல்லை பிதாவே,* **எப்படியாகிலும், எனக்கு மரணமே நேரிட்டாலும்** *உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்றே கூறினார் (யோவான் 12:24,27,28 விரிவாக்கம் செய்யப்பட்ட வசனம்).*

*இயேசு, தான் பிரசங்கித்ததை நடைமுறையில் ஜீவிக்கவும் செய்தார். தனக்கு மரணமே நேரிட்டாலும் பிதாவின் நாமம் மகிமைப்படுவதையே எப்போதும் விரும்பினார்!*

*எனவேதான் அவர் தன் உலக வாழ்வை முடிக்கும் வேளையில், "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்" என தன் பிதாவிடம் அவர் கூற முடிந்தது!! (யோவான் 17:4)*

*இந்த மேலான தரத்திற்கு அநேக விசுவாசிகள் தங்கள் ஜீவிய காலத்தில் வளர்வதே இல்லை. ஆம், தேவனை மையமாகக் கொண்டு வாழும் இவ்வித அற்புதமான வாழ்க்கையைக் குறித்து, முற்றிலும் அறியாமையிலேயே ஜீவிக்கிறார்கள். எனவேதான், ஒருவன் "மெய்யான ஆவிக்குரியவனாய் இருப்பதின்" அர்த்தம் இன்னதென்று அறியாதிருக்கிறார்கள். பரலோகத்தைப் பாருங்கள். அங்கே வாழுகின்ற ஒவ்வொருவருடைய ஜெபமும், "ஆண்டவரே! உம்முடைய நாமம் மகிமைப்படுவதாக!!" என்பதாகவே இருக்கிறது. இப்பரலோக ஆவியில்* **இன்று** *நாம் பங்குபெறாவிட்டால்* **நித்திய நித்திய காலமாய்** *நாம் எங்ஙனம் பரலோகத்தில் வாசம் செய்யமுடியும்? இந்தப் பூமியிலேயே, நாம்*

*பரலோகத்தின் ஆவியில் பங்குபெற வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார்! இதனிமித்தமே இந்த நல்ல ஆண்டவர் நமக்குப் பரிசுத்தாவியைத் தந்துள்ளார். இறுதியாக, "கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும்* **அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும்** *ஞாபக புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது" என மல்கியா* ***3:16*** *கூறுவதைப் பாருங்கள். பார்த்தீர்களா! தனக்குப் பயந்து தன்னுடைய நாமத்தின்மீது கரிசனை கொண்டவர்களின் பெயர் பட்டியலை தேவன் வைத்திருக்கிறார்!! இப்படிப்பட்ட ஜனங்களை, தேவன் எவ்விதம் கொண்டாடி மகிழ்கிறார் தெரியுமா? அவர்களைப் பார்த்து "என் சம்பத்துக்கள்" என்றும் "என் விசேஷப் பொக்கிஷங்கள்" என்றும் "தான் விரும்பும் ஆபரணங்கள்" என்றும் அழைத்துப் பூரிப்படைகிறார் (வசனம் 17).*

*என் முழு இருதயத்தோடு நான் கூற விரும்புவதெல்லாம்,* "**எப்படியாகிலும்** (at any Cost) *தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும் என வாஞ்சிப்பவர்களுக்காகவும்; அவருக்குப் பயப்படுகிறவர்களுக்காகவும்; அவருடைய நாமத்தின்மீது கரிசனை கொண்டவர்களுக்காகவும் தேவன் வைத்திருக்கும் ஞாபகப் புத்தகத்தில் என்னுடைய பெயரும் காணப்பட வேண்டும்" என்பதே என் வாஞ்சையாய் இருக்கிறது! மூன்றாவது விண்ணப்பத்தின் கடைசியில் காணும்... "பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்ற வாக்கியம் முதல் மூன்று விண்ணப்பங் களுக்கும் பொருந்தும்! எனவே இப்போது நம்முடைய ஜெபமாக இருக்க வேண்டியது யாதெனில் : "அன்புள்ள தகப்பனே! உம்முடைய நாமம் பரலோகத்தில் மகிமைப்படுவதுபோல பூமியிலேயும் மகிமைப்படுவதாக! எவ்விதம் தூதர்கள் உமக்குப் பயந்து தங்கள் முகங்களை மூடி மறைத்துக்கொண்டு 'பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்' என உம்மை ஆராதிக்கிறார்களோ* **அதேபோல** *நானும் என் சக விசுவாசிகளும் உமக்குப் பயந்து உம்மை எந்நாளும் பரிசுத்த அலங்காரத்துடன் பக்தி செலுத்திடவே பேராவல் கொண்டு வாஞ்சிக்கிறோம்! ஆமென்!" என்பது மாத்திரமே.*



# 4

## தேவனுடைய ராஜ்யம்

### "உம்முடைய ராஜ்யம் வருவதாக"

உண்மையான இரட்சிப்பு, சுயம்-மையம் கொண்ட வாழ்விலிருந்து நாம் விடுதலையாவதற்குரிய ஓர் பெரிய தாகத்தை நம்மில் உண்டாக்கி விடும். இதனிமித்தம் நம் ஜீவியத்தில் **தேவன் ஒருவரே–மையம்** கொண்டிருப்பார். மேலும் நம் ஜெப விண்ணப்பங் களிலும் தேவனே மையமாக இருப்பார்! எனவே ஒரு காலத்தில் தவறான பாதையில் கோணலாகச் சென்று கொண்டிருந்த நம்மை தேவன் சரியான பாதைக்கு இப்போது வளைத்துக் கொண்டுவந்து விட்டார்! **இப்போது** நாம் தீராத ஏக்கம் கொண்டு நம் ஜீவியத்தில் ஒவ்வொரு பகுதியிலும் தேவனையே முதன்மையாக வைத்திட வாஞ்சை பெற்று விட்டோம்!

ஒருவன் சுயம்-மையம் கொண்ட தன் வாழ்க்கையை வெறுத்து முற்றிலுமாய் தேவன் தன் வாழ்வில் மையம் கொண்டிருப்பதை வாஞ்சிப்பதுதான் ஓர் உண்மையான ஆவிக்குரிய தன்மைக்கு என்றென்றும் மாறாத அத்தாட்சியாகும்.

தான் தேவனில் மையம் கொண்டிருப்பதை வாஞ்சித்து அவரைக் கிட்டிச்சேரும் ஒருவன், "பரமண்டலங்களிலிருக்கிற என் அன்புள்ள தகப்பனே, என் இருதயத்தின் ஏக்கமெல்லாம் உம்முடைய நாமம் இப்பூமியின் எல்கையெங்கும் பயப்படவும்; பக்தி செலுத்தப்படவும் வேண்டுமென்பதுதான்!" என ஜெபித்திடுவான். இவ்விதம் ஜெபித்த அந்த மனிதன், தேவனுடைய நாமம் இப்பூமியில் பயப்படவும் பக்தி செலுத்தப்படவும் இல்லை என்பதை வெகுசீக்கிரத்தில் அறிந்து கொள்ளுவான். ஆகவே அவன் உடனடியாக அடுத்த வேண்டுகோள் செய்யும்படி, "அன்புள்ள தகப்பனே! நீரே இப்பூமியில் வந்துவிடும்! இப்பூமியில் **உம்முடைய ராஜ்ஜியத்தை ஸ்தாபித்துவிடும்!** அப்பொழுது தான் பூமியிலுள்ள சகல குடிகளும் உமக்குப் பயந்து உம்மில் பக்தி செலுத்தவும் செய்வார்கள்" என கூறி ஜெபித்திடுவான். இந்த ஜெபத்தைத்தான் எல்லா தேவபுருஷர்களும், ஸ்திரீகளும் சுமார் 1900 ஆண்டுகளாக ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆம், இந்த ஜெபம் பதிலளிக்கப்படும் நாள் இப்போது மிகமிக நெருங்கிவிட்டது!

**உன்னதமானதோர் நீதியின் இராஜ்ஜியம்!**

உம்முடைய ராஜ்யம் வருவதாக என்ற ஜெபத்தை, இவ்வுலகத்தின் பொல்லாத தீமைகளைக் கண்டு சலித்தவர்கள் மாத்திரமே ஜெபித்திட

முடியும். “நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்” என பேதுரு வாஞ்சையோடு கூறிய இவ்வசனத்தை எண்ணிப்பாருங்கள் (2 பேதுரு 3:13).

இன்று இவ்வுலகத்தை நிறைத்திருக்கும் பயங்கர கொடூரத்தையும் (VIOLENCE) சீர் கெட்டு சீரழிந்திருக்கும் கற்பு ஒழுக்கத்தையும் (IMMORALITY) சற்று ஏறிட்டுப்பாருங்கள். இன்று நாம் செய்தித்தாள்களைப் படிக்கும்போது நம் இருதயத்திலிருந்து “ஆ, என் பிதாவே! உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக! என் தனிப்பட்ட சௌகரிய வாழ்விற்காக உம்முடைய ராஜ்ஜியம் வர நான் விண்ணப்பிக்கவில்லை. மாறாக, வெகு சீக்கிரத்தில் உம்முடைய நீதியின் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டு, உம்முடைய மகிமைக்கென்றே படைக்கப்பட்ட இந்த பூமியில் உம்முடைய நாமம் என்றென்றும் மகிமைப்பட்டிட வேண்டும்!” என்ற ஜெபமே புதுவெள்ள மெனப் பொங்கியெழுந்திட வேண்டும்! கடைசி நாட்கள் நோவாவின் நாட்களைப்போல் இருக்கும் என இயேசு கூறினார். அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த முழு உலகத்திலும், நீதியுள்ள ஓர் தனி மனிதனாக **நோவா** அன்று காணப்பட்டார். அவர் தன்னைச் சுற்றி வாழ்ந்த மனிதர்களின் பொல்லாத பாவங்களைக் கண்டு தன் மனதில் வேதனை கொண்டவராய் **நீதியைப்** பிரசங்கித்தார் (2 பேதுரு 2:5). இந்த நோவா தன் இருதயத்தின் ஆழத்தில் நீதி வாசம் செய்வதை வாஞ்சிக்கவும், அதைப் பிரசங்கிக்கவும் செய்தார். தான் பிரசங்கித்த நீதியை, “உலகத்தோடு ஒத்துப்போகும் ஒத்தவேஷம், கவ்விக் கொள்ளாதபடி நீதியை ஆணித்தரமாகப் பிரசங்கித்தார்”. அன்றிருந்த ‘நோவாவின் ஜெபமும்’ “உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக!” என்றே இருந்திருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

இன்று எல்லா விசுவாசிகளுமே, “கிறிஸ்து சீக்கிரமாக திரும்ப வருவார் என்றும், இப்பூமியில் தன் ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்றும்” கூறத்தான் செய்கிறார்கள். ஆனால் இவ்விதம் அவர்கள் கூறுவதை உண்மையாகவே விசுவாசிக்கிறார்களா என்பதைக் கண்டுகொள்வதற்கு என்ன **அத்தாட்சி** இருக்கிறது? இங்கு 1 யோவான் 3:3-ல், “அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்” என்ற அத்தாட்சியோடு வசனம் பறைசாற்றப் பட்டிருப்பதைப் பாருங்கள். ஆகவே கிறிஸ்து இப்பூமிக்கு திரும்ப வருவார் என உண்மையாகவே ஒருவன் விசுவாசிக்கிறானா என்பதற்கு அத்தாட்சி, “தன் மணவாளனுக்காகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் ஓர் மணவாட்டியைப்போல் துரிதமாய் ஆயத்தப்படுவதே” அந்த அத்தாட்சியாகும். இதன் பொருள் யாதெனில், ஒருவன் இவ்வுலகில் **இப்பொழுதே** ஓர் தூய்மையான வாழ்க்கை வாழ்வது, தன் கடன்களை யெல்லாம் திரும்பச் செலுத்துவதும், தன் வாக்குவாத சண்டைகளுக் கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதுமாகும்! அதாவது, இவன், தன் ஆண்டவர் சுத்தமாயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக்

கொள்ளுகிறான். இத்தகைய மனிதன் மாத்திரமே, "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என நெஞ்சார ஜெபித்திட முடியும்.

இதற்கு மாறாக, ஒருவன் கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தப் படுவதற்கு **தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளாமலேயே** இந்த அருமையான ஜெபத்தை ஜெபிப்பானென்றால் - அந்த ஜெபம் வெறும் சடங்காச் சாரமான ஜெபமே ஆகும்!

**ஆண்டவரின் வருகைக்காக ஒருவன் தன்னை தொடர்ச்சியாக ஆயத்தப் படுத்துதல்!**

இன்று கிறிஸ்தவத்தில் காணப்படும் சில ஸ்தாபனங்களில் "தேவரீர் சடிதியான மரணத்தினின்று எங்களைத் தப்புவியும்" என ஜெபிக்கும் ஜெபத்தை, தாங்கள் வழக்கமாய் ஜெபிக்கும் ஜெப புத்தகத்தில் சேர்த்துள்ளார்கள். மனந்திரும்பி குணப்படாத ஓர் மனிதன், தன்னைப் போலவே மனந்திரும்பாமலிருக்கும் அநேகருக்காக எழுதி வைத்ததே இந்த ஜெபமாகும்! ஆம், சுயம்-மையம் கொண்ட வாழ்க்கை வாழும் மனுஷர்களுக்கே , தாங்கள் மரிப்பதற்கு முன்பாக ஓர் கணிசமான நேரம் தேவையாயிருக்கிறது! ஏனெனில் இவர்கள் தங்கள் சிருஷ்டிகரை சந்திப்பதற்கு முன்பாகத் தங்கள் வாக்குவாதங்களை ஒப்புரவு செய்வதற்கும்; தாங்கள் வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கும்; இன்னும் இதுபோன்ற பல காரியங்களைச் சீர் செய்வதற்கும் இவர்களுக்கு கால அவகாசம் தேவையாயிருக்கிறது. இவர்கள், தாங்கள் செழித்து நன்றாய் இருக்கும்போதெல்லாம் இவ்விதப் பிரச்சனைகளைத் தீர்த்து முடிப்பதற்கு ஆர்வமற்றவர்களாய் ஜீவித்தார்கள்! பார்த்தீர்களா.... இப்படிப்பட்ட ஜனங்களிடம் தெய்வ பயம் என்பது ஒரு துளிகூட இருக்காது! இப்படிப்பட்டவர்கள் சுயம்-மையம் கொண்ட கேவலமான தங்கள் வாழ்விலிருந்து மனந்திரும்பினா லொழிய ஒருக்காலும் குணப்படவே முடியாது. இதுபோன்ற ஜெப புத்தக வாசகங்களையெல்லாம் ஓர் உண்மையான கிறிஸ்தவன் ஜெபித்திட வேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில் அவன் எப்போதுமே ஆயத்தமாய்தான் இருக்கிறான்! அவன் ஜீவியத்தின் நடைமுறைக் கணக்குகள் எப்போதுமே அன்றன்று தீர்க்கப்பட்டதா யிருக்கும்!

நாம் வாழும் இக்கொடிய காலத்தில், நாமோ, எந்நேரத்திலும் எவ்வேளையிலும் 'கர்த்தரின் சமூகம் செல்ல' ஆயத்தமுள்ளவர்களாய் இருந்திட தேவன் நமக்கு அருள்புரிவாராக!

தேவனுடைய ராஜ்யம் இப்பூமிக்கு வர வேண்டுமென நாம் உண்மையாகவே ஆர்வம் கொண்டிருக்கிறோமா? இல்லையா என்பதை எப்படி அறிந்துகொள்ள முடியும்? அதற்கு உதாரணமாய் உங்கள் வீட்டின் வாழ்க்கையை (Home Life) எடுத்துக்கொள்ளுங்கள்! நீங்கள் இப்போது வீட்டில் அமர்ந்திருக்கிறீர்கள்! நீங்கள் எழுந்து உங்கள் வீட்டு ஜன்னல் வழியாய் வெளியே பார்க்கிறீர்கள். அங்கே வீதியிலிருந்து இயேசு

கிறிஸ்துவே உங்கள் இல்லத்திற்கு வருவதைக் கண்டுவிட்டீர்கள்! இப்போது உங்கள் நடவடிக்கைகள் என்னவாயிருக்கும்? இச்சமயம் நீங்கள் துரிதமாய் செய்திடும் நடவடிக்கையே, தேவனுடைய ராஜ்ஜியம் இப்பூமியில் வருவதற்கு ஆயத்தமாயிருக்கிறீர்களா? இல்லையா? என்பதை அறிந்துகொள்ளும் ஓர் நல்ல பரீட்சையாகும். நீங்கள் இயேசுவைக் கண்ட மாத்திரத்தில், உங்கள் புத்தக அலமாரியிலுள்ள சில புத்தகங்களை இயேசு கண்டுவிடாதபடி அவைகளை மிகுந்த பதட்டத்தோடு மறைக்க வேண்டியதுள்ளதா? ஒருவேளை நீங்கள் உங்கள் வீட்டில் 'டெலிவிஷன்' வைத்திருப்பீர்களென்றால், அதையும் விரைந்து சென்று மறைக்க வேண்டியிருக்கும்! நடந்துவந்த இயேசு இப்போது வீட்டுக்குள் பிரவேசித்து அமருகிறார். இப்போது நீங்கள் வழக்கமாய் சாப்பாட்டு மேஜையை சுற்றி உட்கார்ந்துகொண்டு புறங்கூறும் வம்பான கதைகளையெல்லாம் ஒரு துளிகூட சம்பாஷித்து விடமாட்டீர்கள்!? இவ்விதம் இயேசு உங்கள் வீட்டில் தங்கியிருக்கும் வரை உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களோடும், வேலை செய்பவர்க ளோடும், உங்கள் வழக்கமான சம்பாஷணைகளில் தொனிக்கும் கடுமையான வாசகங்களை யெல்லாம் தவிர்த்துவிட்டு அவர்களிடம் 'அன்பாகவும்' 'மரியாதை யாகவும்' நடந்துகொள்ள விசேஷ கவனம் எடுக்க வேண்டியுள்ளதா? மேலும் இயேசு உங்கள் வீட்டில் அமர்ந்திருக்கும் போது உங்கள் எல்லா நண்பர்களும் வந்து, இயேசுவைச் சந்தித்துப் பேசுவதற்காக நீங்கள் மகிழ்ச்சியடைய முடிகின்றதா? அல்லது இயேசு உங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கும் போது 'குறிப்பிட்ட ஒரு சில நண்பர்கள்' உங்களைச் சந்திக்க உங்கள் வீட்டிற்கு வந்துவிடக் கூடாது என்ற அங்கலாய்ப்பி லுள்ளீர்களா? இன்றுபோலவே இயேசு உங்கள் வீட்டில் சதாகாலமாய் தங்கியிருந்தால் நீங்கள் பேரானந்தம் கொள்ள முடியுமா? அல்லது, அவர் உங்கள் இல்லத்தை விட்டுச் சென்றவுடன்... அப்பாடா! நல்லவேளை போய்விட்டார்! என பெருமூச்சு விடுகிறீர்களா?

இந்நிகழ்ச்சிக்கு உங்கள் நெஞ்சைத் தொட்டு நேர்மையாகப் பதில் கூறுங்கள்!

விசேஷ விருந்தாளிகள் உங்கள் வீட்டுக்கு வந்தவுடன் அவர்களின் "நல்ல அபிப்ராயத்தைப்" பெற விரும்பி 'வழக்கமான' உங்கள் நடவடிக்கைகளைக் காட்டிலும் சற்று வித்தியாசமாக நடக்கிறீர்களே? அப்படியானால், நம் ஆண்டவர் இயேசுவே உங்கள் வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்தால் எத்தனை அதிகமாய் உங்கள் நடவடிக்கைப் பழக்கங்கள் மாறுபட்டிருக்க வேண்டும்! ஆம், ஆண்டவர் இயேசு உங்கள் வீட்டில் ஒவ்வொருநாளும் தங்கி வசிப்பதை விரும்பா மலிருக்கும் போது, "உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக" என நீங்கள் ஜெபிப்பதெல்லாம் வெறும் பித்தலாட்டமே! ஏனெனில், தேவனுடைய ராஜ்ஜியத்தில் நம் நேசர் இயேசு, கர்த்தாதி கர்த்தாவாக சில நாட்கள் அல்ல... சதாகாலமும் வீற்றிருப்பாரே! நம் வீட்டில் ஏதோ சில நாட்கள் மாத்திரம் அவர்

தங்கியிருப்பதை மிகுந்த பாரமாக எடுப்போமென்றால், நித்தியத்தில் அவரோடு சதா எங்ஙனம் வாழ முடியும்?!

**பரலோகத்தில் சேர்த்துவைக்கும் பொக்கிஷங்கள்!**

தன் மனதையும், தன் விருப்பங்களையும், தன் முழு வாஞ்சைகளையும் மேலானவைகளில் வைத்திருப்பவன் மாத்திரமே, "உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக" என உண்மையாக ஜெபித்திட முடியும். இப்படிப்பட்டவன் கிறிஸ்தவத்தையும், பரிசுத்தத்தையும் ஏதோ ஒரு ஆடையைப்போல மேற்பூச்சாக உடுத்தியிருக்க மாட்டான். மாறாக, இவனுடைய ஆவிக்குரிய தன்மையானது மிக ஆழமாய் அவனுடைய நாடி நரம்புகளில் இழையோடிச் சென்றிருக்கும். இவன், தன் பொக்கிஷங்களைப் பூலோகத்தில் அல்ல, பரலோகத்தில் சேர்த்துக் குவித்திடவே தீராத நாட்டம் கொண்டிருப்பான்!

ஓர் கிறிஸ்தவன் தேவனுடைய ராஜ்ஜியம் வருவதற்கு பேராவல் கொண்டிருக்கிறானா? இல்லையா? என்பதைக் கண்டுகொள்ளுவதற்கு, 'பணத்தின்மீது' அவன் கொண்டிருக்கும் மனோபாவத்தை வைத்து அவனது ஆவிக்குரிய தராதரத்தை நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

ஒரு சமயம், ஒரு விவசாயி தன் மனைவியைப் பார்த்து, "நம் வீட்டுப் பசு, இரண்டு குட்டிகள் போட்டிருக்கிறதே! அவைகளில் ஒரு கன்றுக்குட்டி வெள்ளையாகவும், இன்னொரு கன்றுக்குட்டி ப்ரவுன் (Brown) நிறமாகவும் உள்ளது. இவைகள் வளர்ந்தவுடன் ஏதாவது ஒரு கன்றுக்குட்டியை நம் ஆண்டவருக்கு கொடுக்கலாம்!" எனக் கூறினான். உடனே அவனுடைய மனைவி, "நீங்கள் ப்ரவுன் நிற கன்றுக் குட்டியையா? அல்லது வெள்ளைநிற கன்றுக்குட்டியையா எதை ஆண்டவருக்குத் தரப்போகிறீர்கள்?" எனக் கேட்டாள். அதற்கு அந்த விவசாயி, "இக்கன்றுக்குட்டிகள் வளர்ந்தபின்பு அதைக்குறித்து முடிவு செய்வோம்" என பதில் கூறிவிட்டான். அதேபோல இரண்டு கன்று குட்டிகளும் கொழு கொழு என்று வளர்ந்துவிட்டன! திடீரென்று, மிகுந்த வருத்தமான முகத்தோடு விவசாயி தன் வீட்டிற்குத் திரும்பி வந்தான். அவன் தன் மனைவியைப் பார்த்து, "ஓர் துக்கமான செய்தி.... 'ஆண்டவருடைய' ப்ரவுன் கன்றுக்குட்டி செத்துவிட்டது!" எனக் கூறினான். உடனே அவன் மனைவி தன் கண்களை அகல விரித்து, "நாம் தான் எது ஆண்டவருடைய கன்றுக்குட்டி என முடிவு செய்யவில்லையே? அப்படியிருக்க இறந்த ப்ரவுன் நிற கன்றுக்குட்டிதான் ஆண்டவருடைய கன்றுக்குட்டி என எப்படி அறிந்தீர்கள்?" என ஆச்சரியத்துடன் வினவினாள். அதற்கு அந்த விவசாயி சற்றும் தாமதியாமல், "அடடா, உனக்குத் தெரியாதா? என் மனதில் ப்ரவுன் நிறக் கன்றுக்குட்டியைத்தான் ஆண்டவருக்குத் தரவேண்டுமென நான் முன்பே எண்ணியிருந்தேன். இப்போது கரெக்ட்டாக அந்தக் கன்றுக்குட்டிதான் இன்று காலையில் செத்துவிட்டது!" என துணிந்து பதில் கூறினான்.

*இன்று இப்படித்தான் அநேக விசுவாசிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு எப்போதுமே, சாகும் கன்றுக்குட்டிதான் ஆண்டவருடைய கன்றுக்குட்டி! இவ்விதமாய், இவர்கள், "தேவனிடத்தில் ஐசுவரியவானா யிராதபடியால்" தங்கள் வாழ்நாள் முழுவதும் ஆவிக்குரிய தரித்திரத்தி லேயே தேங்கித் தங்கிவிடுகிறார்கள் (லூக்கா 12:21).*

*இன்று உங்கள் ஜீவியத்தின் நிலை என்ன? நீங்கள் தேவனுக்கு மிக அருமையானதைக் கொடுக்காததற்கு எப்போதும் ஏதேனும் சில காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களோ? அப்படியானால் உங்கள் இருதயம் எங்கிருக்கிறது என்பதையே உங்களின் நிலை தெளிவாகக் காட்டுகிறது. ஆம், மனுஷருடைய பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கேதான் அவனின் இருதயமும் இருக்கும்!*

**சம்பூர்ண தேவனுடைய ஆளுகை!**

*தேவனுடைய ராஜ்ஜியம் என்பதற்கு "தேவனுடைய அரசாங்கம்" என்பதுதான் சரியான பொருளாகும்.*

*நாம் உண்மையாகவே தேவனுடைய ராஜ்ஜியத்தை வாஞ்சிக்கிற வர்களாயிருந்தால், அவர் ஆளும் ராஜ்ஜியம் (அரசாங்கம்) முதலாவது நம் இருதயத்திலும் .... நம் வீட்டிலும் .... நம் சபையிலும் வருவதற்கு இடங்கொடுத்திருக்க வேண்டும். இந்த மூன்று பகுதிகளிலும், சாத்தானுக்கோ அல்லது மாம்சத்திற்கோ ஒரு துளிகூட இடம் தந்திருக்கவே கூடாது. நம் இருதயத்திலோ அல்லது நம் வீட்டிலோ அல்லது நம் சபையிலோ* **வேறு எதற்கும் இடமிராதபடி** *அவ்வளவாய் தேவனுடைய ராஜ்ஜியம் நம்மை நிறைத்திருக்க வேண்டும்!*

*இப்பூமியில், "தேவனுடைய ராஜ்ஜியம் வலிமையாய்" ஸ்தாபிக்கப் படுவதற்காகவே பரிசுத்தாவியானவர் அருளப்பட்டார் (மாற்கு 9:1). ஒருநாளில், இம் முழு உலகத்தையும் நிரப்பப்போகும் தேவனுடைய ராஜ்ஜியத்தின் மாதிரியாகவே இன்று* **சபை** *இவ்வுலகத்தில் திகழ வேண்டும்!*

*நாம் "முதலாவது" தேவனுடைய ராஜ்யத்தையே தேட வேண்டும் என இயேசு கூறினார். மேலும் இப்பூமிக்குரிய காரியங்கள் ஒன்றைக் குறித்தும் கவலைகொள்ள வேண்டாம் என்றும் கூறினார். அவ்வாறு அவர் கூறியதின் பொருள் யாதெனில், நாம் கவலை கொள்ள வேண்டுமானால், பரமண்டலத்தில் உள்ள தேவனுடைய ராஜ்ஜியம் இப்பூமியில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமே! என்ற கவலை மாத்திரமே நமக்குத் தோன்றிட வேண்டும் (மத்தேயு 6:33). இவ்விதம் சபையின் தூய்மைக் காகவும்; தேவனுடைய ராஜ்யத்தின் வருகைக்காகவும் பாரம்கொண்டு, கவலை கொள்பவர்கள் நம்மில் எத்தனைபேர் உள்ளார்கள்?*



# 5

## தேவனுடைய பரிபூரண சித்தம்

*“உம்முடைய சித்தம்... பூமியிலேயும் செய்யப்படுவதாக”*

*நம்முடைய அன்றாட ஜீவியத்தில் நாம் தேவ சித்தம் செய்திட விரும்பினால் மாத்திரமே, இயேசுவை “ஆண்டவர்” என அழைத் திடவும் முடியும். ஓர் மனிதன் தன் மனதிலும், உணர்ச்சியிலும் தூண்டப் பட்டதால் அல்ல, மாறாக அம்மனிதன்* **தன் சித்தத்தை** *வளைந்து கொடுத்து, “ஆண்டவரே என் சித்தமல்ல, உம் சித்தமே என் வாழ்வில் செய்யப்படட்டும்” எனக் கூறும்பொழுதுதான் அம்மனிதனுக்குள் உண்மையான மாற்றம் ஏற்படுகிறது. தன் ஆண்டவருக்கு முன்பாக இதே மனோபாவத்தை தொடர்ச்சியாகக் காத்துக்கொள்ளும் ஒருவனே தன் வாழ்வில் அதிகமதிகமாய் பரிசுத்தமாகி ஜொலித்திடுவான்!*

**பரிசுத்தத்தின் இரகசியம்!**

*தன் ஜீவிய காலம் முழுவதும், “***என் சித்தமல்ல,*** உம்முடைய சித்தமே ஆகக்கடவது” என இயேசு தன் பிதாவிடம் ஜெபித்தார் (யோவான் 6:38). தன் பிதாவை மகிழ்விப்பதற்கு இயேசு இவ்விதமாய் ஜீவிக்க அவசியமாயிருந்ததால், நாமும்* **பிதாவை மகிழ்விக்க** *இதைத்தவிர வேறு வழியே இல்லை! இந்த மனோபாவம் நம் ஜீவியத்தில் தொடர்ச்சியாக இல்லாவிட்டால், நாம் ஆண்டவரோடு இசைந்து நடப்பதில் ஒருக்காலும் வளர்ச்சி காணவே முடியாது.*

*நாமோ பலமணி நேரங்கள் ஜெபித்து; திரட்சியான வேத ஆராய்ச்சியில் ஈடுபட்டு; நூற்றுக்கணக்கான கூட்டங்களுக்கும் சென்றிருக்கலாம்! ஆனால், இவ்வாறு செய்த நாம், “பரமண்டலத்தில் உம்முடைய சித்தம் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் உம்முடைய சித்தம் (முதலாவது, நம்முடைய ஜீவியத்தில்!) செய்யப்படுவதாக” என ஜெபிக்கும் ஸ்தானத்தை அடைந்திராவிட்டால், நம்முடைய நேரங்களை யெல்லாம் வீணாக்கிப்போட்ட பரிதாபத்திற்கே உள்ளாவோம்! நாம் பெற்ற கிருபைகள் ஒவ்வொன்றும், நம் இருதயத்தின் ஆழத்திலிருந்து, “பிதாவே என் சித்தமல்ல... உம் சித்தமே செய்யப்படட்டும்” என்ற ஸ்தானத்திற்குள் நம்மை நடத்தியிருக்க வேண்டும். இங்குதான் உண்மையான* **பரிசுத்தத்தின் இரகசியம்** *அடங்கியிருக்கிறது.*

*மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும்; ஆவி மாம்சத்திற்கு விரோத மாகவும் போராடுகிறது என கலாத்தியருக்குப் பவுல் எழுதினார் (கலா.5:17). மனுஷனுடைய சித்தத்திற்கும் தேவனுடைய சித்தத்திற்கும்*

இடையில் நிகழும் போராட்டத்தையே பவுல் இங்கு குறிப்பிட்டார். மாம்சத்தையும் அதன் ஆசை இச்சைகளையும் மொத்தமாகத் தொகையிட்டால் "**சுயசித்தம்**" (Self-will) என்ற ஒரே வார்த்தையில் கூறிவிடலாம். நாம் புதிய ஏற்பாட்டில் "மாம்சத்தின் இச்சைகள்" என எங்கெல்லாம் வாசிக்கிறோமோ அந்த இடத்தில் "சுயசித்தம் என்றும், சுயம்-மையம் கொண்ட ஆசைகள்" என்றும் மாற்றி வாசிக்க முடியும். இவ்வாறு வாசிப்பதால் அக்குறிப்பிட்ட வசனங்கள் என்ன செய்தியைத் தாங்கிவருகிறது என்பதை நீங்கள் எளிதில் புரிந்து கொள்ளுவீர்கள்.

உதாரணமாக கலாத்தியர் 5:17-ல் "பரிசுத்த ஆவி மாம்சத்துக்கு விரோதமாய் இருக்கிறது" என்ற வசனத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இதை மாற்றிக் கூறும்பொழுது, "பரிசுத்த ஆவியானவர் நம் சுய சித்தத்திற்கும் நம்முடைய சுயம்-மையம் கொண்ட ஆசைகளுக்கும் விரோதமாக சதா எதிர்த்து நிற்கிறார்" என்ற அர்த்தத்தை நாம் எளிதில் பெற்றுக்கொள்ளுகிறோம். நம்முடைய சுயசித்தத்தையும்; சுயம்-மையம் கொண்ட நம் ஆசைகளையும் அழிக்காவிட்டால், நாம் கிறிஸ்துவைப் போல் பரிசுத்தமாகிடவோ அல்லது நாம் பரலோகத்திற் குரியவர்களாய் மாறிடவோ ஒருக்காலும் முடியாது என்பதை ஆவியானவர் நன்றாக அறிந்துள்ளார்!

எனவே, என் சுய சித்தத்திற்கு 'இல்லை' என்றும் தேவனுக்கு 'ஆகட்டும்' என்றும் கூறி **என் சுயம் சாவதற்கு** வழி ஏற்படுத்திவிடும் மார்க்கமே உண்மையான பரிசுத்தமாகுதலின் மார்க்கமாகும். அதாவது நான் ஆண்டவரிடம், "பிதாவே நீர் என் வாழ்விற்காக வரைந்திருக்கும் வட்டத்திற்கு வெளியே எனக்கென்று எந்த விருப்பமும் எந்தத் திட்டமும் எந்த குறிக்கோளும் கிடையாது! அன்புத் தகப்பனே உம்முடைய சம்பூரண சித்தத்திற்கு மாறாக நான் ஒன்றையும் விரும்பவில்லை!" எனக் கூறுவதே அதின் பொருளாகும்.

**அனுதின வாழ்க்கையில் பெற்றிடும் சிலுவை!**

"ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, **தன் சிலுவையை** அனுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என இயேசு கூறினார் (லூக்கா 9:23). ஒவ்வொரு நாளும், நம் சித்தத்தைத் தேவனுடைய சித்தம் குறுக்கிடும் பொழுது தான் நம்முடைய சிலுவையை நாம் பெறுகிறோம். நம் சிலுவையை எடுப்பதென்பது யாதெனில், "பிதாவே, என் சித்தமல்ல உம்முடைய சித்தமே ஆகக்கடவது" எனக் கூறுவதுதான்.

இவ்விதமாய் தன் சுயசித்தத்திற்கும்; தன் சுயதிட்டங்களுக்கும்; தன் சுயஇலட்சியங்களுக்கும் 'இல்லை' எனக் கூறி தன் ஆண்டவரிடம், "ஆண்டவரே நான் என் சிலுவையை எடுத்து, என் சொந்த விருப்பங்களுக்கு மரித்து, உம்மைப் பின்பற்றி உம் சித்தம் மாத்திரமே செய்ய விரும்புகிறேன்" என கூறுபவன் மாத்திரமே "உம்முடைய சித்தம்

பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப் படுவதாக" என்ற ஜெபத்தை உண்மையாய் ஜெபித்திட முடியும்!

"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு **இளைப்பாறுதல்** தருவேன்" என இயேசு கூறினார் (மத்.11:28). ஆனால் இதோடு அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. அவர் தொடர்ந்து, இந்த இளைப்பாறுதலை அவர் நமக்கு **எங்ஙனம் தருவார்** என்பதையும் கூறினார். அவ்விதம் தொடர்ந்து கூறுகையில், "என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; **அப்பொழுது** உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப் பாறுதல் கிடைக்கும்" என்றார் (மத்.11:29). அதாவது, நம்முடைய சிலுவையை எடுத்து நம் சுயசித்தத்திற்கு **'இல்லை'** என பதில் கூறும் வரைக்கும் இந்த இளைப்பாறுதலை ஒருக்காலும் நாம் பெற்றிடவே முடியாது. ஆம், சுயசித்தம் செய்யும் ஒருவனே இளைப்பாறுதலற்ற அங்கலாய்ப்பிற்குள்ளாகிறான்!

தன் சிலுவையை எடுக்க விரும்பாத ஒருவன், ஆண்டவரை கிட்டிச் சேர்ந்து அவரைப் பின்பற்றிட முடியாது! ஓர் உண்மையான சீஷன் மாத்திரமே, "பரமண்டலத்திலே உம்முடைய சித்தம் செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என மனப்பூர்வமாய் ஜெபித்திட முடியும். இயேசு தன் ஜீவிய காலம் முழுவதும் இந்த ஜெபத்தையே ஜெபித்தார். அவர் எதைப் பிரசங்கித்தாரோ அதை நடைமுறையில் கைக்கொள்ளவும் செய்தார். ஓர் மனிதனாகவே வாழ்ந்த அவர், தன் பிதாவின் சித்தம் மாத்திரமே செய்திட வேண்டும் என்ற தீராத வாஞ்சையை கொண்டிருந்தார்.

இயேசு இந்த பூமிக்கு ஏன் வந்தார்? என்ற கேள்விக்கு "பிதாவின் சித்தம் செய்யவே இயேசு வந்தார்" என வேதம் கணீரென ஒலிக்கிறது. இதை இயேசுவே யோவான் 6:38-ல் "என் சித்தத்தின்படியல்ல என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்" எனக் கூறினார். இவ்வுலகத்தின் பாவங்களுக்காக மரிக்கும்படி மாத்திரமே அவர் பிரதானமாய் இப்பூமிக்கு வரவில்லை! அப்படி இல்லவே இல்லை! ஆம், **தன் பிதாவின் சித்தம் செய்யவே** இப்பூமிக்கு அவர் வந்தார். இயேசு கல்வாரிக்குச் சென்று தன் ஜீவனைக் கொடுத்தார். ஆகிலும், அவ்விதம் கல்வாரியில் மரித்ததும் அவர் தன் வாழ்வில் பிதாவின் சித்தம் செய்வதின் ஒரு பங்காகவே இருந்தது!

"நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமா யிருக்கிறது" என இயேசு யோவான் 4:34-ல் கூறினார். கடும்பசி கொண்ட ஓர் மனிதன், உணவிற்காக கூக்குரலிடுவது போல, இயேசுவின் முழு ஆள்த்துவமும் பிதாவின் சித்தம் செய்வதற்கு கூக்குரலிட்டது. இவ்விதம் தங்கள் ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் இயேசுவைப் போலவே

பிதாவின் சித்தம் செய்ய வேண்டும் என வாஞ்சித்துத் தவிப்பவர்கள் மாத்திரமே இயேசுவை உண்மையாய் பின்பற்று கிறவர்கள்! பரலோகத்தில் திரளான மகிழ்ச்சி மாத்திரமே உண்டு. அங்கே துக்கம் ஏதுமில்லை! ஏன் தெரியுமா? அந்த இனிய பரலோகத்தில் தேவசித்தம் மாத்திரமே சம்பூரணமாய் செய்யப்படுகின்றது! இன்றும் தேவசித்தம் செய்வது ஒன்றே, ஜனங்களைச் சொல்லிமுடியா மகிழ்ச்சிக்குள் நடத்திச் செல்கிறது!

"இப்படியிருக்க கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்ட படியால் நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம் வரைக்கும் மனுஷனுடைய இச்சைகளின்படி பிழைக்காமல் **தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாக** பாவங்களை விட்டோய்ந்திருப்பான்" என 1 பேதுரு 4:1,2 வசனங்களில் பேதுரு கூறினார். இதைப்போலவே யோவான் அப்போஸ்தலன் தன் நிருபத்தில், "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; **தேவனுடைய சித்தத்தின்படி** செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" எனக் கூறினார் (1 யோவான் 2:17).

விசுவாசிகளுக்காக அப்போஸ்தலர் கொண்டிருந்த பாரம் நிறைந்த ஜெபமெல்லாம், "அவர்கள் தேவனுக்குச் சித்தமானவைகள் எல்லா வற்றிலும் தேறினவர்களாய் நிலைநிற்க வேண்டும்" என்பதாகவே இருந்தது (கொலோ.4:12). ஓர் மனிதன் தன் மீதியான ஜீவிய கால மெல்லாம் தேவசித்தம் செய்வதற்கு அர்ப்பணிக்கும்படி அவனை நடத்தாமல், வெறும் பாவமன்னிப்பிற்கு மாத்திரம் நடத்திடும் இரட்சிப்பு, ஓர் நிலையற்ற இரட்சிப்பு என்பதை அப்போஸ்தலர்கள் தெளிவாக அறிந்திருந்தார்கள். பாவமன்னிப்பு ஓர் வாசல் மாத்திரமே! இப்பாவமன்னிப்பின் வாசல் மூலம் பிரவேசிக்கும் ஒருவன், இடுக்கமான வழியாய் (Narrow Way) தேவனுடைய எல்லா சித்தத்தையும் செய்யும்படி நடத்தப்பட வேண்டும்!

**பரலோகத்தில் தேவசித்தம் எங்ஙனம் செய்யப்படுகிறது!**

நாம் ஜெபிக்கும்பொழுது, "உம்முடைய சித்தம் **பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல** பூமியிலேயும் செய்யப்படுவதாக" என ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கூறினார். அப்படியானால் பரலோகத்தில் எங்ஙனம் தேவசித்தம் செய்யப்படுகிறது? இதற்குரிய விடையை நான்கு காரியங்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

முதலாவதாக, பரலோகத்தில் **தேவதூதர்கள் தேவனுடைய கட்டளைக்காகவே தொடர்ச்சியாக காத்துக் கொண்டிருக்கிறார்கள்.** அங்கு தேவதூதர்கள் பரலோகத்தைச் சுற்றி வந்து தங்கள் சொந்த 'ஐடியாக்களின்'படி ஆண்டவருக்கு ஏதாவது ஊழியம் செய்ய வேண்டும் என சுறுசுறுப்பாக ஓடித்திரிந்து கொண்டிருக்கவில்லை! அப்படி இல்லவே

இல்லை! அவர்கள், முதலாவது தேவன் பேசட்டும் என்றே காத்துக் கொண்டிருக்கிறார்கள்.... அதற்குப் பின்புதான், அவர்கள் கிரியை செய்யத் துவங்குகிறார்கள்.

தேவன் சொல்லுகிறார் :

**"என் கை அசைவின் அழைப்பையும்**
**என் கண் இமையின் அசைவையும் கண்டு**
**நான் வழங்கும் ஊழியத்தை என் மனதின்படி செய்து**
**நான் வழங்கா ஊழியத்தையோ செய்திடத் துணியாமல்**
**எனக்காக விழிப்போடு காத்துக் கொண்டிருக்கும்**
**என் தாசர்களையே நோக்கிக் கொண்டிருக்கின்றேன்.**
**தன் எஜமானின் மனதைக் கற்றிட ஆவலாய்**
**அவர் சித்தம் யாவையும் மனமுவந்து செய்திட ஆவலாய்**
**இருந்திடும் மானிடர் இப்பாரினில் யாருண்டு?**
**அவ்வித மானிடரை நான் கண்டால் .....**
**என் நெஞ்சம் மகிழ்வால் பொங்கிடாதோ!"**

எனவே, பரலோகத்தில் உம்முடைய சித்தம் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்பதற்கு முதலாவது பொருள் யாதெனில், தேவன் நமக்கு என்ன சொல்ல விரும்புகிறாரோ அதை மாத்திரமே நாம் கேட்டிட பேராவல் கொண்டிருக்க வேண்டும்!

இரண்டாவதாக, தேவன் பேசியவுடன் தூதர்கள் **உடனடியாக கீழ்ப்படிந்தார்கள்.** தேவன் பேசியவுடன், "ஆண்டவரே சில நாட்கள் நான் பொறுத்திருந்து இதைக் குறித்து யோசிக்கிறேன். மேலும், இதைக் குறித்து என் சகதூதர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்" என தேவதூதர்கள் ஒருபோதும் பதில் கூறுவதில்லை. இவ்விதப் பதில் வழக்குகள் பரலோகத்தில் ஒருக்காலும் காணப்படுவதே யில்லை! அங்கு, தேவன் பேசிவிட்டால் அதுவே கடைசி முடிவாகும்! கீழ்ப்படிதலும் உடனடியாக நடந்தேறும்!

எனவே நம்முடைய ஜெபமானது, "தகப்பனே! நான் ஒருபோதும் உம்முடைய சத்தம் கேட்பதற்குத் தாமதம் செய்யாதிருக்க உதவி செய்யும். நீர் பேசுவதற்கு முன்பாக, உமது காலத்தைக் கடந்து, முண்டியடித்து ஓடவும் நான் விரும்பவில்லை. ஆகிலும், நீர் ஒருதரம் பேசி விட்டால் அதற்கு **உடனடியாக கீழ்ப்படியவே** நான் விரும்புகின்றேன்" என்பதாய் இருக்க வேண்டும்.

மூன்றாவதாக, பரலோகத்தில் தேவன் ஏதேனும் ஒரு கட்டளையைப் பிறப்பித்தால், அவைகள் யாவும் **முழுமையாக** (Completely) நிறைவேற்றப் படுகின்றன! அக்கட்டளையை ஏற்றிடும் தேவதூதர்கள் தேவனுக்கு அரைகுறையாய் கீழ்ப்படிவதில்லை. எனவே, இப்போது நம்முடைய

ஜெபமும், "பிதாவே, என் ஜீவியத்திலும் நான் உம்முடைய எல்லா சித்தத்தையும், என்ன விலைக்கிரயமானாலும் அதற்கு முழுமையாகக் கீழ்ப்படிந்திடவே விரும்புகிறேன்!" என்பதாய் இருக்க வேண்டும்.

கடைசியாக, தேவதூதர்களின் கீழ்ப்படிதல் எப்போதும் **மகிழ்ச்சி நிறைந்ததாகவே** இருந்தது. 'அவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமே' என முணுமுணுத்துக் கொண்டு குறை கூறிக்கொண்டு தூதர்கள் கீழ்ப்படிவதில்லை. எந்த ஒரு தூதனும் தனக்கு கொடுக்கப்பட்ட பணியை வேறொரு தூதனோடு ஒப்பிட்டுப்பார்த்து, "ஆண்டவரே, நீர் அந்த தூதனுக்கு கொடுத்த பணியைக் காட்டிலும் எனக்கு அதிக கஷ்டமான பணியைத் தந்துவிட்டீரே!" என்றும் ஒருபோதும் கூறுவதில்லை. ஆனால் இன்று அநேக விசுவாசிகளிடம் "இவ்வளவு அதிகமான தியாகமெல்லாம் நான் எதற்குச் செய்யவேண்டும்? அவனை அல்லது அவளைக் குறித்த காரியமென்ன?" என்றே முறுமுறுக்கிறார்கள். ஆனால் தூதர்களோ, அவருக்குக் கீழ்ப்படியும் தருணத்தை ஓர் அரிய தருணமாகவே எடுத்துக் கொண்டு மகிழ்வுடன் கீழ்ப்படிகிறார்கள்!

**நித்தியத்தில் நாம் வருந்தும்படியான நிலைமையற்று இருத்தல்!**

இன்று நீங்கள் இப்பூமியில் தேவசித்தம் செய்து வாழ்வீர்களென்றால், நீங்கள் விண்ணகத்திற்குள் பிரவேசிக்கும்போது இவ்விதம் வாழ்ந்ததற்காக ஒருபோதும் வருந்தவேமாட்டீர்கள். அங்கே நம் நல்ல ஆண்டவரை முகமுகமாய் நீங்கள் காணும்பொழுது, "அடடா, நான் என் ஜீவியத்தை இன்னும் அதிகமாய் அவரிடம் அர்ப்பணிக்காமல் போனேனே! **இன்னும் அதிகமாய்** அவருக்கு முழுமையாய் கீழ்ப்படிந்திருக்கலாமே!" என்றுதான் உங்களுக்குக் கூறிடத் தோன்றும்! இப்பூமியில் தேவனுடைய கற்பனைகளுக்கு உடனடியாகவும், முழுமையாகவும், மகிழ்ச்சியோடும் கீழ்ப்படியாமல் நீங்கள் பரலோகம் செல்லும்போது அங்கே பரலோகத்தின் இனிமையை முழுமையாய் ருசிக்க முடியாமல் அங்கலாய்த்து தவித்து நிற்பீர்கள்!

"நீங்கள் இந்த பூமியை விட்டுப் போய்விட்டால் இனிமேல் கிறிஸ்துவுக்காக சிலுவையை சுமக்கும் **சந்தர்ப்பம்** மீண்டும் ஒருபோதும் கிடைக்காது" என சாது சுந்தர்சிங் அடிக்கடி கூறுவதுண்டு. நீங்கள் ஆண்டவர்மீது கொண்டிருக்கும் அன்பை நிரூபிக்க விரும்பினால், அதை இந்த பூமியில் இப்பொழுதே நீங்கள் நிரூபித்தாக வேண்டும். இந்த அரிய சந்தர்ப்பம் ஒருவனுக்கு மீண்டும் பரலோகத்தில் கிட்டாது!

நமக்கு மிகவும் அவசியமான பாவமன்னிப்பைக் கேட்டு விண்ணப்பிப்பதற்கு முன்பாகவே, **முதலாவது** தேவனுடைய நாம மகிமையையும், அவருடைய ராஜ்ஜியத்தின் வருகையையும், நம் ஜீவியத்தில் தேவசித்தம் செய்யப்படுவதையுமே தேடும்படி ஆண்டவர் நமக்குக் கற்பித்த இந்த ஜெபம் நம்மை மிகுந்த ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது!



# 6

## நம் சரீரத் தேவைகள்

"...வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்"

நம்முடைய சரீரத் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கும் தேவன் ஆவல் கொண்டிருக்கிறார். ஆகிலும் 'நாம் பாதிக்கப்படாத வகையில்' நம் சரீரத் தேவைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும்! நம் ஜீவியத்தில் எங்ஙனம் தேவனை முதலாவது வைத்திட வேண்டும் என்பதை நாம் அறியாதிருந்தால், பொருளாதார ஆசீர்வாதமும், சரீரப்பிரகாரமான ஆசீர்வாதமும் நம் ஆவிக்குரிய ஜீவியத்தை அழித்து நாசமாக்கிட திரளான வாய்ப்புகள் உண்டு!

ஓர் முதிர்ச்சியடைந்த ஆவிக்குரிய மனிதன் பத்தாயிரம் ரூபாயை மிகப் பிரயோஜனமாகப் பயன்படுத்திடுவான். ஆனால் இதே பத்தாயிரம் ரூபாய், ஓர் பொறுப்பற்ற மனுஷனின் கையில் கிடைத்தால், அது அவனை அழித்துவிடக்கூடும். எனவேதான் தேவன் நம்மை சரீரப்பிரகாரமாகவும், உலகப்பிரகாரமாகவும் (Physically and Materially) ஆசீர்வதிப்பதற்கு முன்பாக **நாம் முதலாவதாக அவருக்குள் மையம் கொண்டிருக்கும்படி** விரும்புகிறார்.

**நமக்குரிய தேவைகளில் நம் சரீரத் தேவைகளே முதலிடம் வகிக்கின்றது!**

நம் தனிப்பட்ட தேவைகளைக் குறித்து மூன்று விண்ணப்பங்கள் இங்கு ஜெபமாக ஏறெடுக்கப்படுகின்றன. அதில் முதல் விண்ணப்பம் நம்முடைய ஆவிக்குரிய நன்மைக்காக ஜெபித்திடும் ஜெபமல்ல! இது நமக்கு மிகுந்த ஆச்சரியம் இல்லையா! ஆம், நம்மைக் குறித்த ஜெபத்தின் முதல் விண்ணப்பம், "ஆவிக்குரிய தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்" என்றோ அல்லது "பாவத்தின்மீது எங்களுக்கு ஜெயம் தாரும்" என்றோ அல்லது "எங்களைப் பரிசுத்தாவியால் நிரப்பும்" என்றோகூட இல்லை. ஆம், இல்லவே இல்லை! இங்கே முதல் விண்ணப்பமாய் இருப்பதெல்லாம், "ஆண்டவரே எங்கள் **சரீரத் தேவைகளைப்** பூர்த்தி செய்யும்" என்பதுதான்.

மனுஷன் மூன்று அடுக்கு ஆள்த்துவம் கொண்டவன் என பரிசுத்த வேதாகமம் நமக்குப் போதிக்கின்றது. அவனுக்கு, தேவனோடு தொடர்பு கொள்ள வகைசெய்யும் **ஆவியும்;** அவனுடைய அறிவுத் திறன், உணர்ச்சியலைகள், சுயசித்தம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு **ஆத்துமாவும்; சரீரமும்** கொண்டிருக்கிறான் (1தெச.5:23). இங்கே காணப்படும் மூன்று விண்ணப்பங்களும் நம் ஆள்த்துவத்திலுள்ள மூன்று

பகுதிகளுக்காகவும் ஏறெடுக்கப்படும் ஜெபமாகும். முதல் விண்ணப்பம் நம் சரீரத் தேவைகளுக்காகவும்; இரண்டாம் விண்ணப்பம் நம் மனதைப் (ஆத்துமாவைப்) பாழ்படுத்தும் பாவங்களுக்காகவும்; மூன்றாவது விண்ணப்பம் ஆவிக்குரிய தீமையிலிருந்து நம் ஆவி விடுதலை பெறுவதற்காகவும் ஏறெடுக்கப் படுகிறது. நம் ஆள்த்துவத்தின் இந்த மூன்று பகுதிகளில் ஆவியே மிக முக்கியமானதாகும். இருப்பினும், முதலாவது நம் சரீரத் தேவைகளுக்கே ஜெபிக்கும்படி ஆண்டவர் கற்றுத் தந்தார். இதிலிருந்து கீழ்காணும் சில பாடங்களை நாம் கற்றுக் கொள்கிறோம்:

இன்றைய கிறிஸ்தவ உலகில், சரீரத்தைக் குறித்த போதகம் இரண்டு எதிர்முனைகளில் போதிக்கப்படுகிறது. ஒரு கூட்டத்தார் துறவற ஒழுக்கத்தைப் போதித்து, "சரீரத்தின் ஒவ்வொரு சுகத்தையும் வெறுத்து இந்த சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தாவிட்டால் பரிசுத்தமாய் இருக்க முடியாது" எனக் கூறுகிறார்கள். ஆனால் சரீரம் மாத்திரமே பாவத்திற்குக் காரணமல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பாருங்கள், சாத்தானுக்கு ஓர் சரீரமில்லை. ஆகிலும் அவன் முழுக்க முழுக்க பாவத்தினால் நிறைந்திருக்கிறான். அதேசமயம் இயேசுவோ ஓர் சரீரத்தை உடையவராயிருந்தும் ஒருபோதும் பாவம் செய்யவேயில்லை! இப்பாழும் துறவற ஒழுக்கத்தின் போதகம், "திருமண உறவுகூட" பாவம் என்றே போதிக்கின்றது! ஆனால் மனுஷனுக்குள்ளிருக்கும் காம ஆசையை தேவனே சிருஷ்டித்து அதையும் "நல்லது" என்றே கூறினார் (ஆதி.1:31) என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. உணவின் மீதுள்ள விருப்பமும், இளைப்பாறியிருக்கும் விருப்பமும், காம விருப்பமும் மனிதனின் சரீரத்திற்கேற்ற விருப்பங்களாகவே தேவன் படைத்து அவைகள் யாவையும் நலம் என்றே கண்டார். மேற்கூறிய விருப்பங்களில் ஒன்றைக் குறித்தாகிலும் நாம் வெட்கப்படவேண்டிய அவசியமே இல்லை. நாம் மிகுந்த ஜாக்கிரதையாயிருக்க வேண்டியதெல்லாம், ஏதாகிலும் இந்த விருப்பங்களில் ஒன்றை, **தேவன் விலக்கி வைத்திரும் வழிகளால்** நாம் பூர்த்தி செய்யாமல் இருந்திட வேண்டும், அவ்வளவுதான்!

மேற்கூறிய துறவற - ஒழுக்கப் போதனைக்கு முற்றிலும் மாறுபட்ட இன்னொரு எதிர்முனைப் போதகம் யாதெனில், "நாம் ஐசுவரியவானாய் மாறுவதற்கு தேவன் விரும்புகிறார்" என சில கிறிஸ்தவக் குழுக்கள் போதிக்கும் போதனையே ஆகும். இதன் விளைவாய், சரீரமும் அதன் சுகமும் விக்கிரகத்தைப் போலவே போற்றி வணங்கப்படுகிறது!

ஆனால் இயேசுவின் போதகமோ குன்றின் ஒரு முனையில் நின்று போதிக்கும் 'துறவற-ஒழுக்கப்' போதகமுமல்ல! உலகப் பொருட் களுக்காகவும், சரீரத்திற்காகவும் அதிக முக்கியத்துவம் கொடுத்து மூழ்கியிருக்கச் செய்யும் குன்றின் மறுமுனைப் போதகமுமல்ல! மாறாக, அவருடைய போதகம் நம்முடைய சரீரத்தின் அத்தியாவசியத்

தேவைகளுக்காக அக்கறை கொண்டு **அதன்மூலம்** நாம் தேவனை முழு இருதயமாய் ஆராதிப்பதற்கே வகைசெய்கிறது!

**தேவன் நம் சரீரத்திற்காக கொள்ளும் அக்கறை!**

இன்று அநேக விசுவாசிகள் தேவன் நம் சரீரத்தைக் குறித்து அக்கறை கொள்ளவில்லை என்றே தவறாக எண்ணுகிறார்கள். இதனிமித்தம், இவர்கள் சுகவீனமடையும்பொழுது, தாங்கள் சுகமடையும்படி **கர்த்தரைத்** தேடுவதேயில்லை. இவர்கள் ஆசா ராஜாவைப்போல தங்கள் விசுவாசத்தைக் கர்த்தர் மீது அல்ல, **டாக்டர்கள்** மீதே வைத்திருக்கிறார்கள்! (2நாளா.16:12). நாம் சுகம் பெறுவதற்கு டாக்டர்களையும், மருந்து களையும், வேறு எந்த அறுவை சிகிச்சை களையும் தேவன் பயன்படுத்த முடியும்! இருப்பினும், நம் ஜெபங்களுக்கு தேவன் இப்படித்தான் பதில்கூற வேண்டுமென நாம் ஒருபோதும் அவருக்குக் கட்டளை கொடுத்திட முடியாது. இருப்பினும் தன்னுடைய பிள்ளைகள், மனுஷர்கள் மீது நம்பிக்கை வைத்திருப்பதையோ தேவன் ஒருபோதும் விரும்புவதில்லை. நம்முடைய சரீரம் ஆரோக்கியமாயிருந்து, **அந்த சரீரம் அவரின் மகிமைக்காகவே** உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்பதில் தேவன் மிகவும் அக்கறை கொண்டுள்ளார்!

நம் சரீரத்தைக் குறித்த மூன்று மகிமையான சத்தியங்களைக் குறித்து வேதாகமம் போதிப்பதைப் பாருங்கள்:

1.**"சரீரம் கர்த்தருக்குரியதாயிருந்தால், கர்த்தரும் சரீரத்திற்குரியவர்"** (1கொரி. 6).

2. **"நம் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்கள்"** (1 கொரி. 6).

3. **"நம் சரீரம் பரிசுத்த ஆவியினுடைய ஆலயம்"** (1 கொரி. 6:13-19).

காரியம் இப்படியாயிருப்பதால் நம் சரீரத்திற்கென தேவ பெலனை நாம் நிச்சயமாய் ஆண்டவரிடம் கேட்டு பெற்றுக்கொள்ள முடியும்.

ஆவிக்குரியவைகளைக் காட்டிலும் சரீரத்திற்குரியவைகள் அதிமுக்கியமானவைகளல்ல! நாம் ஏற்கனவே, நம் ஜீவியத்தில் தேவனே முதன்மையான இடத்தில் இருக்கவேண்டுமென்றும் மற்ற யாவும் அதற்குப் பின்பானவைகளாக இருக்கவேண்டுமென்றும் கண்டோம். ஆனால் நாம் உண்மையாகவே, "உம்முடைய நாமம் மகிமைப் படுவதாக; உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக; உம்முடைய சித்தம் செய்யப் படுவதாக" என **முதலாவது** ஜெபித்திருப்போமென்றால் இனி அடுத்து, "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என ஜெபிப்பதற்கும் உரிமை பெற்றவர்களாவோம்! ஏனெனில் நாம் பரலோகத்தில் போல பூமியிலேயும் அவர் சித்தம் செய்து **தேவனை மகிமைப்படுத்துவதற்காகவே** அன்றன்றுள்ள அப்பத்தைக் கேட்கிற வர்களாக இருக்கிறோம்!

நம் ஆவிக்குரிய நிலைமை நம் சரீர நிலைமையை ஓரளவு சார்ந்திருக்கிறது எனக் கூறிட முடியும். நாம் எலியாவைக் குறித்து

வாசிக்கிறோம். அவன் வானத்திலிருந்து அக்கினியையும், மழையையும் ஜெபித்து இறக்கினான்! இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அவன் மிகவும் சோர்வுற்று, தேவன் தன் ஜீவனை எடுத்துக்கொள்ளும்படி ஜெபித்தான். 850 கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு முன்பாக மகா தைரியமாய் நின்ற இம்மனுஷன், யேசபேல் என்ற ஒரு ஸ்திரீயின் அச்சுறுத்தலுக்குப் பயந்து ஓடி ஒளிந்ததைப் பாருங்கள்! (1 இராஜா.18, 19). இது எப்படி ஆகும்? சுமார் 3 ஆண்டுகளுக்கு மேலாக இந்த எலியா தானாகவே புசித்துப் பிழைத்து வந்தான். இந்த அவனுடைய சரீர பெலனெல்லாம் கர்மேல் மலையின்மேல் சம்பவித்த உச்சக்கட்டமான நிகழ்ச்சியோடு முற்றிலும் தொய்ந்து பெலனற்றுப் போனது.

இவ்வாறு சோர்வுற்று சூரைச் செடியின் கீழ் அமர்ந்திருந்த எலியாவிற்கு தேவன் ஒரு பிரசங்கத்தைச் செய்யவே இல்லை! இல்லவே இல்லை!! மாறாக தேவன் ஓர் தூதனை அனுப்பி எலியாவுக்கு 'சுடச்சுட' அடையும் தண்ணீரும் கொடுத்தார். எலியா புசித்தான்; குடித்தான்; உறங்கினான்! அவன் விழித்தெழும்பியவுடன் மீண்டும் அவனுக்கு, தேவன் சூடான அடையும் தண்ணீரும் கொடுத்தார்!! (1இராஜா.19:1-8).

எலியா பெலனிழந்து தொய்ந்து போனான் என்பதை தேவன் அறிந் திருந்தார். இப்போது அவனுக்குத் தேவையாயிருப்பதெல்லாம் நல்ல போஷாக்கே அல்லாமல் ..... போதனையல்ல! இதையும் தேவன் அறிந் திருந்தார். இன்று நமக்கும் வேளாவேளைகளில் நீண்ட பிரசங்கமல்ல!? வயிற்றுக்கு நல்ல போஜனமும் ஓய்வுமே தேவையாயிருக்கிறது.

இன்று சில கிறிஸ்தவர்கள் தங்கள் சரீரங்களைக் குறித்து நூதன ஆவிக்குரிய கொள்கை கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மிகத் தீவிரமாய், "நான் தேவனுக்காய்ப் பற்றியெரிய விரும்புகிறேன்" எனக் கூறுவார்கள். இவர்கள் முனைந்து சென்று காலையும், மத்தியானமும், இரவும் தேவனுக்காக 'ஊழியங்கள்' செய்கிறார்கள். இவ்விதம் வாரத்தில் ஏழு நாட்களும்..... ஒவ்வொரு வாரமும் செய்து கொண்டே யிருக்கிறார்கள். பின்பு இவர்கள் சோர்வுற்றுத் தொய்ந்து வீழ்ந்து விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுடைய கிரியைகள் யாவும் மனுஷீகமான வைராக்கிய கிரியைகளே ஆகும். இவர்களின் சோர்வு சரீரப்பிரகாரமாய் ஏற்பட்டதேயல்லாமல், ஆவிக்குரிய எந்த காரணமும் இல்லை! இப்படிப்பட்டவர்களைப் பார்த்தே ஆண்டவர், "வாருங்கள்! ஓரிடத்தில் தனித்து சற்றே இளைப்பாறும்படி போவோம்!" எனக் கூற வேண்டிய தாயுள்ளது! (மாற்கு 6:31).

ஒரு சமயம் இயேசு ஒரு படகில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது, அதில் அவர் உறங்கிக் கொண்டிருந்தார் என வாசிக்கிறோம். அன்று அவர் உண்மையிலேயே மிகவும் களைத்துப் போயிருந்தார். தான் தூங்குவதாகக் காணப்படுவதில் அவர் எந்த வெட்கமும் கொள்ளவில்லை! மேலும் அவர் தாகமாயும் பசியாயுமிருந்த

வேளைகளும் வந்தது. அவைகளெல்லாம் தனக்கு இருந்ததை அவர் தயக்கமின்றி ஒத்துக்கொண்டார். ஏனெனில், தன் சரீரத் தேவைகளைக் குறித்து அவர் ஒருபோதும் வெட்கம் அடைந்ததே இல்லை. நம் சரீரம் பரிசுத்தாவி தங்கி வசிக்கும் ஆலயமாயிருக்கிறது. எனவேதான் இந்த சரீரத்திற்கு நாம் அக்கறை காட்டவேண்டியதும் அவசியமாயிருக்கிறது.

நம் சரீரத்திற்கு வேண்டிய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு தேவன் ஆர்வமுள்ளவராகவே இருக்கிறார். இப்பூலோக வாழ்க்கையில் உணவு; உடை; இருப்பிடம் ஆகியவைகள் நமக்குத் தேவை என்பதும் அவருக்குத் தெரியும்! ஒருவேளை, நீங்கள் ஓர் சொந்த வீடு வைத்துக் கொள்ளுவதை "தேவை" என தேவன் காணாவிட்டால், நீங்கள் ஓர் வாடகை வீட்டில் தங்கி வாழ வகை செய்வதற்கு அவர் மிகுந்த அக்கறை காட்டுவார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை! வனாந்தரத்தில் இஸ்ரவேலர்களுக்கு 'இளைப்பாறும் ஸ்தலத்தை' (எண்.10:33) ஆயத்தம் செய்த தேவன் உங்களுக்கும் ஓர் ஸ்தலத்தை ஆயத்தம் செய்வார் என்பதில் எள்ளளவு கூட சந்தேகமே கிடையாது! ஆகவே, நாம் தேவனிடம் இவைகளைக் குறித்தெல்லாம் கேட்பது ஆவிக்குரிய தன்மையற்றவைகள் என ஒருபோதும் எண்ணாதிருப்போமாக.

இவ்விதம், தேவன் மீது ஜனங்கள் கொண்டிருந்த தவறான அபிப்பிராயத்தை திருத்தும்படிக்கே, கர்த்தருடைய ஜெபத்தின் கடைசி மூன்று விண்ணப்பங்களிலும் சரீரத் தேவைகளுக்கே இயேசு முதலிடம் கொடுத்தார்!

**நம் பூமிக்குரிய தேவைகளுக்காக தேவன் காட்டும் அக்கறையைப் பாருங்கள்!**

பூமிக்குரிய நம் தேவைகள் யாவும் ஒட்டு மொத்தமாக, "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்ற விண்ணப்பத்தில் அடங்கியிருப்பதைப் பாருங்கள். இந்த விண்ணப்பத்திற்குள், "தகப்பனே, ஒரு வேலையை எனக்குத் தாரும்; நான் வசிப்பதற்கு வீடு ஒன்று தாரும்; நானும் என் குடும்பத்தாரும் உடுத்திக் கொள்ள உடைகளைத் தாரும்; என் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியைத் தாரும் ..... ஏனென்றால் அவர்களும் ஓர் நாளில் தங்கள் அன்றாட ஆகாரத்தைப் பெற வேண்டும்!" போன்ற அனைத்து விண்ணப்பமும் அடங்கியுள்ளது. மேற்கூறிய எல்லாத் தேவைகளுக்காகவும் நம் மீது தேவன் அக்கறை கொண்டுள்ளார் என்பதை நாம் மறவாதிருக்கக்கடவோம்! நாம் மாத்திரம் **தேவனுடைய ராஜ்யத்தை முதலாவது தேடுபவர்களாய்** இருப்போமென்றால், இப்பூமிக்குரிய தேவைகள் யாவையும் நமக்கு ஆண்டவர் நிச்சயமாகவே கூட்டி வழங்கிடுவார்.

நாம் ஏன், உணவு; உடை; வேலை; வீடு; நம் பிள்ளைகளின் கல்வி போன்றவைகளுக்காக மிகுந்த கவலை கொள்ளுகிறோம் தெரியுமா? ஏனென்றால் நம் இருதயத்தின் ஆழத்தில், தேவன் இவ்வித உலகக் காரியத்திற்கெல்லாம் உதவி செய்வதற்கு ஆர்வம் கொண்டிருக்க

மாட்டார் என்ற நம்முடைய தவறான எண்ணமே ஆகும். நம் ஆவிக்குரிய நலன்களுக்கு மாத்திரமே தேவன் அக்கறை கொண்டுள்ளார் எனவும் நாம் எண்ணிக் கொள்ளுகிறோம்.

நம் நல்ல தேவனோ நம்முடைய ஆவி; ஆத்துமா; சரீரம் ஆகிய ஒவ்வொரு பகுதியிலும் அக்கறை கொண்டுள்ளார் என்ற உணர்வை பரிசுத்தாவியானவர் நமக்குள் நிலையாகக் கொடுத்துவிட்டால் அது எத்தனை அருமையாயிருக்கும்! நம் பூமிக்குரிய தேவைகளுக்காக நாம் அவரிடம் விண்ணப்பம் செய்வதையும் தேவன் விரும்புகின்றார். ஏனெனில் நாம் ஒருபோதும் கவலை கொண்டிருக்க அவர் விரும்புவதே இல்லை. எனவேதான் பரிசுத்த வேதாகமம், "**நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல்,** எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் **தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்**" எனக் கூறுகிறது (பிலி.4:6).

பூமிக்குரிய ஓர் தகப்பன் தன்னைச் சுற்றியுள்ள எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்வது அவனுடைய கடமை அல்ல. ஆனால் அவன் தன் **சொந்த குடும்பத்தின்** தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கோ நிச்சயமாய் கடமைப்பட்டிருக்கிறான். தன் பிள்ளைகளாயிராத ஆகாயத்துப் பறவைகளுக்குக்கூட தேவன் ஆகாரம் கொடுக்க அவ்வளவு நல்லவராக இருக்கிறார். அவ்வாறிருக்க, **தன் சொந்தப் பிள்ளைகளின்** தேவைகளைத் தேவன் பூர்த்தி செய்து வழங்குவது எவ்வளவு நிச்சயம்! ஓர் சமயம், கானானிய ஸ்திரீ ஒருத்தி தன் மகளை இயேசு சுகமாக்கும்படி வேண்டிக்கொண்டாள். அப்போது இயேசு அவளை நோக்கி, "**முதலாவது பிள்ளைகள்** திருப்தி அடையட்டும்" எனக் கூறினார் (மாற்கு 7:27). அதற்கு அவள், "பிள்ளைகள் சிந்துகிற துணிக்கைகளை யாகிலும் தனக்குக் கொடுத்தால் அதுவே எனக்குப் போதும்!" என்பதாகப் பதில் கூறினாள். அவளுடைய பதிலினிமித்தம், உடனே அவளுடைய மகள் பூரண சுகம் அடைந்தாள். இதை சற்று சிந்தித்துப் பாருங்கள்! கீழே விழும் மீதித் துணிக்கைகள், பிசாசின் பிடியிலிருந்தே விடுதலை அளிப்பதற்குப் போதுமானதாய் இருந்தது! அப்படியானால், தேவனுடைய சொந்தப் பிள்ளைகளாகிய நாம் பெறும் ஓர் "முழு அப்பம்" எவ்வளவாய் நன்மைகளை ஈட்டித் தராது! இவ்வாறு, "**முதலில் பிள்ளைகள்** திருப்தியடையட்டும்" என இயேசு கூறிய வார்த்தை உங்களைப் பரவசமூட்டவில்லையா! இப்போது நீங்கள் மிகுந்த தைரியத்தோடு, "**எங்கள் தகப்பனே** எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என ஜெபிக்க முடிகிறதல்லவா!

**தேவன் வழங்கியிருக்கும் பொருட்களில் போதும் என்ற மனதுடனிருத்தல்!**

நம் ஆடம்பர வசதிகளுக்காக விண்ணப்பம் ஏறெடுக்கும்படி இயேசு ஒருபோதும் போதிக்கவில்லை என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும்! நாம், "தகப்பனே, எங்களுக்கு வேண்டிய ஐஸ்கிரீமை

இன்று எங்களுக்குத் தாரும்'' என்றல்ல, ''எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்'' என்று ஜெபித்திடவே இயேசு கற்றுத் தந்தார். ''நம் தேவன் தம் ஐசுவரியத்தின்படி நம்முடைய குறைவையெல்லாம் (need -நம் **தேவைகளையெல்லாம்**) நிறைவாக்குவார்'' என்றுதான் வாக்குத்தத்தத்தைப் பெற்றிருக்கிறோம் (பிலி.4:19). அதாவது நாம் விரும்புகிற யாவையும் அல்ல, நமக்குத் தேவையானவைகளையே நாம் பெற்றிடுவோம். நாம் விரும்புவதற்கும், நமக்குத் தேவையா யிருப்பதற்கும் ஆகிய இந்த இரண்டிற்கும் ஏராளமான வித்தியாசம் உண்டு. நீங்கள் ஒரு காரை விரும்பிக் கேட்கலாம்!? ஆனால் தேவனோ, கார் உங்களுக்குத் தேவையென்பதை காணாதபட்சத்தில் உங்களுக்குக் கார் கொடுத்திடமாட்டார். ஒருவேளை இன்னொருவருக்கு கார் தேவையாயிருந்து, அதை ஆண்டவர் அவருக்குத் தந்திருக்கக்கூடும். ஆகவே, கார் பெற்றவர்காக நீங்கள் பொறாமை கொள்ளவோ அல்லது தேவனிடம் முறுமுறுக்கவோ நமக்கு அவசியமே இல்லை! இப்போது உங்களிடத்தில் என்ன இருக்கிறதோ அதில் மாத்திரமே பூரண திருப்தியாய் இருந்துவிட முடியும்! இவ்வாறிருக்கிறபடியால் ஆடம்பர மானவைகளைத் தேவனிடம் ஒருபோதும் கேட்காதீர்கள். அப்படியே தேவன் உங்களுக்கு ஆடம்பரமான சில பொருட்களைக் கொடுத்தாலும், அதையும் நீங்கள் தயங்காமல் பெற்றுக்கொண்டு அவைகளைத் தேவனுடைய மகிமைக்காகவே உபயோகப்படுத்துங்கள்! அப்படி அவர் ஏதும் கொடுக்காவிட்டாலும், நாம் இன்னமும் தேவனை உளமார ஸ்தோத்தரிப்பவர்களாகவே காணப்பட வேண்டும்!

நம்மை நாமே ஒருபோதும் **பிறரோடு ஒப்பிடாதிருப்போமாக.** நமக்கு அருமையானது இன்னது என்பதை தேவன் அறிந்திருக்கிறார். நாம் அவரிடம் அப்பத்தைக் கேட்டால் அவர் ஒருக்காலும் கல்லைத் தரமாட்டார். ஒருவேளை நாம் 'அறியாமல்' கல்லைக் கேட்டாலும், அவ்விதம் கேட்டதற்காக அவர் உடனே கல்லைத் தந்துவிடாமல் அப்பத்தையே நமக்குத் தருவார்!

அவர் வழங்கும் உலகப்பொருட்களில் **மன திருப்தி** காணுங்கள். அப்போஸ்தலனாகிய பவுலின் ஜீவியத்தின் இரகசியங்களில், ''அவர் சகலத்திலும் **சம்பூரண மன நிறைவு** கொண்டிருந்தார்'' என்பதும் ஒன்றாகும்! பிலிப்பியர் 4:11-ல், ''நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மன ரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன்'' என சற்றும் தயக்கமின்றி கூறும் அவரின் சாட்சி நம்மை உணர்வடையச் செய்வதாக!

**அன்றாட நமது தேவைகள்!**

''எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை **இன்று** எங்களுக்குத் தாரும்'' என்றே நாம் ஜெபிக்க இயேசு கற்றுத் தந்தார். இருப்பினும் அநேக நாட்களுக்குத் தேவையான ஆகாரத்தை ஒரே நேரத்தில் மொத்தமாகத் தேவன் கொடுத்திடவும் கூடும்! ஆனால் நம்முடைய விண்ணப்பமோ

*ஒரு நாளுக்குரிய நம்முடைய சரீரத் தேவைகளுக்காக மாத்திரமே இருந்திட வேண்டும். நாளை சம்பவிக்கிறவைகளுக்காகக் கூட நாம் கவலைப்படக் கூடாது என இயேசு கூறினார்.* **பார்த்தீர்களா, எதிர் காலத்துக்காக நாம் கவலைப்படக்கூடாது என இந்த நல்ல ஆண்டவர் விரும்புகிறார்.** *ஆகிலும், நாமோ, நாள்தோறும் நம்* **ஆண்டவரைச் சார்ந்தே** *சதா ஜீவித்திட வேண்டும். இவ்விதம் அவரைச் சார்ந்து ஜீவிக்கும் பாடத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்தரத்தில் மிக அருமையான வழியில் தேவன் கற்றுத் தந்தார். வனாந்தரத்தில் அவர்கள் ஒவ்வொருநாள் காலையும் வெளியே சென்று மன்னாவை சேகரிக்க வேண்டும். அவர்களால் ஒரே சமயத்தில் அநேக நாட்களுக்குரிய மன்னாவை சேகரிக்க முடியவில்லை. ஆம், அவர்கள்* **நாள்தோறும்** *தங்கள் ஆண்டவரைச் சார்ந்தே ஜீவிக்க வேண்டியதாயிருந்தது. இவ்விதமாய் அவர்கள் 40 வருடங்கள் ஜீவித்தார்கள். இவ்வித வாழ்க்கை ஓர் கஷ்டமான வாழ்க்கையாக இருந்திருக்கும் என எண்ணுகிறீர்களா? இல்லை, நிச்சயமாய் இல்லை! இவ்வித வாழ்க்கை அவர்களுக்கு மிகுந்த "பரவசத்தையே" கொடுத்தது!*

*ஒரே நேரத்தில் நமக்கு தேவன் அதிகமாய்க் கொடுத்துவிட்டால், நம் இருதயம் அவரைவிட்டுத் தூரமாக விலகிச் சென்றுவிட முடியும். எனவேதான் சரீரப்பிரகாரமான நம் தேவைகள் "அவ்வப்போது உருவாகும்படி" தேவன் நம் ஜீவியத்தில் சூழ்நிலைகளைக் கட்டளையிடுகிறார். இப்பூமியில் ஆவிக்குரியவைகளைவிட சரீரத்திற்குரியவைகளே நம்மை அதிகமாய் தொட்டுக் கொண்டிருக்கிறது! எனவே தான் இவ்விதமாய் தேவைகள் நம் வாழ்க்கையில் தோன்றும்படி தேவன் அனுமதிப்பது மூலமாய், நாம் அவரை மறுபடியும் மறுபடியும் சார்ந்திருக்கும்படிச் செய்கிறார். இவ்வாறாகத்தான் தொடர்ச்சியாகத்* **தேவனை சார்ந்து கொள்ளும் ஜீவியத்தை** *நாம் கற்றுக் கொள்ளுகிறோம்.*

*வானத்திலிருந்து மன்னா பூமியில் விழுந்தது. இருப்பினும், இந்த மன்னா நேரடியாக 'இஸ்ரவேலர்களின் வாய்க்குள்' விழும்படியாக தேவன் செய்யவில்லையே! இந்த இஸ்ரவேலர்கள் ஒவ்வொருநாள் காலையும் வெளியே செல்ல வேண்டும்! அவைகளைப் பொறுக்கி சேகரிக்க வேண்டும்! அவர்களில் சோம்பேறிகளாய் இருப்பவனுக்கோ ஒன்றும் கிடைக்காது. எனவே, "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என ஜெபிக்கும் நாம், ஒரு வேலையும் செய்யாமல், தேவனே அற்புதம் செய்து நம் தேவைகளைப் போஷிக்க வேண்டும் என்று எண்ணி நாம் ஒருபோதும் ஜெபிப்பதில்லை! வேதாகமம், "ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது" எனத் தெளிவாகக் கூறுகிறது (2 தெச.3:10). நம் பரம தகப்பனே ஆகாயத்துப் பறவைகளை போஷிக்கிறார் என இயேசு கூறினார். ஆனால் அவர் நேரடியாக பறவைகள் வாய்க்குள் ஆகாரத்தைப் போடுவதில்லை! இப்பறவைகள் வெளியேறிச் சென்றுதான் தங்கள்*

இரையைத் தேடவேண்டும். இவைகளைப் போலவே நாமும் கடினமாய் உழைக்கவும்.... அதேசமயம், அவரை நம்பியிருக்கவும் தேவன் எதிர் பார்க்கிறார். ஆம், விசுவாசத்தை கடின உழைப்பிற்கு ஓர் மாற்றாக நாம் ஒருபோதும் எண்ணிவிடக் கூடாது!

**தேவசித்தம் செய்வதற்காகவே சரீர சுகம்!**

"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்ற ஜெபம் இதற்கு முன் உள்ள விண்ணப்பமான, "பரலோகத்தில் உம்முடைய சித்தம் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப் படுவதாக" என்ற விண்ணப்பத்திற்குத் தொடர்புடையதாகவே இருக்கிறது. நாம் தேவனுடைய சித்தம் செய்வதற்காகவே சரீர சுகத்தின் பெலனையும் ஆண்டவரிடம் ஜெபித்துப் பெற்றுக் கொள்ளுகிறோம்! ஜனங்கள் சுகவீனமாகும்போது, அவர்கள் சுகம் பெற வேண்டி என்னை ஜெபிக்க அழைப்பதுண்டு. அச்சமயத்தில், "இம்மனிதன் நோயிலிருந்து சுகம் பெற்று தேவனை உண்மையாய் ஆராதிக்க விரும்புகிறானா? அல்லது இம்மனிதன் தனக்காக வாழ விரும்புகிறானா? இவ்வாறு, இம்மனிதன் உலகத்திற்காக வாழும் பொருட்டு இவன் சுகமாக வேண்டுமென நான் ஆண்டவரிடம் ஜெபிக்கலாமா?" என நான் வியப்பதுண்டு. நம்முடைய சரீரத் தேவைகளுக்காக நாம் ஜெபித்திட இயேசு கற்றுத் தந்ததின் நோக்கம், நம்முடைய சுயசித்தம் செய்ய அல்ல ..... தேவசித்தம் செய்வதற்காகவே ஆகும்!

**ஓர் குடும்ப ஜெபம்!**

"... எனக்குத்தாரும்" என்றல்ல "...எங்களுக்குத் தாரும்" என்பதாகவே இந்த ஜெபம் இருப்பதைக் கவனியுங்கள்.

தன் ஜீவியத்தில் **தேவனை முதன்மையாக** வைப்பவன், தன்னை 'இரண்டாவதாக' வைத்துக்கொள்ள முடியாததை சீக்கிரத்தில் கண்டு கொள்வான். நாம், பிதாவின் சாப்பாட்டு மேஜையைச் சுற்றி பந்தியிருக்கும் **ஒரே குடும்பத்தின்** அங்கத்தினர்களாவோம். தன்னோடு அமர்ந்திருக்கும் மற்றவர்களுக்கும் சாப்பிட போதுமானது இருக்கிறதா என்பதில் அக்கறை கொள்ளாமல், தானே எல்லா பண்டங்களையும் வாரிப் புசித்திடும் சுயநலமான பிள்ளைகளை பிதா ஒருபோதும் விரும்புவதில்லை! இவ்வித சுபாவத்தை மனந்திரும்பாத மனுஷர்கள் கூட கெட்ட சுபாவம் என்றுதான் கூறுவார்கள். அப்படியானால், இத்தீய சுபாவத்தை ஓர் கிறிஸ்தவன் கொண்டிருந்தால்.... அது எவ்வளவு கொடுமை!

நியாயத்தீர்ப்பின் நாளைக் குறித்து இயேசு கூறிய வசனங்களை சற்று எண்ணிப்பாருங்கள். அவர் ஜனங்களை நியாயந்தீர்க்கும்படி தனது சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போது, தன்னைச் சுற்றியுள்ளவர்களைப் பார்த்து, "பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்க வில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங் கொடுக்க வில்லை; வியாதியுள்ளவனாயிருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க

வரவில்லை" எனக் கூறினார். அதற்கு அவர்கள், "ஆண்டவரே இதெல்லாம் எப்போது சம்பவித்தது? உம்மைப் பசியுள்ளவராகவும், வஸ்திரமில்லாதவராகவும் நாங்கள் ஒருபோதும் காணவில்லையே" என பதிலுரைத்தார்கள். அதற்கு ஆண்டவர் பிரதியுத்தரமாக, "நான் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள் மத்தியில் வாழ்ந்தேன்! என்னுடைய சகோதரரிலொருவன் குறைச்சலிலிருப்பதை நீங்கள் கண்டபோது, அவ்விதம் குறைச்சலிலிருந்தது **நான்தான்** என்பதை உங்களால் கண்டு கொள்ள முடியவில்லை! **நான்தான்** பசியோடும் தாகத்தோடும் என் சகோதரர் மத்தியில் இருந்தேன் என்பதையும் நீங்கள் அறியவில்லை!!" என்றும் பதிலுரைத்தார் (மத்.25:31-46 - விரிவாக்க வசனங்கள்).

இதுவே, பரலோகத்திற்கும் பாதாளத்திற்கும் இடையில் காணப்படும் முக்கியமான அடிப்படை வித்தியாசங்களில் ஒன்றாகும். பாதாளம், பாவத்தாலும்..... சுயம்-மையம் கொண்ட வாழ்வாலும் நிறைந்திருக்கிறது. பாதாளத்தில் வாழும் ஒவ்வொரு மனுஷனும் தனக்காகவே ஜீவிப்பவனாவான். இவன், தேவனுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ இடந்தரமாட்டான். ஆனால் பரலோகத்தின் ஜீவியமோ இதற்கு முற்றிலும் நேர்மாறானதாகும். அங்கே **தேவனே** முதன்மை பெற்றிருப்பார்! இரண்டாவது இடத்தையோ, **மற்றவர்களே** பெற்றிருப்பார்கள்!

பரலோகத்தையும், பாதாளத்தையும் உருவகப்படுத்தும் கனவு ஒன்றை ஒரு மனிதன் கண்டான். அக்கனவில், அம்மனிதனே முதலாவது பாதாளத்திற்குள் சென்றான். அங்கே பாதாளத்தில் சுவைமிக்க உணவுப் பண்டங்கள் நிறைந்த மேஜையைச் சுற்றி ஒவ்வொருவரும் உட்கார்ந் திருக்கக் கண்டான். அவ்வாறிருந்தும் மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்த யாவரும் எலும்பும் தோலுமாய் நோயுற்று, வாடி வதங்கிப் போயிருந் தார்கள். ஏன் அவர்கள் அவ்வாறிருக்கிறார்கள் என்பதை, கனவில் நரகத்திற்குச் சென்ற அந்த மனிதன் சீக்கிரத்தில் கண்டுபிடித்து விட்டான். ஏனெனில், அங்கே உட்கார்ந்திருந்த ஒவ்வொருவருடைய கையிலும் நான்கு அடி நீளமுள்ள நீண்ட ஸ்பூன் இணைக்கப்பட்டிருந்தது. இதனிமித்தம், தங்களுக்கு முன் இருந்த உணவை அவர்களால் புசிக்க முடியவில்லை! உண்மைதான், உங்கள் கையிலும் 4 அடி நீளமுள்ள ஸ்பூன் பொருத்தப்பட்டிருந்தால் உங்கள் முன் இருக்கும் உணவை நீங்கள் நிச்சயமாய் சாப்பிட முடியாது.

அதே கனவில், நரகத்திற்குச் சென்ற அந்த மனிதன் இப்போது பரலோகம் சென்றான்! அங்கே நரகத்திலிருந்தது போலவே சுவையான பண்டங்கள் நிறைந்த மேஜையையும், அதைச் சுற்றி அமர்ந் திருப்பவர்களையும் கண்டான். மேலும், பரலோகத்தில் மேஜையைச் சுற்றி அமர்ந்திருந்தவர்களின் கைகளிலும் நான்கு அடி நீளமுள்ள ஸ்பூன் இணைக்கப்பட்டிருந்தது! ஆனால், இங்கு காணப்பட்ட பெருத்த வித்தியாசம் யாதெனில், இவர்கள் யாவரும் ஆரோக்கியமாய் புஷ்டியுடன்

காணப்பட்டார்கள். அப்போது அம்மனிதன் வியந்து, அங்கிருந்த ஒருவரிடம், “நீங்கள் மாத்திரம் எங்ஙனம் ஆரோக்கியமாக புஷ்டியுடன் காணப்படுகிறீர்கள்?” என வினவினான். அதற்கு மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவர், “இங்கு அமர்ந்து என்னை நானே போஷித்துக் கொள்ள முடியாது என்பதை உணருகிறேன். எனவே என் ஸ்பூனைக் கொண்டு உணவை அள்ளி மேஜைக்கு அடுத்த பக்கத்தி லிருக்கும் சகோதரனுக்கு ஊட்டுகிறேன். அதைப்போலவே மேஜைக்கு அப்புறத்திலிருக்கும் சகோதரன் தன்னுடைய ஸ்பூனில் உணவை அள்ளி எனக்கு ஊட்டுகிறான்! இவ்விதமே நாங்கள் ஒவ்வொருவரும் போதுமான அளவு வயிறாரப் புசிக்கிறோம்” என பதிலுரைத்தான். இக்காட்சியைக் கண்ட அம்மனிதன் துரிதமாய் பாதாளத்திற்கு ஓடோடிச் சென்றான். அங்கே உணவு மேஜையைச் சுற்றியிருந்த ஜனங்களைப் பார்த்து, “ஹே! இதோ நல்ல விடையோடு வந்திருக்கிறேன்! நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் தட்டில் உள்ள உணவை எடுத்து மேஜைக்கு அப்புறத்திலிருக்கும் சகோதரன் சாப்பிடும்படி ஊட்டுங்கள்!” என பூரிப்போடு கூறினான். ஆனால் மேஜையைச் சுற்றியிருந்த யாவரும், ஒருவர் பாக்கியில்லாமல், “**என் தட்டிலிருந்து இன்னொருவன் சாப்பிட** நான் ஒருக்காலும் அனுமதிக்க மாட்டேன்!” என ஏகமாய் கூறினார்கள்!? மேலும் அவர்கள், “என் தட்டிலிருந்து நான் கொடுத்து விட்டால், அவன் தன் தட்டிலிருந்து எனக்குக் கொடுப்பான் என்பதை நான் எப்படி உறுதி செய்ய முடியும்!” என்றும் பதிலுரைத்தார்கள்!?

பார்த்தீர்களா, நாய்களின் கொட்டடியில்தான் அவைகள் “தானும் தின்னாமல் வேறு நாயையும் தின்னவிடாமல்” இருக்கும் காட்சியைக் கண்டிருக்கிறோம். இவ்வித **அகோரமான சுயநலமே** நரகத்தில் நிரம்பி வழிந்தோடுகிறது! அங்கிருப்பவர்கள் யாவரும், “**எனக்கு வேண்டிய ஆகாரம் எங்கே?**” என்றே பித்தாயிருப்பார்கள். கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதரர்கள்மீதும், சகோதரிகள்மீதும் உங்களுக்கு அக்கறை இல்லா விட்டால் **உங்கள்** அன்றாட போஜனத்திற்காக இந்த அருமையான ஜெபத்தை உங்களால் ஒருபோதும் ஜெபித்திடவே முடியாது.

ஆபிரகாம் தன் ஜீவியத்தில் ஓர் சமயம் வாக்குதத்தம் செய்யப்பட்ட மகனை சாராளின் மூலம் பெறுவதற்கு 25 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதிருந்தது. அப்படியிருந்தும் அவள் இன்னமும் பிள்ளை பெறவில்லை. ஆபிரகாம் எவ்வளவோ ஜெபித்தும் பதில் கிடைக்க வில்லை! பின்பு அவன் **கேரார்** என்ற இடத்திற்கு வந்தபோது அங்கிருந்த ஜனங்களை தேவன் நியாயந்தீர்த்திருப்பதைக் கண்டான். எப்படி யெனில், கேராரின் புருஷர்களின் மனைவிமார்கள் யாவரின் கர்ப்பமும் அடைக்கப் பட்டு மலடியாயிருந்தார்கள்! இந்த அவலநிலையைக் கண்ட ஆபிரகாம், அந்த ஸ்திரீகளுக்குத் தேவன் புத்திர சந்தானம் அருளும்படி தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான் (ஆதி.20:17). இவ்வாறு வேண்டிக் கொண்ட இந்த ஆபிரகாம் யார்? தன் சொந்த மனைவிக்குப் பிள்ளை

*வேண்டும் என்ற விண்ணப்பத்திற்கு இன்னமும் பதில் பெறாமல் நின்றவனே இந்த ஆபிரகாம்! ஆனால்,* **கேரார் ஸ்திரீகளுக்காக ஆபிரகாம் ஜெபித்ததையோ** *தேவன் உடனடியாகக் கேட்டு அவர்கள் பிள்ளை பெறும்படி அநுக்கிரகம்பண்ணினார். இத்தோடு தேவன் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் என்றா எண்ணுகிறீர்கள்? இல்லவே இல்லை!* **இத்தக்க தருணத்தில்** *சாராளிற்கும் தான் வாக்குரைத்த மகனைத் தேவன் தந்தருளினார் (ஆதி.21:11). ஆம், ஆபிரகாம் மற்ற ஜனங்களுக்காக ஜெபித்த பொழுது, தேவன் அவனுடைய சொந்த தேவையையும் பூர்த்தி செய்தார்!*

*யாரெல்லாம் தேவனை முதன்மையாகவும்; பிறரை அடுத்ததாகவும்; வைத்து சிந்தித்து அக்கறை கொள்ளுகிறார்களோ அவர்களே தேவனுக்குரிய அருமையானதை தங்கள் வாழ்வில் பெற்று மகிழ்வார்கள். "யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார்" (யோபு 42:10). ஆம், இதுவே தேவனுடைய என்றென்றும் மாறாத வழியாகும். இதனிமித்தமே, நம் சரீரத் தேவைகளைக் குறித்த இந்த விண்ணப்பம் இரண்டு விண்ணப்பங்களுக்கு நடுவே இழையோடி வந்திருப்பதைப் பாருங்கள். இந்த விண்ணப்பத்திற்கு மேல் உள்ள விண்ணப்பம் யாதெனில்,* "**உம்முடைய சித்தம்** *பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்பதுதான். கீழ் உள்ள விண்ணப்பம் யாதெனில், "எங்களுக்கு விரோதமாய் குற்றம் செய்தவர்களை* **நாங்கள் மன்னிக்கிறது போல** *எங்கள் குற்றங்களை எங்களுக்கு நீர் மன்னியும்" என்பதுதான். இவ்வாறு நீங்கள் தேவனுடைய சித்தம் செய்வதற்கும், உங்களுக்குத் தீமை செய்தவர்களை மன்னிப்பதற்கும், நீங்கள் உண்மையிலேயே ஆர்வம் கொண்டிருக்கிறார்களா? அல்லது, ஒரு சிறு பிள்ளைக்கு கிரீம் பிஸ்கட்டை கொடுக்கும்போது, அந்தப் பிள்ளை அந்த இரண்டு பிஸ்கட் துண்டுகளுக்கு நடுவே இருக்கும் கிரீமை மாத்திரம் தின்றுவிட்டு பிஸ்கட் துண்டுகளைத் தூர எறிகின்ற பிள்ளையைப்போல் இருக்கின்றீர்களா? ஆம், இன்று அநேகர் "அன்றாட ஆகாரத்தை எங்களுக்குத் தாரும்" என்ற தங்களுடைய விண்ணப்பம் கேட்கப்பட்டு தங்கள் பூமிக்குரிய தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதில் மாத்திரமே திருப்தி கொண்டு, இந்த விண்ணப்பத்திற்கு மேலேயும் கீழேயும் உள்ள விண்ணப்பத்தைப் புறக்கணிக்கிறவர்களாகவே இருக்கிறார்கள்!*

*இன்றைய கிறிஸ்தவர்களில் சிலர் குன்றின் ஓர் முனைக்கும், வேறு சிலர் குன்றின் மறுமுனைக்குமாய் ஓடுகிறார்கள்! அதாவது, சிலர் தங்கள் உலகத் தேவைகளுக்காக ஜெபிப்பது தவறு எனக் கூறி "சூப்பர்-ஆவிக்குரியவர்களாக" இருக்கப் பார்க்கிறார்கள்! வேறு சிலரோ தங்கள் சரீர-பொருளாதார தேவைகளுக்காக மாத்திரமே ஜெபித்து மாய்ந்திடும் மனிதர்களாய் இருக்கிறார்கள்! ஆனால் யாரெல்லாம் இயேசு கற்பித்த பாடத்தை தராசு போல் சமநிலைப்படுத்த கற்றுக்கொண்டார்களோ, அவர்கள் மெய்யாகவே பாக்கியவான்கள்!*



# 7

## நம் பாவங்கள் மன்னிக்கப்படும் புண்ணியம்

"எங்கள் கடனாளிகளுக்கு மன்னிக்கிறதுபோல
எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்"

**பா***வம் செய்வது தேவனுக்கு கடன்படுவதாகும்! நாம் தேவன் வகுத்த கற்பனைகளையோ அல்லது தேவன் நமக்கு வரையறுத்த எல்கையையோ மீறி பாவஞ்செய்தால் தேவனுக்கு கடனாளியாகிறோம்.*

### மனசாட்சியின் விலையேறப் பெற்ற மதிப்பு!

*இப்பூமியில் சிருஷ்டிக்கப்பட்ட சர்வ சிருஷ்டிகளிலும் மனுஷன் மாத்திரமே தான் செய்ய தவற்றிற்காய் குற்றஉணர்வைப் பெறுகிறான். இவ்விதமே மிருகங்களிலிருந்து மனுஷன் பிரதானமாய் வேறுபட்டிருக்கிறான். ஒரு நாய், ஏதேனும் தவறு செய்யும்போது குற்றஉணர்வு அடைவதில்லை. அந்த நாய் தன் எஜமானனால் குற்றஉணர்வு அடையும்படி பழக்குவிக்கப்பட்டால் மாத்திரமே தன் குற்றத்தை உணரும். ஆனால் மனுஷன் அப்படியில்லை! ஓர் அடர்ந்த காட்டில், எந்த மதத்தையும் கேள்விப்படாமலும், யாரைக் கொண்டும் போதிக்கப்படாமலும், 'பைபிள்' என்பது என்ன என்பதை ஒரு தடவைகூட கேள்விப்படாமலும் இருக்கும் ஒரு மனிதன்கூட தன் குற்றத்தை உணரும் தன்மையுடையவனாயிருக்கிறான்! தன் சிருஷ்டிகரைத் துக்கப்படுத்திவிட்டதாக* **அவர்களுடைய மனசாட்சியே** *அவர்களுக்குள் பேசுகிறது. இந்த சர்வ உலகத்தையும் நீங்கள் தேடினாலும், மார்க்கத்தில் ஈடுபாடு கொண்ட ஒரு குரங்கையோ அல்லது நாயையோ* (Religious Monkey or Dog) *நீங்கள் ஒருக்காலும் காணவே முடியாது!*

*தேவன் நமக்கு அருளிய விலையேறப்பெற்ற ஈவுகளில் மனசாட்சியும் ஒன்றாகும். தேவனோடு கொண்டுள்ள உறவில் ஏதேனும் தவறு ஏற்பட்டால், இந்த மனசாட்சி உடனே நம்மை எச்சரிக்கும்! நம் சரீரத்திற்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் நம்மை எச்சரிப்பதற்கு 'வலி' உண்டாவதைப் போலவே மனசாட்சியும் கிரியை நடப்பிக்கிறது.*

### பாவத்தை நேர்மையாக அறிக்கை செய்தல்!

*இன்று அநேக ஜனங்கள், "பிதாவே, எங்கள் பாவங்களை மன்னியும்" என ஜெபிக்கிறார்கள். ஆனால், முதலாவது நாம் அவரிடம்* **பாவத்தை அறிக்கை செய்யாமல்** *நம் பாவங்களை மன்னிக்கும்படி தேவனிடம் கேட்க முடியாது என்பதையோ இந்த ஜனங்கள் உணர்வதேயில்லை. ஆம், நாம் முதலாவது நூற்றுக்கு நூறு நேர்மையான உள்ளத்தோடு, நம் பாவங்களை மறைக்காமல் அவைகளை ஆண்டவரிடம் அறிக்கை செய்ய வேண்டும்.*

"தன் பாவங்களை **மறைக்கிறவன்** வாழ்வடைய மாட்டான்" என தேவனுடைய வார்த்தை கூறுவதைக் கேளுங்கள் (நீதி.28:13). இருப்பினும், தன் பாவங்களை மறைக்கிறவன், "ஆண்டவரே, என்னை மன்னியும், மன்னியும்" என ஜெபித்துக் கொண்டேயிருக்கலாம். ஆனால், இவ்வித ஒருவன் ஒருக்காலும் மன்னிக்கப்படவே மாட்டான்! "...அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ (அவன் மாத்திரமே) இரக்கம் பெறுவான்" என நீதி.28:13 - தொடர்ந்து கூறுவதைப் பாருங்கள். மேலும் பரிசுத்த வேதாகமம் கூறுவது யாதெனில், "நம்முடைய பாவங்களை **நாம்** அறிக்கையிட்டால் (இதை **நாம்தான்** செய்ய வேண்டும்), பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத் தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ள வராயிருக்கிறார் (இதை **தேவன்** செய்வார்)" (1யோவான் 1:9). பார்த்தீர்களா! நாம் நம்முடைய பங்கை நிறைவேற்றினால், தேவன் உண்மையுள்ளவராயிருந்து தன் பங்கை நிச்சயமாய் நிறைவேற்றுவார்!

ஆதாம் பாவத்தில் வீழ்ச்சியடைந்த நாளிலிருந்து, மனுஷன் தன் பாவத்தை அறிக்கை செய்வதற்குப் பதிலாக அவைகளை **'மறைக்கும்' சுபாவத்தையே** பெற்றிருக்கிறான். ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தவுடன் அவர்களிடம் பிரதிபலித்த முதலாவது கிரியை என்ன தெரியுமா? அவர்கள் உடனே தேவனிடம் ஓடிச்சென்று, "ஓ! என் தேவனே! எதைச் செய்யக்கூடாதென நீங்கள் என்னிடம் கூறினீர்களோ அவைகளைச் செய்துவிட்டோம்! ஐயோ, நாங்கள் பாவம் செய்து விட்டோமே!" என்றா கூறினார்கள்? இல்லவே இல்லை! அப்படி அவர்கள் நடந்து கொள்ளவே யில்லை. அவர்களோ, தேவனை விட்டு விலகி ஓடித் தங்களை ஒளித்துக் கொள்ளவே முயற்சித்தார்கள். இது எவ்வளவு பெரிய மதியீனம்! சர்வ வல்ல தேவனுக்கு முன்பாக இந்த ஆதாமும் ஏவாளும் ஓர் மரத்திற்குப் பின்னால் ஒளிந்துகொள்ளக் கூடுமோ?

வீழ்ச்சியடைந்த மனிதனின் இரண்டாவது முக்கியமான சுபாவம் யாதெனில், தன் பாவங்களுக்காகப் பிறரை பழி சுமத்துவதுதான்! ஆதாமின் பாவத்தை வெளியரங்கமாக்கின தேவன், "இம்மரத்தின் கனியை நீ புசித்தாயோ?" என வினவினார். அதற்கு ஆதாம் கூறிய பதில் என்ன தெரியுமா? ஆதாம் தன் **மனைவியின் மீது** பழியைப் போட்டான்! அவன் மனைவியோ **சர்ப்பத்தின்மீது** பழியைப் போட்டாள்! இதே சுபாவம்தான் ஆதாம்-ஏவாளிடமிருந்து நம் எல்லோருக்கும் இறங்கி வந்துள்ளது. நாம் செய்த தவற்றிற்கு நாம் பொறுப்பாளி அல்ல, என சாதித்து **நம்மை நியாயப்படுத்தவே** எப்போதும் முயற்சிக்கிறோம். நாம் தவறு செய்யும்போது கையும்-மெய்யுமாய் பிடிக்கப்பட்டால்கூட "இந்த சூழ்நிலை என்னை இப்படிச் செய்ய வைத்துவிட்டது" என்றும் "இதெல்லாம் என் பெலவீனம்" என்றும் சாமர்த்தியமாகவே கூறி விடுகிறோம். இவ்விதமாய் நம்முடைய பாவங்களை அறிக்கை செய்வதற்குப் பதிலாக, அவைகளை ஒளித்து வைக்கவே நாம்

முயற்சிக்கிறோம். இப்போது சம்பவிப்பது யாது? 'இப்படிப்பட்ட நாம்' தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளவே மாட்டோம்!

**ஒளியில் நடந்திடும் ஜீவியம்!**

ஒருவன் ஒளிக்குள் பிரவேசிப்பதைக் குறித்து இயேசு கூறும்போது, "மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளையே விரும்புகிறார்கள். **பொல்லாங்கு செய்கிற** எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். **சத்தியத்தின்படி செய்கிறவனோ** ஒளியினிடத்தில் வருகிறான்" என இயேசு கூறினார் (யோவான் 3:19-21). இங்கே உள்ள வேறுபாட்டைக் கவனியுங்கள். பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான் என்றுதான் இயேசு கூறினார். 'பொல்லாங்கு' என்ற வார்த்தைக்கு எதிர்பதம் 'நன்மை' என்றே நாம் பொதுவாய் அறிந்திருக்கிறோம். எனவே இயேசு தொடர்ந்து கூறும்போது, "நன்மை செய்கிற எவனும் ஒளிக்குள் வருகிறான்" என கூறுவாரென்றே நாம் எதிர்பார்த்து எண்ணியிருப்போம்! ஆனால் இயேசுவோ அப்படிக் கூறவில்லை. மாறாக, "சத்தியத்தின்படி செய்கிறவனே" (Practices the truth) ஒளியினிடத்தில் வருகிறான், என இயேசு கூறினார்!

இங்கு கண்ட வேறுபாட்டைப் புரிந்து கொண்டீர்களா? ஆம், இயேசு நம்மிடம் முதலாவது எதிர்பார்ப்பது நன்மையை அல்ல! நேர்மையாக இருக்கும் **உண்மையையே** முதலாவதாய் எதிர்பார்க்கிறார்! எனவே இவ்வசனத்தின் பொருள், "நேர்மையாக இல்லாதவனே பொல்லாங்கு செய்கிறவன். ஆனால், தான் பூரணமாயில்லாதிருந்தும் ஒளியினிடத்தில் வருகிறவன் எவனோ, அவனே, நேர்மையுள்ளவன்!" என்பதுதான். நாம் நன்மையினால் பூரணமான பின்புதான் ஒளியினிடத்தில் வரமுடியுமென்றால் நம்மில் ஒருவர்கூட ஒருக்காலும் ஒளியினிடத்தில் வரவே முடியாது! ஆனால் தேவனோ, நேர்மையான ஜனங்கள் யாவரையும் தன்னண்டை வரும்படி அழைக்கிறார். நேர்மையுள்ளம் கொண்டவர்கள்... நாட்கள் செல்லச் செல்ல, கொஞ்சம் கொஞ்சமாய் நன்மையிலும் வளர்வார்கள்!

நாம் நேர்மையை விரும்புகிறவர்களாயிருந்தால் மாத்திரமே, "எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்" என்ற ஜெபத்தை மெய்யாய் ஜெபித்திட முடியும். இவ்வாறு யாரெல்லாம் **நேர்மையுள்ளவர்களாய்** தங்கள் பாவத்தை ஒத்துக்கொண்டு ஒளியினிடத்தில் வருகிறார்களோ அவர்களே 'சத்தியத்தின்படி' ஜீவிப்பவர்கள். இப்படிப்பட்டவர்களுடைய பாவம் நிச்சயமாய் கழுவப்பட்டுவிடும்! "அவர் ஒளியிலிருக்கிறது போல **நாமும் ஒளியிலே நடந்தால்** ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1யோ.1:7). இந்த வசனத்தில் காணப்படும் "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி

நம்மைச் சுத்திகரிக்கும்'' என்ற வாக்கியத்தைத் தங்களுக்கென சொந்தம் பாராட்டுவோர்கள் அநேகருண்டு. ஆனால், இந்த வாக்கியத்தை மட்டும் எடுத்துக்கொண்டு ஒருவன் அதை தனக்கென சொந்தம் கொண்டாட முடியாது! ஆம் இவ்வசனத்தின் முதல் பகுதியாகிய, ''**நாமும் ஒளியிலே நடந்தால்...**'' என்ற நிபந்தனையை நிறைவேற்றுகிறவனை மாத்திரமே இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சுத்திகரிக்கும்! உதாரணமாக, நான் ஒரு இருட்டான இடத்தில் அமர்ந்திருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். இச்சமயத்தில் நான் வெளிச்சத்திற்குள் வந்தால், நான் முழுவதுமாக வெளியரங்கமாக்கப்பட்டு விடுவேன். அதாவது என்னுடைய சட்டை அழுக்காக இருந்தால் அந்த வெளிச்சத்தில் அது தெரிந்துவிடும்! இருப் பினும் என் சட்டையின் அழுக்கை இந்த வெளிச்சம் கழுவ முடியாது. என்னுடைய சட்டை அழுக்காக இருக்கிறது என்ற உண்மை நிலையை மாத்திரமே இந்த வெளிச்சம் வெளியரங்கமாக்க முடியும். அதுவும், நான் என்னை மறைத்துக்கொள்ள விரும்பாமல் நான் காண்பவைகளைக் குறித்து நேர்மையுள்ளவனாயிருந்தால் மாத்திரமே அவ்விதம் சம்பவிக்கும்!

இந்த சத்தியத்தை நாம் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். ஏனெனில் இந்த சத்தியம், நாம் தேவனோடு உறவு கொள்வதற்காக மாத்திரமல்லாமல், நம் சக விசுவாசிகளிடமும் ஐக்கியமான உறவை உருவாக்க வகை செய்கிறது. நாம் தேவனோடு கொள்ளும் நேர்வசமான உறவும் (Vertical) நம் சக விசுவாசிகளிடம் கொள்ளும் படுக்கைவசமான (Horizontal) உறவும் ஆகிய இந்த இரண்டையும் கொண்டதுதான் கிறிஸ்தவ ஜீவியம். இதில் ஒன்றில்லாமல் மற்றொன்றிற்கு இடமில்லை! உங்கள் சக விசுவாசியோடு நீங்கள் ஐக்கியமாயிராமல் தேவனோடு ஐக்கியம் கொண்டுவிடலாமென எண்ணாதீர்கள்! அது ஒருபோதும் சாத்திய மாகாது! அவ்விதமே 1யோவான்.4:20-ம் வசனம், ''தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால் **அவன் பொய்யன்**'' என்றே கடுமையான எச்சரிப்புடன் கூறுகிறது. நீங்கள் உண்மையாகவே தேவனை அன்புகூருவீர்களென்றால், உங்கள் சகோதரனையும் அன்புகூருவீர்கள்!

**பிறரிடம் கொள்ளும் குறுக்குவசமான உறவில் சீர்பொருந்தியிருத்தல்!**

நாம் தேவனுக்கு இழைத்த தீங்கிற்காக தேவனிடம் அறிக்கை செய்ய வேண்டியதாயிருப்பது போலவே, நம் சக மனிதர்களுக்கு இழைத்த தீங்கிற் காகவும் நாம் அவர்களிடம் அறிக்கை செய்ய வேண்டியதாயிருக்கிறது. இவ்விதம் அறிக்கை செய்யாத ஒருவனுக்கோ 'பாவமன்னிப்பு' ஒருக் காலும் கிட்டாது. நாம் யாருடைய பணத்தையாவது ஏமாற்றியிருப்போ மென்றால் அப்பணத்தை அந்த நபரிடம் திருப்பித்தர வேண்டும். இல்லா விட்டால், தேவன் நம்மை மன்னிக்க முடியாது. நாம் உண்மையாகவே மனந்திரும்பியிருக்கிறோம் என்பதைக் காட்டுவதற்கு, ''நாம் யாருக் கெல்லாம் தீங்கிழைத்தோமோ அவர்களிடம் அறிக்கை செய்வதும், தவறாக எடுத்துக்கொண்ட பொருட்களை அவர்களிடம் திரும்பச்

செலுத்துவதுமே" வேதம் காட்டும் வழியாகும். நீங்கள் புகை வண்டியில் 'டிக்கெட்' இல்லாமல் பயணம் செய்திருப்பீர்களென்றால், நீங்கள் உடனே ஆண்டவரிடம் சென்று, "ஆண்டவரே, நான் இரயில்வே ஸ்தாபனத்தாரை ஏமாற்றிவிட்டேன் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" எனக் கூறுவது ரொம்பவும் சுலபம்! ஆனால் உண்மையாகவே நீங்கள் மனந்திரும்பி இருக்கிறீர்கள் என்பதை நிரூபிப்பதற்கு ஓர் உயர்ந்த வழி உண்டு! அந்த வழி செல்வதற்கு ஓர் விலைக்கிரயமும் உண்டு. அது என்னவெனில், நீங்கள் இரயில் டிக்கெட் கொடுக்கும் இடத்திற்குச் சென்று நீங்கள் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்ததற்குரிய டிக்கெட்டு களை வாங்கி அவைகளைக் கிழித்துப் போடுவதுதான்!

இன்று ஏன் அநேக ஜனங்கள் தேவனோடு நெருங்கிய ஐக்கியத் திற்குள் பிரவேசிக்கவில்லை என்பதற்கு மேற்கண்ட **குறுக்குவச உறவு சரிசெய்யப்படவில்லை** என்பதே பிரதான காரணமாயிருக்கிறது! இவர்கள் தங்கள் உதடுகளினால் மனந்திரும்பினார்கள். ஆனால் தங்கள் இருதயங் களிலோ மனந்திரும்பாமற்போனார்கள். இவர்கள் தங்கள் பாவங்களை தேவனிடம் அறிக்கை செய்தார்கள். ஆனால் தங்கள் சக மனிதர்களுக்கு விரோதமாகச் செய்த பாவங்களையோ அறிக்கை செய்வதில்லை! ஒருவரிடம் சென்று, "நான் வருந்துகிறேன், இது என்னுடைய தவறுதான், என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" எனக் கூறி அறிக்கை செய்வது நம்மு டைய கௌரவத்தைப் பாதிக்கிறது! இவ்வாறு, சுபாவமாகவே நாம் எல்லோரும் **பெருமை** கொண்டவர்களாயிருக்கிறோம்!நம்மை நாமே **தாழ்த்தி,** நாம்தான் தவறு செய்தோம் என ஏற்றுகொள்ள விரும்புவதேயில்லை!

நாம் ஏன் ஓர் பரிசுத்தமுள்ள தேவனுக்கு முன்பாக பாவங்களை அறிக்கை செய்வதை எளிதாகவும், ஓர் பரிசுத்தமற்ற சகோதரனிடம் பாவங்களை அறிக்கை செய்வதை கஷ்டமாகவும் எடுத்துக் கொள்கிறோம்? இது எப்படி சாத்தியமாகும்? அதற்கு ஒரே காரணம் யாதெனில், நம் அறைக்குச் சென்று தேவனிடம் அறிக்கை செய்வதாக எண்ணிக் கொள்ளுகிற நாம், உண்மையில் அவைகளை "நமக்கு நாமேதான்" அறிக்கை செய்து கொள்ளுகிறோம்! நாம் தேவனிடம் அறிக்கை செய்யவேயில்லை! நீங்கள் உண்மையாகவே தேவனுக்கு முன்பாக உங்களைத் தாழ்த்தியிருக்கிறீர்களா என்பதற்கான பரீட்சை - நீங்கள் தீங்கிழைத்த மனுஷரிடமும் சென்று மன்னிப்பு கேட்க விரும்பியிருக்கி றீர்களா? என்பதிலேயே அடங்கியுள்ளது!

இந்திய கலாச்சாரத்தில் மனைவிகள் மாத்திரமே தங்கள் புருஷர் களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். புருஷர்களோ தங்கள் மனைவி களிடத்தில் மன்னிப்பு கேட்க வேண்டியதில்லை என்ற தீமை குடி கொண்டுள்ளது. நான் மன்னிப்பு கேட்க வேண்டுமென்றால், அங்கே உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேச்சுக்கே இடமில்லை. நீங்கள் உங்கள் அலுவலகத்தின் டைரக்டராகக்கூட இருக்கலாம். டைரக்டராகிய நீங்கள்

உங்கள் அலுவலகத்தின் பியூனுக்குத் தீங்கிழைத்திருப்பீர்களென்றால் உங்களைத் தாழ்த்தி பியூனிடம் சென்று, "நான் வருந்துகிறேன், இது என்னுடைய தவறுதான். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறத்தான் வேண்டும்! இதற்கு குறைவானது எதுவும் உண்மை கிறிஸ்தவமாகாது!

இன்று அநேக சபைகளில் ஒருவருக்கொருவர் உள்ள உறவுகளில் 'விரிசல்' கொண்டிருக்கும் ஜனங்கள், தங்கள் பிரச்சனைகளை சுமூகமாய் தீர்த்துக்கொள்ளுவதற்கு ஒருவரையொருவர் அணுகுவதே இல்லை! இருப்பினும், இப்படிப்பட்டவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என வாய் கூசாமல் சொல்லிக்கொள்ளுகிறார்கள்! ஆம், இவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லவே அல்ல. இவ்வித ஜனங்கள், நாங்களும் தேவனுடைய ராஜ்யத்தில் வீற்றிருப்போம் எனக் கூறுவது, கேடான வஞ்சகமாகும்!

இவ்விதமாய் நீங்கள் யாரேனும் ஒருவரிடம் பேச விரும்பாமல் அல்லது ஒரு சகோதரனைச் சந்திக்க விரும்பாமல் இருந்து கொண்டு அப்பம் பிட்குதலில் பங்கு பெறுவீர்களென்றால், அது தேவ தூஷணம்! இப்படியெல்லாம் இருந்து கொண்டு நீங்கள் தேவனிடம் ஐக்கியம் கொள்ளுவது ஒருக்காலும் முடியாது. உங்கள் சக விசுவாசிகளோடு நீங்கள் கொண்டுள்ள 'குறுக்கு வசமான' உறவு சரியில்லையென்றால் தேவனோடு கொண்டுள்ள 'நேர்வசமான' உறவை நீங்கள் ஒருக்காலும் வைத்துக் கொள்ளவே முடியாது! இதற்கு மாறாக, நாம் உண்மையாகவே தேவனிடமும் மனுஷரிடமும் அறிக்கை செய்திருப்போமென்றால் நம்மை தேவன் முற்றிலுமாய் கழுவுவது மாத்திரமல்லாமல், நம் கடந்த கால ஜீவியத்தை நினையாமலுமிருப்பார்! நம் கடந்த கால அக்கிரமங்களைத் தேவனே, "இனி நினையாமலிருப்பேன்" எனக் கூறும்போது நாம் எதற்காக கடந்தகால சம்பவங்களை நினைவுகூர வேண்டும்? (எபி.8:12). அல்லேலூயா!

**பூரண பாவமன்னிப்பைப் பெறுதல்!**

நாம் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாய் நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம் என்றே வேதம் கூறுகிறது (ரோமர் 5:9). தேவன் நம்மை சுத்திகரிக்கும் வேளையில் நம்மை **நீதிமான்களாயும்** ஆக்கி விடுகிறார். "நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்" என்ற வார்த்தையின் பொருள் யாதெனில், "இதுவரை என் ஜீவியத்தில் நான் ஒருபோதும் பாவம் செய்யாதவனைப்போலவும், இப்போது நான் பூரணமான நீதியுள்ளவனைப் போலவும் இருக்கிறேன்" என்பதேயாகும். இது மகா அற்புதமல்லவா!

வரிசை வரிசையாக நம் பாவங்கள் ஓர் கரும்பலகையில் எழுதப் பட்டிருப்பதாகவே சித்தரிக்கலாம். அந்த பாவக்குறிப்புகள் யாவும், ஓர் ஈரத்துணியினால் துடைத்து அழிக்கப்பட்டுவிட்டது! இப்போது அந்தக் கரும்பலகையில் நீங்கள் என்ன காண்கிறீர்கள்? ஒன்றுமில்லை! அந்தப் பலகையில் இதுவரை எதுவுமே எழுதப்படாதது போலவே தோற்றமளிக் கிறது. இவ்வாறகத்தான் இயேசுவின் இரத்தம் நம்மை முழுமையாகக்

கழுவிச் சுத்திகரிக்கிறது. இவ்விதம் ஒரே ஒரு தடவை நீங்கள் அறிக்கை செய்ததே, உங்கள் எல்லாப் பாவத்தையும் தேவன் உடனடியாகக் கழுவி விடுவதற்கு ஏதுவாகிவிட்டது! மேலும், "நான் அவர்கள் பாவங்களை இனி நினையாமலிருப்பேன்" என்றும் தேவன் வாக்குரைக்கிறார்!! (எபி.8:12). இவ்வாறு நான் **உண்மையாகவே** மன்னிக்கப்பட்டுவிட்டேன். இனியும் நான் மறுபடியும் மறுபடியும் என் பாவங்களைத் தேவனிடம் அறிக்கை செய்ய வேண்டியதில்லை என, என் இருதயத்தில் உணர்வது எத்தனை பெரிய இளைப்பாறுதலை நமக்குத் தருகிறது பார்த்தீர்களா!

"**எங்கள் பாவங்களை** எங்களுக்கு மன்னியும்" என கல் தெறித்தது போல் குறிப்பாக ஜெபிக்கும் ஜெபமே மேலான ஜெபமாகும்! ஆனால் இன்று அநேக ஜனங்கள், "ஆண்டவரே, நான் அநேக பாவங்கள் செய்திருக்கக்கூடும்..." என 'மேலோட்டமாகப்' 'பொதுவாக' ஜெபிக்கிறார்கள். அதாவது தாங்கள் செய்த பாவம் இன்னதென உறுதியாக அறியாததுபோல் ஜெபிக்கிறார்கள்! இவ்விதம் அறிக்கை செய்து ஜெபிக்கும் ஜெபத்தால் ஒரு பிரயோஜனமுமில்லை. ஏனென்றால் உங்கள் ஜெபத்தில் "நீங்கள் பாவமே செய்யாதிருந்திருக்கக்கூடும்" என்ற தோற்றத்தையே உருவாக்கிவிட்டீர்கள்! எனவே, நீங்கள் தேவனிடம் வரும்போது, "ஆண்டவரே, நான் பாவம் செய்துவிட்டேன். அந்த சகோதரனுக்கு விரோதமாக என் உள்ளத்தில் **கசப்பு கொண்டேன்.** அச்சகோதரனை **நான் மன்னிக்கவும் இல்லை.** நான் அம்மனிதனிடம் **பொறாமை கொண்டேன்.** நான் அவனுக்குச் செய்த நன்மையின் நோக்கம் முழுக்க முழுக்க **சுயநலமானதாகும்.** நான் இவைகளை **என் சொந்த மகிமைக்காகவே செய்தேன்**" என்றெல்லாம் குறிப்பாகச் சொல்லி ஜெபிப்பதுதான் நேர்மையான ஜெபமாகும். இவ்வாறு நாம் அறிந்த எல்லாப் பாவங்களையும் தேவனிடம் நேர்மையாக அறிக்கை செய்த பின்பு.... தாவீதைப் போல, "**மறைவான குற்றங்களுக்கு** என்னை நீங்கலாக்கும்" என்றும் ஜெபித்திட வேண்டும் (சங்கீதம் 19:12). ஆம், நாம் எல்லோரும் 'நம்மை அறியாமலே' எத்தனையோ விதத்தில் பாவம் செய்திருக்கிறோம் என்பதை மறந்து விடலாகாது!

**பிறரை மன்னித்தல்!**

பாவ மன்னிப்பிற்காக ஜெபிக்கும் இந்த விண்ணப்பம் மிக முக்கியமான விண்ணப்பங்களில் ஒன்றாகும். ஏனென்றால் **ஜெபத்திற்கு முடிவில்,** இந்த விண்ணப்பத்தை மாத்திரமே இயேசு மீண்டுமாக வலியுறுத்திப் பேசினார். இந்த ஜெபத்தில் காணும் ஆறு விண்ணப்பங்களில் ஒரே விண்ணப்பத்தை மாத்திரம் குறிப்பாக இயேசு **திரும்பவும் கோடிட்டு** பேசினார். அவ்விதம் அவர் சொன்னது யாதெனில், "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால் உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத்.6:14,15) என்பதேயாகும்.

இன்று, இந்த விண்ணப்பத்தை அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் ஜீவியத்தில் மிகுந்த கவனமாக எடுத்துக் கொள்ளாததாலேயே தேவனிடமிருந்து பெற்று அனுபவிக்கும் "**இனிய ஐக்கியத்தை**" இழந்திருக்கிறார்கள்!

ஓர் சமயம், தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப்பார்க்க வேண்டு மென்றிருந்த ஒரு ராஜாவின் உவமையை இயேசு போதித்தார். அந்த ராஜா தனக்கு ஒருவன் 40 கோடி ரூபாய் கடன்பட்டிருப்பதைத் தன் கணக்குப் புத்தகத்தில் கண்டான். கடன்பட்டிருந்த அந்த ஊழியக்காரனோ ராஜாவிடம் வந்து, "நான் கொடுத்துத் தீர்க்கும்படி என்னிடம் பணமில்லை. தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள்" என வேண்டினான். ராஜாவும், அவன் பட்ட கடனை **முழுமையாக மன்னித்து விட்டான்.** ஆனால் அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப் போகையில் தனக்கு 40 ரூபாய் கடன்பட்டிருந்த வேறொரு வேலைக்காரனைக் கண்டு, அவன் தொண்டையை நெரித்து, அவனை நீதிமன்றத்துக்கு இழுத்து, அவனைக் காவலில் போடுவித்தான்! நடந்த சம்பவங்களைக் கேள்விப்பட்ட ராஜா இரக்கமற்ற அந்த ஊழியக்காரனை அழைத்து, "**நான் மனதிரங்கி** உனக்கு 40 கோடி ரூபாயை மன்னித்தேனே! அற்பமான 40 ரூபாய்கள் மாத்திரமே கடன்பட்டிருந்த உடன் வேலைக்காரனை உன்னால் **மன்னிக்க முடிய வில்லையோ?**" எனக் கேட்டு, அவன்மீது கோபங்கொண்டு அவனை உபாதிக்கிறவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்து விட்டான்! இதைக் கூறிய இயேசு, உடனே "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், **என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்**" என்றார் (மத்.18:35). நாம் பிறரிடம் இரக்கமாயிருக்கும்படி கற்றுக்கொள்ளும் வரை, தேவன் அனுமதித்த பொல்லாத ஆவிகளே இந்த 'உபாதிக்கிறவர்கள்' (torturers).

மிகப் பெரிய கடனை தேவன் நம் யாவருக்கும் மன்னித்திருக்கிறார் என்பதைப் போதிக்கவும்; அவ்வாறிருக்க, நமக்குத் தீங்கிழைத்த 'சிலரை' மன்னிக்காமல் இருப்பது எவ்வளவு பெரிய **இரக்கமற்ற செயல்** என்பதையும் உணர்த்தவே இயேசு இந்த உவமானத்தைக் கூறினார். உங்களுக்கு யாரேனும் தீங்கிழைத்து விட்டார்களா? ஒருவேளை யாரோ சிலர் உங்களைக் குறித்து பொய் கதைகளைப் பரப்பியிருக்கலாம்! ஒருவேளை உங்கள் பக்கத்து வீட்டுக்காரரோ அல்லது உங்கள் மனைவியோ அல்லது உங்கள் தகப்பனோ அல்லது உங்கள் மாமியாரோ உங்களுக்கு ஏதேனும் தீங்கிழைத்திருக்கலாம்! ஒருவேளை இவர்கள் உங்கள் வாழ்க்கைக்கு ஏதோ ஒருவிதத்தில் பெரும் நஷ்டத்தைக் கொண்டு வந்திருக்கலாம்! ஒருவேளை உங்களுக்கு ஒரு டாக்டர் தவறாக அறுவை சிகிச்சை செய்ததினிமித்தம் சொல்லிமுடியா துன்பத்தை கொண்டு வந்திருக்கலாம்! இருக்கட்டுமே... இவர்கள் செய்த அத்தனை பாவங் களையும் ஒன்று திரட்டி குவித்து வைத்தாலும், அவைகளைத் தேவன் உங்களுக்கு மன்னித்த கடனோடு நீங்கள் ஒப்பிடும்போது, அவர்க ளுடைய பாவங்கள் மலைக்கு முன்பாக காணப்படும் அற்பமான

துரும்பைபோலத்தான் இருக்கும்! எனவே, நீங்கள் மனப்பூர்வமாய் மன்னிக்க முடியாததற்கு எந்த சாக்குப்போக்கும் கூறவே முடியாது. மத்தேயு 18:35-ம் வசனம் சுட்டிக்காட்டும் மகத்துவமான வாசகம் யாதெனில், "**....மனப்பூர்வமாய் மன்னிப்பது**" என்பதுதான்! இவ்வாறு, உங்கள் சக மனிதர்களை மனப்பூர்வமாய் மன்னிப்பதற்கு உங்களுக்கு மனம் இல்லாத பட்சத்தில், நீங்கள் தேவனிடம் வந்து, "என்னுடைய குற்றங்களை எனக்கு மன்னியும்" என ஜெபித்து உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள்! ஏனென்றால் இப்படிப்பட்ட உங்களின் ஜெபத்தை தேவன் ஒருபோதும் செவிமடுக்கவே மாட்டார்! இம்முழுவையகத்திலும், நீங்கள் மன்னிக்காத ஒரு ஆத்துமா இருந்தால்கூட நீங்களும் மன்னிக்கப்படவே மாட்டீர்கள்! அந்தோ... நீங்கள் நித்திய காலமாய் கைவிடப்படுவீர்கள்! ஏனென்றால் மன்னிக்கப்படாத எந்த ஆத்துமாவும் தேவனுடைய சமூகத்திற்குள் பிரவேசிக்கவே முடியாது. இந்த இழப்பு, நித்தியத்தின் பேரிழப்பு!

இந்த ஜெபத்தில், "**நாங்கள் மன்னிக்கிறதுபோல** எங்களுக்கு மன்னியும்" என குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். ஆம், நாம் பிறரை எவ்விதம் மன்னித்திருக்கிறோம் என்பதை தேவன் துல்லியமாக அளந்து பார்க்கிறார். ஏனெனில், நாம் அளக்கிற அளவின்படியே நமக்கும் அளக்கப்படும் என இயேசு போதித்தார். அவ்வாறு கூறும்போது, "கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; **நீங்கள் எந்த அளவினால்** அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" என இயேசு கூறினார் (லூக்கா.6:18). அதாவது, நீங்கள் பிறருக்குக் கொடுப்பதற்கு சிறிய ஸ்பூனை உபயோகித்திருப்பீர்களென்றால், உங்கள் ஜெபங்களுக்குப் பதிலளிக்கும் தேவன், அதே சிறிய ஸ்பூனைத்தான் உங்களுக்கும் உபயோகிப்பார்! நீங்களோ பெரிய காரியங்களை எதிர்பார்த்து, பலத்த கிரியைக்காக தேவனிடம் ஜெபித்தீர்கள். ஆனால் தேவனோ சிறிய ஸ்பூனை எடுத்து உங்களுக்கு கொஞ்சம்தான் கொடுத்தார்! ஏன் தெரியுமா? நீங்கள் அந்த சிறிய ஸ்பூனை வைத்துதான் பிறருக்குக் கொடுத்தீர்கள். நீங்கள் எந்த அளவிற்கு பெரிய ஸ்பூனை உபயோகப் படுத்துவீர்களோ அந்த அளவிற்கு தேவனும் பெரிய ஸ்பூனைக் கொண்டு உங்களுக்குக் கொடுப்பார். தேவனுக்கு இந்தச் சட்டம், மாறாத சட்டமாகும்! நமக்குப் பரிமாற வரும் தேவன், இந்த சட்டத்தின்படியே செயல்படுகிறார். மத்தேயு 5:7-ல், "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" என இயேசு கூறினார். நீங்கள் எவ்வளவு அதிகமாய் பிறரிடம் இரக்கம் காண்பிக்கிறீர்களோ அவ்வளவு அதிகமாய் நியாயத்தீர்ப்பு நாளில் தேவனும் உங்கள் மீது இரக்கமாயிருப்பார். "ஆனால், இரக்கம் செய்யாதவனுக்கோ இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பு கிடைக்கும்" என யாக்கோபு 2:13 எச்சரிக்கிறது!

*எனவே, நீங்கள் பிறரை மிகவும் கொஞ்சமாய் ஒரு கருமியைப் போல் மன்னித்திருப்பீர்களென்றால் அதே போலவே தேவனும் உங்களுக்கு மன்னிப்பார். உங்களுக்குத் தீங்கிழைத்த ஒருவரை அன்பு ததும்பும் மன்னிப்பின் பார்வையால் பார்த்திருப்பீர்களென்றால் தேவனும் அவ்விதமே உங்களுக்குத் தன் அன்பு ததும்பும் மன்னிக்கும் பார்வையை கடாட்சித்திருப்பார்! ஆம், நீங்கள் பிறரை எவ்வாறு நடத்தினீர்களோ* **அதைப்போலவே** *தேவனும் உங்களை நடத்துவார்!*

**பிறரிடம் கொண்டுள்ள உறவை சீர்படுத்துதல்!**

*நீங்கள் பலிபீடத்தினிடத்தில் காணிக்கையை செலுத்த வரும்போது அல்லது தேவனிடத்தில் ஜெபிக்க வரும்பொழுது அல்லது காணிக்கைப் பெட்டியில் பணத்தைப் போட வரும்போது, உங்கள் சகோதரனுக்கு தீங்கிழைத்திருப்பதை நினைவுகூருவீர்களென்றால், "***முன்பு** *உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" என இயேசு கூறினார் (மத்.5:22-24). இவ்வாறு செய்யாவிட்டால், உங்கள் ஜெபத்தை அல்லது உங்கள் பணத்தை தேவன் ஏற்றுக் கொள்ள மாட்டார்!*

*பழைய உடன்படிக்கையின் தராதரம் யாதெனில், "நீ பழிக்குப் பழி வாங்கக்கூடாது" என்பதுதான் (லேவி.19:18). இந்த வசனத்தின்படி ஜீவிப்பதோ மிகவும் எளிது! ஆனால், புதிய உடன்படிக்கையின் தரமோ உயர்ந்த தரமாகும். அத்தரத்தின்படி, "உன் பேரில்* **உன் சகோதரனுக்குக்** *குறை உண்டென்று கண்டால், அதை முதலாவது சரிசெய்" என்றே இயேசு கூறினார். நம்மிடத்தில் எந்தத் தவறும் இல்லாதிருக்கும்போதே நம்மைப் பகைக்கும் சகோதரர்கள் அநேகர் இருக்கத்தான் செய்வார்கள்! இயேசுவும், அப்போஸ்தலர்களும் சத்தியத்திற்கு சாட்சியாக நின்றபோது அவர்களுக்கும் அநேக விரோதிகள் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் இந்த வசனத்திலோ "உன் பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்று கண்டால்..." என்றே இயேசு குறிப்பிட்டார். அதாவது, நான் அவனிடம் பேசிய அல்லது நடந்து கொண்டதினிமித்தம்* **அவன் என் மீது** *மனத்தாங்கல் கொண்டிருந்தால்... என்பதே இதன் பொருளாகும் (மத்தேயு 5:22). ஆம்,* **நான் பிறருக்கு குறை ஏற்படுத்தும்** *பாவமான செயலையே இயேசு குறிப்பிட்டார். இவ்வித சமயத்தில்தான்* **நாம் முதலாவது** *அவனிடம் சென்று நம் பாவங்களை அறிக்கை செய்து அவனுடைய மன்னிப்பைக் கேட்கவேண்டும். இவ்வாறு செய்த பிறகுதான் நாம் தேவனுக்கு காணிக்கையைக் கொண்டுவர முடியும்!*

*நீங்கள் தேவனிடம் சென்று, "ஆண்டவரே என் ஜீவியத்தில் புதிய உடன்படிக்கையின் வல்லமையை சம்பூரணமாய் பெற விரும்புகிறேன்" என கேட்பீர்களென்றால் அதற்கு ஆண்டவர் பதிலாக, "நான் உனக்கு* **புதிய உடன்படிக்கையின் வல்லமையைக்** *கொடுத்தால் அதோடு புதிய உடன்படிக்கையில் நிறைவேற்ற வேண்டிய* **பொறுப்புகளும்** *சேர்ந்து வருமே!" எனக் கூறுவார்.*

*இன்று அநேகக் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் புதிய உடன்படிக்கையின் வல்லமையை ருசிக்கவேயில்லை! ஏனென்றால் இவர்கள் பழைய உடன்படிக்கையின் தரத்தின்படியேதான் இன்னமும் ஜீவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாரோ சிலரிடம் சென்று மன்னிப்பு கேட்பதற்கு விருப்பமில்லாததாலேயே, தங்கள் ஜீவியத்தில் வல்லமை குன்றியிருக்கிறார்கள்! ஆ, இது பரிதாபம்!*

**சதா இரக்க சுபாவம் கொண்டிருத்தல்!**

*நம் எல்லோருக்கும் ஓர் 'மாம்சம்' உள்ளது. இவ்விதம் ஓர் மாம்சத்தைப் பெற்றிருக்கும் ஜனங்கள் மத்தியிலேயே நாம் ஜீவிக்கிறோம். எனவே நாம் அறிந்தோ அல்லது அறியாமலோ பிறருக்கு தொடர்ச்சியாக ஊறுவிளைவிக்க வாய்ப்புகள் உண்டு. நாம் பிறரால் ஊறுவிளைவிக்கப் பட முடியாத ஒரே ஸ்தலம் பரலோகம் மாத்திரம்தான். இதனிமித்தமே நாம் இந்த பூமியில் வாழும்மட்டும், ஒருவரையொருவர் மன்னிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. தவறு செய்வோன்* **மனுஷன்** *- ஆனால் மன்னிப்பதோ* **தெய்வீகம்!**

*நரகத்தின் முக்கியமான ஓர் அம்சம் யாதெனில், அங்கே சிறிதுகூட இரக்கம் இருக்காது! எனவே எந்த அளவு பிறர்மீது காட்டும் இரக்கம் உங்கள் இருதயத்தில் குறைந்திருக்கிறதோ அந்த அளவு உங்கள் இருதயத்திற்குள் நரகம் இருக்கிறதென்பதை அறிந்துகொள்ளுங்கள்!*

**யாரோ ஒருவரை மன்னிப்பதற்கு உங்களுக்கு விருப்பமில்லையென்றால், சகோதரனே உங்கள் இருதயத்திற்குள் நரகம் குடிகொண்டுள்ளது!**

*ஒருவேளை நீங்கள் ஆவிக்குரிய ஊழியங்கள் பல செய்வதைக் கண்டு மற்றவர்கள் 'பக்தியுள்ளவர்கள்' என உங்களைக் கருதலாம். ஆனால் இப்படிப்பட்ட நீங்களோ உங்கள் இருதயத்தில் நரகத்தின் ஒரு பகுதியைத்தான் சுமந்து திரிகிறீர்கள்! இவ்வித நிலையில், நீங்கள் பரலோகம் செல்ல முடியுமா? ஒருவன் பரலோகத்திற்குள் நரகத்தைக் கொண்டு செல்ல முடியாதே! பிரியமானவர்களே, நீங்கள் இந்தப் பூமியை விட்டு கடந்து செல்வதற்கு முன்பாக இந்த நரகத்தை உங்களைவிட்டு உதைத்து வெளியே தள்ளுங்கள்!*

*எனவேதான் ஆண்டவர், "நாங்கள் பிறரை மன்னிக்கிறதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்" என ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார்.*

*நாம் பிறரை மன்னிக்காவிட்டால், அந்த மன்னியாத கொடிய சுபாவம் நம் சரீரங்களையும் பாதித்துவிடும். தேவனுடைய பிரமாணங் களுக்கு கீழ்ப்படியாமை, அநேக சமயங்களில் சரீர துன்பத்தையும் கொண்டுவரும்! உங்கள் இருதயத்தில் யாரேனும் ஒருவரைக் குறித்து கசப்பு கொண்டிருந்தால், யாரேனும் ஒருவர்மீது பொறாமை கொண்டிருந்தால் நீங்கள்* **தேவனுடைய அன்பின் பிரமாணத்தை**

*மீறிவிட்டீர்கள் என்பதை அறியுங்கள். உங்களின் இவ்வித செயல், முடிவில் உங்கள் சரீரத்தையும் பாதிக்கத் துவங்கும். இதுபோன்றவர்கள் ஏராளமான மாத்திரைகளை உபயோகிக்கலாம்! ஆனால், பிறரை மன்னிக்க வேண்டும் என்ற பாடத்தைக் கற்றுக்கொள்ளும் வரை இவர்கள் ஒருக்காலும் குணப்படுத்தப்படவே முடியாது! இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் வியாதி சரீரப்பிரகாரமானதல்ல.... இவர்கள் 'ஆத்துமாவையே' வியாதி பீடித்திருக்கிறது!*

*உங்கள் சகோதரனையோ அல்லது சகோதரியையோ மன்னிக்கா விட்டால், தேவன் உங்கள் ஜெபங்களை கேட்கவே மாட்டார். "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவி கொடார்" என வேதம் தெள்ளத் தெளிவாகவே கூறுகின்றது (சங்.66:18). தேவன் எனக்கு பதில் கொடுக்கமாட்டார் என்றுகூட இல்லாமல், எனக்குச் செவிகொடுக்கக்கூட மாட்டார் எனக் கூறப்பட்டிருப்பதைக் கவனித்தீர்களா! இனியும், நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளாதிருப்போமாக!*

*கடைசியாக, இந்த விண்ணப்பத்தில் "***எங்களுக்கு மன்னியும்***" என பன்மையில் விண்ணப்பிக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். அதாவது, நம்மோடு சேர்ந்து நம்முடைய சகோதரர்களும் மன்னிக்கப்பட வேண்டுமென்றே மனதார விரும்புகிறோம். சில சமயங்களில், நமக்குத் தீங்கிழைத்த சகோதரனைக் குறித்து, "அந்த சகோதரன் என்னை நடத்திய விதத்திற்காக தேவன் அவனை நியாயந்தீர்ப்பார்" என்ற ரகசியமான நம்பிக்கையைக்கூட நாம் வைத்திருக்கக்கூடும். இவ்வித மனோபாவம் பேய்த்தனமாகும்! ஏனென்றால் ஜனங்கள் தேவனால் தண்டிக்கப்பட்டு அழிவதைக் காண விரும்புவன் பிசாசு ஒருவனேயாவான்!*

*"நான் உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால் நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" என இயேசு கூறினார் (யோவான் 13:14). இதன் பொருள் யாதெனில், உங்கள் சகோதரனுடைய பாதத்தில், ஆவிக்குரிய பிரகாரமாக இயேசு குறிப்பிடும் 'தூசியை' (ஏதோ குறைகளை) நீங்கள் கண்டால், அத்தூசிகள் அவனுக்கு கழுவப்பட வேண்டும் என்ற வாஞ்சைதான் உங்களிடத்தில் எப்போதும் காணப்பட வேண்டும்!*

*எனவே "எங்களுக்கு மன்னியும்" என்ற பதத்தின் பொருள் யாதெனில், "பிதாவே, நீர் என்னுடைய பாவங்களை மாத்திரம் மன்னித்ததற்காக நான் திருப்தியடைந்துவிட மாட்டேன். என்னைச் சுற்றிலும் மற்ற சகோதரர்களும் சகோதரிகளும் இருக்கிறார்கள். என் தகப்பனே, நீர் அவர்களுடைய பாவங்களையும் மன்னிக்க வேண்டுமென என் மனதார விரும்புகிறேன். ஆமென்!" என ஜெபிக்கும் ஜெபமே அதன் பொருளாகும்.*



# 8

## தீமையிலிருந்து சம்பூரண விடுதலை

**"எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்"**

*இந்த விண்ணப்பத்தில் இரு பகுதிகள் இருப்பதைப் பாருங்கள். 1) நம்மைப்* **பாதுகாக்கும்படி** *தேவனை நோக்கி ஜெபிப்பதும் 2) நம்மை* **விடுவிக்கும்படி** *அவரிடம் ஜெபிப்பதுமாகும். நாம் கடந்த அதிகாரத்தில் கண்டதுபோல, முதலாவது நம்முடைய பாவமாகிய குற்றத்திலிருந்து இரட்சிக்கப்படும்படியே நாம் ஜெபிக்கிறோம். அதன்பின்பு, பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலையாகும்படியும் ஜெபிக்கிறோம். நாம் பாவத்திலிருந்து "விடுதலையாகும்படி" விரும்பாமல் வெறும் பாவ மன்னிப்பை மாத்திரம் விரும்பினால், நாம் சரியான விதத்தில் 'உண்மையாக' மனந்திரும்பவில்லை என்பதையே புலப்படுத்துகிறது. ஓர்* **பரிசுத்த ஜீவியம்** *செய்யும்படி நம்மை நடத்துவதற்கான நுழைவு வாசலே பாவமன்னிப்பாகும். ஆனால் அந்தோ... இன்று ஜனங்கள் பாவ மன்னிப்பின் மூலம் தேவகிருபையை அவமாக்குகிறார்கள்!*

**சந்தோஷமும் வல்லமையும்!**

*எல்லாக் கிறிஸ்தவர்களுமே சந்தோஷமாயிருப்பதற்கு வாஞ்சிக்கிறார்கள். ஆனால் இயேசுவோ, "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்றல்லவா கூறினார் (மத்.5:8). பாக்கியவான்கள் என்ற பதத்திற்கு "சந்தோஷம்" என்பது மற்றொரு பொருளாகும். எனவே இங்கே இயேசு கூறுவது யாதெனில், "தூய்மையான பரிசுத்த ஜீவியத்திலிருந்தே* **உண்மையான சந்தோஷம்** *பிறக்கிறது!" என்ற செய்தியேயாகும். பரலோகம் எப்போதும் குறைவில்லா மகிழ்ச்சி நிறைந்த இடமாய் இருப்பதற்கு காரணம், அங்கு நிறைவான பரிசுத்தம் இருப்பதால்தான்! பரிசுத்தமில்லாத எந்த மகிழ்ச்சியும் போலியானதே யாகும். நாம் உண்மையில், "ஆண்டவரே நான் பரிசுத்தமற்று இருந்தால் என்னை மகிழ்ச்சியற்றவனாக்கும்!" என்றே ஜெபிக்க வேண்டும். இல்லாவிட்டால் நம்முடைய ஆவிக்குரிய நிலைமையைக் குறித்து நாம் வஞ்சிக்கப்பட்டு ஏமாந்துபோக வாய்ப்பு உண்டு!*

*இன்று அநேக கிறிஸ்தவர்கள், தங்கள் ஜீவியத்தில் வல்லமை வேண்டுமென தேவனிடம் கேட்கிறார்கள். ஆனால் பரிசுத்தத்தின்மீது தீராத வாஞ்சை கொள்ளாமல் நீங்கள் வல்லமை கேட்டால், உங்கள் விண்ணப்பத்தில் தராசு போன்ற சமநிலை காணப்படவில்லை என்பதை இன்று அறிந்துகொள்ளுங்கள். இவ்வித சமநிலை இல்லாமல்*

வல்லமையைக் கேட்பது பெருத்த அபாயமாகும்! எப்படியென்றால், ஓர் அறுவை சிகிச்சை செய்யும் டாக்டர், கிருமி கொண்ட-ஆயுதங்களை (un-sterile) உபயோகப்படுத்துவது எவ்வளவு அபாயகரமானதோ, அதைக் காட்டிலும் தேவன் தன் வல்லமையை பரிசுத்தமற்ற ஓர் மனுஷனின் கையில் கொடுப்பது **மிகுந்த** அபாயமானதாகும்! அவ்விதம் தேவன் கொடுப்பது ஜீவனுக்குப் பதிலாக மரணத்தையே கொண்டு வரும். எனவே தான், இன்று அநேகக் கிறிஸ்தவர்களுக்குத் தேவன் தன் வல்லமையை அளவில்லாமல் கொடுத்துவிட முடியவில்லை. ஆம், அது அவனை அழித்து நாசமாக்கிவிடும். இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியைகளை நடப்பிக்கும் எல்லா ஆவிக்குரிய வரங்களையும் நாம் அவரிடம் கேட்பதினிமித்தம் தேவன் நமக்கு அவைகளைத் தந்து விடுவதில்லை. நமக்கு அவர் அவ்விதம் தராததினால், உண்மையில் நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

**இன்று அநேக விசுவாசிகள் தாங்கள் பெற்ற வரங்களினாலேயே அழிந்து போவதை நம் கண்கூடாகக் காண்கிறோமே! ஏனென்றால், இந்த வரங்களைச் சரியான முறையில் உபயோகப்படுத்துவதற்கு இவர்கள் தாழ்மையாயும்; பரிசுத்தமாயும் இருப்பதில்லை!**

எனவே நாம் பரிசுத்தத்தையும்; வல்லமையையும் ஒரே சமநிலை அளவாய் வாஞ்சித்துக் கேட்கவேண்டும். அப்போது மாத்திரமே நாம் பத்திரமாய் இருக்கமுடியும்!

**சாத்தானையும் தேவன் எங்ஙனம் உபயோகிக்கிறார்?**

ஓர் கடும் யுத்தத்திற்குப் பிறகு விளைவதுதான் உண்மையான பரிசுத்தமாகும். குஷியான நாற்காலியில் அமர்ந்துகொண்டு 'ஆகாய ஊஞ்சலின் மலர் படுக்கையை' கனவு கொண்டிருக்கும் கிறிஸ்தவர் களுக்கு உண்மை பரிசுத்தம் ஒருபோதும் கிட்டாது! நம்முடைய இச்சைகளையும்; சாத்தானையும் எதிர்த்து போரிடும்போது மாத்திரமே உண்மையான பரிசுத்தத்தை நாம் அடைகிறோம்!

இவ்வாறு, "நம் பரிசுத்தத்திற்கு பிசாசு தடையாக இருந்தால் அவனை ஏன் தேவன் அழிக்கக்கூடாது?" என நாம் கேட்கக்கூடும். இதற்கு விடை யாதெனில், பொன்னைச் சுத்திகரித்துப் புடமிடுவதற்கு ஓர் அக்கினி உலை எங்ஙனம் தேவையோ அதைப்போலவே நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு பிசாசுகூட தேவையாய்தான் இருக்கிறான்! நம் தசைகள் கடும் அப்பியாசத்திற்குள்ளாகும்போது மாத்திரமே வலிமை பெற்று விளங்குகிறது. இல்லாவிட்டால் நாம் வெறும் கொழுத்த "தோலா-தொப்புளா" மனுஷர்களாய் காணப்படுவோம்! ஆவிக்குரிய ஜீவியமும் இதற்கு ஒப்பானதேயாகும். நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் வலிமை கொண்டவர்களாய் இருக்க வேண்டுமென்றால், நமக்கு எதிர்ப்புகள் அவசியம். இதனிமித்தமே நம்மைச் சோதிப்பதற்கு தேவன், சாத்தானை அனுமதித்திருக்கிறார்! கஷ்டமில்லாத இலகுவான வாழ்க்கை

கொண்ட ஓர் மனிதன் எப்போதுமே தன் ஆவிக்குரிய ஜீவியத்தில் நலிவுற்று பெலவீனனாகவே காணப்படுவான். அவன் செய்ய வேண்டு மென தேவன் விரும்பினவைகளை அவனால் செய்திட முடியாது! ஆனால், கடுமையான பாடுகளுக்குள்ளும் பரீட்சைக்குள்ளும் பிரவேசித்து ஜெயம் பெற்று வரும் ஒரு மனிதனோ, தேவனுடைய சகல பரிபூரண சித்தத்தையும் செய்து முடிக்க வலிமை பெற்றவனாய் விளங்குவான்! இதனிமித்தமே, சாத்தானை அழிக்காமல் தேவன் வைத்திருக்கிறார்.

ஏதேன் தோட்டத்தில், ஓர் விலக்கப்பட்ட மரத்தை தேவன் ஏன் வைத்தார்? இவ்வாறு அந்த மரத்தை தேவன் வைக்காமலிருந்தால், ஆதாம் பாவம் செய்திருக்க மாட்டானே என அநேகர் எண்ணுகிறார்கள். ஆனால் உண்மை யாதெனில், ஆதாம் பரிசுத்தமாவதற்கு அந்த மரம் அவசியமா யிருந்தது! ஆம், மனுஷனுக்கு சோதனையில்லாமல் பரிசுத்தம் ஒருபோதும் கை கூடாது. இதனிமித்தமே, ஏதேன் தோட்டத்திற்குள் சாத்தான் பிரவேசிக்க தேவன் அனுமதி வழங்கினார்!

ஏதேன் தோட்டத்தில், ஆதாம் கள்ளங்கபடறியாத்தன்மை (innocent) கொண்டிருந்தான் என்பது உண்மைதான். ஆனால் கபடறியாத் தன்மை பரிசுத்தமாகாது! ஆதாம் சோதிக்கப்படாம லிருந்தால், தன் ஜீவிய காலமெல்லாம் இந்த கபடறியாத தன்மை யிலேயே இருந்து, ஒருபோதும் பரிசுத்தத்தை அடைந்திருக்க மாட்டான்! கபடறியா தன்மையானது இரு சார்பற்ற நிலையாகும் (State of Neutrality). இந்த இரு சார்பற்ற நிலையிலிருந்து நிரூபண (Positive) சார்பு நிலைக்குள் பிரவேசித்து பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்றால், ஆதாம் தனக்கென ஒரு தெரிந்து கொள்ளுதலை அப்பியாசப்படுத்த வேண்டும். அதாவது அவன் சோதனைக்கு 'இல்லை' என்றும் .... தேவனுக்கு 'ஆம்' என்றும் கூறவேண்டும்! அப்போது மாத்திரமே ஆதாம் பரிசுத்தமடைய முடியும். இதற்காகவே ஆதாம் சோதிக்கப்பட வேண்டியது அவசியமாயிருந்தது. ஆனால் துரதிருஷ்டவசமாக, ஆதாமோ தேவனுக்கு 'இல்லை' எனக்கூறி.... ஓர் பாவியாக மாறினான்!

**சோதனையும் பாவமும்!**

இயேசுவும் நம்மைப்போலவே எல்லாவிதத்திலும் சோதிக்கப் பட்டார் என வாசிக்கிறோம் (எபி.4:15). ஆனால் அவருக்கும் ஆதாமுக்கும் இடையில் காணப்பட்ட பெருத்த வித்தியாசம் யாதெனில், அவர் எப்போதும் தேவனுக்கே "ஆம்" எனக் கூறினார். ஓர் பூரண மனுஷனாவதற்கு, தான் பட்ட பாடுகளின் மூலமாகவே இயேசு கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். அவர் சோதனைகளைச் சந்தித்து ஜெயித்தார்! இவ்வாறாகவே அவர் "பூரணமானார்" என எபி.5:8,9 வசனங்கள் கூறுகின்றது. இயேசு சென்ற இதே பாதையின் மூலமாகவே எல்லா மனுஷரும் பூரணமாகத் தேவன் விரும்புகிறார். இதனிமித்தமே, இயேசு தன் சீஷர்களுக்காக ஜெபித்தபோது, "பிதாவே நீர் அவர்களை

உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல் நீர் அவர்களைத் **தீமையினின்று காக்கும்படி** வேண்டிக்கொள்ளுகிறேன்'' என ஜெபித்தார் (யோவான் 17:15). தன் சீஷர்கள் உலகத்தில் சந்திக்கப் போகும் 'பாடுகளின்-சோதனைகளின்' அழுத்தத்திலிருந்து எடுக்கப் பட்டு விட்டால் அவர்கள் ஒருபோதும் பரிசுத்தமாக முடியாது என்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார்.

சோதனைக்கும், பாவத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். நாம் 'திடீரென்று' ஒன்றைப் பார்த்த நிமித்தம் சோதிக்கப்பட்டால், அது பாவமாகாது! ஆனால் நம்மைச் சோதித்த ஒன்றைத் தொடர்ச்சியாக பார்ப்போமென்றால் அல்லது அவைகளைச் சிந்தையில் வைத்து சிந்திப்போமென்றால் .... ஆ, இப்போது நீங்கள் பாவம் செய்துவிட்டீர்கள்! நாம் சோதிக்கப்படுவதை ஒருக்காலும் தவிர்க்கவே முடியாது. ஆனால் நம்மைச் சோதித்தவை களிலிருந்து நம் கண்களையோ அல்லது நம் மனதையோ நிச்சயமாய் திருப்பிக் கொள்ளமுடியும்! இவ்விதம் நம் சித்தத்தை நாம் எவ்விதம் அப்பியாசப் படுத்துகிறோம் என்பதைப் பொறுத்துதான் நாம் பரிசுத்தமாகிறோமா அல்லது பாவத்தில் மூழ்குகிறோமா என்பதை நிர்ணயிக்க முடியும்.

நாம் சோதிக்கப்பட்டதற்காக நாம் குற்றவாளிகள் என தேவன் ஒருபோதும் நம்மைப் பிடிப்பதே இல்லை. ஆனால் நாம் சோதனைகளை எதிர்த்து நிற்க வேண்டுமென தேவன் திட்டவட்டமாக விரும்புகிறார்! ஒரு பரிசுத்தவான், ''பறவைகள் என் தலைக்கு மேல் பறந்து செல்வதை நான் தடை செய்யவே முடியாது. ஆனால் அவைகள் என் தலையில் உட்கார்ந்து கூடுகட்டுவதை என்னால் நிச்சயமாய்த் தடை செய்ய முடியும்'' என கூறினார். ஆம், சோதனை உங்களிடத்தில் வருவதை நீங்கள் ஒருபோதும் தடை செய்யவே முடியாது. ஆனால், அந்த சோதனை உங்கள் மனதில் அமர்ந்து தங்கிவிடுவதை நீங்கள் நிச்சயமாய்த் தடை செய்ய முடியும்!

நாம் எவ்வளவு பெலசாலிகள் எனக்காட்டுவதற்காக ஏராளமான சோதனைகளை நாமாக விரும்பி சந்திக்க வேண்டுமென தேவ வசனம் நமக்குப் போதிக்கவில்லை. நாம் சோதனையைவிட்டு ஓடும்படியே கட்டளை பெற்றிருக்கிறோம்! ஆகவேதான், சோதிக்கக் கூடியவைகளை விட்டு தீமோத்தேயு ஓடவேண்டும் என பவுல் புத்தி சொன்னார் (2தீமோ.2:22). நாம் நிச்சயமாய் பணஆசையைவிட்டும்! பரத்தையான பெண்களைவிட்டும்! அல்லது நம்மைத் தேவனைவிட்டுப் பிரிக்கக் கூடிய எதுவாயிருந்தாலும் அவைகளைவிட்டும் நிச்சயமாய் ஓட வேண்டும்!

ஆம், சோதனையைக் குறித்து, ''என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் தூர விலகி நிற்பேன்'' என்ற மனோபாவத்தையே நாம் உடையவர்களாயிருக்க வேண்டும். நாம் சிறுபிள்ளைகளைப் போல, ''நான் கீழேவிழாமல் குன்றின் உச்சிக்கு எவ்வளவு அருகே

போகலாம்" என்றும் அல்லது "இரயில்வே பிளாட்பாரத்தில் இரயில் என்னை மோதிவிடாமல் எவ்வளவு தூரம் நெருங்கி நிற்கமுடியும்" என்றும் எண்ணுகிறவர்களாய் இருக்கவே கூடாது. எந்த உணர்வுள்ள பெற்றோரும் பிள்ளைகளின் இவ்விதமான தீர்மானத்திற்கு ஊக்குதல் அளிக்கவே மாட்டார்கள். எவ்வளவு தூரம் அபாயத்தைவிட்டு விலகி நிற்க வேண்டுமோ அவ்வளவு தூரம் விலகி நிற்கவேண்டும் என்றே நம்முடைய பிள்ளைகளுக்கு நாம் புத்தி சொல்லுகிறோம். அவ்விதமே தேவனும் நமக்குப் புத்தி சொல்லுகிறார்!

எனவே இங்கு காணும் ஜெபத்தின் விண்ணப்பம் யாதெனில், "பிதாவே என் திராணிக்கு அதிகமான சோதனையை எனக்கு அனுமதிக்க வேண்டாம்" என்பதே பொருளாகும். தன் மாம்சத்தின் பெலவீனத்தை உணர்ந்து, தான் எக்கணமும் எளிதில் வீழ்ச்சியடைய முடியும் என்பதை உணர்பவனே இவ்விதமாய் கூக்குரலிட்டு ஜெபிப்பான்!

**சோதனையை சந்திக்க ஆயத்தமாயிருத்தல்!**

கெத்செமனே தோட்டத்தில் பேதுரு, யாக்கோபு, யோவானைப் பார்த்து, "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என இயேசு கூறினார் (மத்.26:41). சீஷர்களை நோக்கி சோதனை நெருங்கி வந்ததை இயேசு அறிந்திருந்தார். எனவே, அந்த சோதனையை சந்திப்பதற்கு அவர்களை ஆயத்தம் செய்ய இயேசு விரும்பினார். ஆனால் அவர்களோ ஜெபிப்பதற்குப் பதிலாக நித்திரை பண்ணினார்கள். அதன் விளைவாக, சோதனை வந்தவுடன், ஓர் போர்ச்சேவகனின் காதை பேதுரு வெட்டினான். பேதுரு விழித்திருந்து ஜெபம் செய்யாதபடியால் பாவத்தில் விழுந்தான்! ஆனால் விழித்திருந்து ஜெபம் செய்த இயேசுவோ மிகுந்த தூய்மையாயும் அன்பாயும் நடந்து கொண்டார்!

நம்மை முன்கூட்டியே எச்சரிப்பதற்கு தேவன் எப்போதும் உண்மையுள்ளவராயிருக்கிறார். ஆவியானவர் நம் இருதயத்திற்குள், "இப்போது சற்றே அமர்ந்து உன் நேரத்தை ஜெபத்தில் செலவிடு!" என மெல்லிய தொனியாகப் பேசுவதை நாம் எல்லோருமே கேட்டிட முடியும். இவ்விதம் உங்களை எதிர்நோக்கியிருக்கும் **சோதனைக்காக உங்களை ஆயத்தம் செய்யும் தேவனுடைய சத்தத்தை** நீங்கள் உணர்ந்ததுண்டா? அவ்வித சமயங்களில் நீங்கள் என்ன செய்திருக் கிறீர்கள்? சீஷர்களைப் போலவே அவருடைய சத்தத்தை நீங்கள் நிராகரித்தீர்களோ? இதனிமித்தமே, சோதனை உங்களை அணுகிய போது வீழ்ச்சியுற்றீர்கள்! தேவனோ அந்த சோதனைக்கென உங்களை ஆயத்தம் செய்ய விரும்பினார். ஆனால் நீங்களோ அவருடைய மெல்லிய சத்தத்தைக் கவனிக்க தவறிவிட்டீர்கள்!

**ஒவ்வொரு சோதனையையும் ஜெயித்திட முடியும்!**

நாம் தாங்கிக்கொள்ள முடியாத அல்லது திராணிக்கு மேலான

அல்லது **நாம் ஜெயிக்க முடியாத சோதனையை தேவன் ஒருபோதும் நமக்கு அனுமதிக்க மாட்டார்** என அவருடைய வார்த்தையின் மூலம் எவ்வளவு அருமையாய் வாக்குதத்தம் செய்திருக்கிறார் பார்த்தீர்களா! (1கொரி.10:13). அதாவது நாம் ஜெயிக்க முடியுமா? என தேவன் ஒவ்வொரு சோதனையையும் பரிசீலனை செய்வார். அதற்குப் பின்பு தான் அவைகள் நம்மை அணுகுவதற்கு அனுமதிப்பார். ஓர் நல்ல ஆசிரியர் தன் இரண்டாம் வகுப்பு மாணவனுக்கு ஒன்பதாம் வகுப்பு பரீட்சை பேப்பரைத் தரவே மாட்டார். தன் மாணவன் எந்த வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறானோ அந்த வகுப்புக்குரிய பரீட்சை பேப்பரைத்தான் அவனுக்கு அந்த ஆசிரியர் கொடுப்பார். தேவனும் இங்ஙனமே செயல்படுகிறார்!

இவ்வாறு தேவன் வாக்குரைத்திருக்கும்போது உங்களுக்கு நேரிடும் எந்த சோதனையையும் அல்லது பாடுகளையும் **அளவுக்கு மீறியது** என நீங்கள் எண்ணுவது சரியா? நிச்சயமாய் சரியில்லை! உங்களுக்கு நேரிடும் சோதனை, அளவுக்கு மீறியதென தேவனும் எண்ணுவது கிடையாது என்பது கண்கூடு! இல்லாவிட்டால், அந்த சோதனை உங்களை அணுகும்படி அவர் அனுமதித்திருக்க மாட்டாரே! எனவே அந்த சோதனையை தேவன் உங்களுக்கு அனுமதித்திருப்பதினால், நீங்கள் அந்த சோதனையை ஜெயித்துவிட **திராணியுள்ளவர்கள்** என்பதே நிரூபண மாகிறது. எனவே ஒவ்வொரு சோதனையையும், "தேவன் இந்த சோதனையை எனக்கு அனுமதித்திருக்கிறார். அவர் என்மீது வைத்திருக்கும் நம்பிக்கையை இதன்மூலம் காண்கிறேன். இந்த சோதனையை ஜெயிப்பதற்குரிய ஆவியின் பெலனையும் எனக்கு அவர் நிச்சயம் தருவார்!" என்பதாகவே நாம் காணவேண்டும். இவ்விதமாய் நாம் சோதனையையும் பாடுகளையும் காண்போமென்றால், நம்மை அணுகும் ஒவ்வொரு சோதனையையும் கண்டிப்பாக ஜெயித்து விடுவோம்!

மேலும் தேவன், "தன்னுடைய பிராமணங்களை நம்முடைய மனதிலே வைத்து நம் இருதயங்களில் அவைகளை **எழுதுவேன்**" எனவும் வாக்குரைத்திருக்கிறார் (எபி.8:10). இவ்விதமாய் அவரே தம்முடைய ஆவியின் மூலமாய் கிரியை நடப்பித்து அவருடைய பரிபூரண சித்தத்தைச் செய்வதற்குரிய விருப்பத்தையும் செய்கையையும் நமக்குள் நிறைவேற்றுவார்! (பிலி.2:13). எனவே நாம் ஒருக்காலும் தோல்வி யடைய வேண்டிய அவசியமே இல்லை!

**பாவத்தின் வலிமையிலிருந்து விடுதலை பெறுதல்!**

"எங்களைத் (திராணிக்கு மேலான) சோதனைக்குட்படப் பண்ணாமல்..." என்ற விண்ணப்பத்தைத் தொடர்ந்து, "தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்ற விண்ணப்பம் வருவதைப் பார்த்தீர்களா!

"இரட்சித்துக் கொள்ளும்" என்ற வார்த்தைக்கு விரிவாக்கம்

யாதெனில், "எங்களை உம்மண்டை இழுத்துக்கொள்ளும்" என்பது தான். எனவே இந்த ஜெபம், "எங்களைத் தீமையிலிருந்து விடுவித்து உம்மண்டை இழுத்துக்கொள்ளும்" என்பதாகவே உள்ளது. பார்த்தீர்களா! தேவனும், தீமையும் வேறு வேறு திசையிலிருந்து நம்மை இழுக்கும் வலிமையான சக்திகளாகும். ஆகவேதான், "தகப்பனே, தீமையை நோக்கி இழுக்கும் சக்தியை என் மாம்சத்தில் நான் அதிகமாய் உணருகிறேன். ஆனால் நீரோ என்னை அந்தப் பாதைக்குள் போகவொட்டாதிரும்! அத்தீமைக்கு என்னை ஒப்புக்கொடுக்க நானும் விரும்பவில்லை. ஆண்டவரே, என்னை நீர் தயவாய் உம் பாதைக்குள் இழுத்துக்கொள்ளும்" என்றே ஜெபிக்கிறோம். பாவத்தின்மீது நாம் ஜெயம் பெற்ற வாழ்க்கை வாழ வேண்டுமென்றால், "நான் **தேவனண்டையில்** இழுத்துக் கொள்ளப் பட வேண்டும்" என்ற தீராத வாஞ்சையும் தாகமும் மிகமிக முக்கியமானதாகும்!

இன்று அநேகக் கிறிஸ்தவர்களிடத்தில், "பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது" (ரோமர் 6:14) என்ற பொன்னான வாக்குத்தத்தம் அவர்கள் ஜீவியத்தில் நிறைவேறாததற்கு காரணம், பாவத்தின் பிடியிலிருந்து விடுதலையாக வேண்டும் என்ற தீராத வாஞ்சையும் தாகமும் அவர்களிடம் இல்லாததால்தான்! இவர்கள் தேவனிடம் சென்று, "ஓ, என் தேவனே என்ன விலைக்கிரயமானாலும் அதைச் செலுத்த நான் ஆயத்தம்... நீரோ என்னைப் பாவத்தின் பிடியிலிருந்து விடுதலை செய்யும்!" என **ஒரு தடவைகூட** கதறி ஜெபித்திருக்கவே மாட்டார்கள். ஏனெனில் பாவத்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற 'தீராத தாகம்' இவர்களுடைய ஜீவியத்தில் இல்லை.... அவ்வளவுதான்! இவர்களோ, மோசமான நிலைக்கு வியாதிப் பட்டுவிட்டால் "அதனிமித்தம்" தேவனிடம் கூக்குரலிட்டு கதறி ஜெபிப்பார்கள். ஆனால் அந்தோ...! இவர்கள் நோயுற்றிருப்பதைவிட பாவம் செய்வதே மகா கொடியது என்பதை உணருவதேயில்லை! எனவேதான் இவர்கள் தோல்வியின் படுகுழிக்குள் மூழ்கியிருக்கிறார்கள் என்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை!

யாத்திராகமம் 2:23-25 வசனங்களில், "இஸ்ரவேல் புத்திரர் **அடிமைத்தனத்தினால் தவித்து... முறையிடும் சத்தம்** தேவசந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு... அவர்களை நினைந்தருளினார்" என வாசிக்கிறோம். இவ்விதம் நாமும் மிகுந்த வியாகுலத்தோடு பாவத்தின் விடுதலைக்காக கூக்குரலிட்டு முறையிட்டால் மாத்திரமே தேவன் நம் கூக்குரலைக் கேட்டு நம்மை உற்றுக் கவனிக்கத் துவங்குவார். "உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடுவீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டு பிடிப்பீர்கள்" என்றே தேவனும் கூறுகிறார் (எரேமியா 29:13). நாம் தேவனிடத்திலிருந்து ஏதாவது அருமையானதொன்றைப் பெறவேண்டு மானால், அதற்காக நாம் முதலாவது தீராத பசியும் தாகமும் கொள்ள வேண்டுமென்பது தேவனுடைய வார்த்தையிலுள்ள மாறாத

சட்டமாகும். அப்போது மாத்திரமே நாம் தேவனிடத்திலிருந்து பெறும் அருமையானவைகளை மிகவும் மேன்மையாக கருத கற்றுக்கொள்ள முடியும். எனவேதான் நாம் பசிதாகத்தோடு தேவனிடம் கூக்குரலிடும் வரை தேவன் காத்திருக்க வேண்டியதாயுள்ளது. பின்புதான் நாம் உண்மையாய் வாஞ்சித்தது எதுவோ அதை தேவன் நமக்குத் தந்திடுவார்!

சாத்தானோடு மேற்கொள்ளும் ஓர் யுத்தமே கிறிஸ்தவ ஜீவியமாகும். இந்த யுத்தத்தில் சாத்தானுடைய ஏவலாளிகளில் ஒருவன் "நமக்குள்ளேயே" இருக்கிறான்! அவன் யார் தெரியுமா? அது, நம் மாம்சமே! இவ்வாறு நம் மாம்சம் சத்துருவோடு சேர்ந்து நிற்பதால், நாம் சாத்தான் மீது தொடுக்கும் கடும் யுத்தத்தைத் தடை செய்வதற்கு தன்னால் இயன்ற யாவையும் இந்த மாம்சம் முயற்சிக்கும்! இதை நாம் ஒருபோதும் மறந்துவிடவே கூடாது. எனவேதான், நாம் சாத்தானை ஜெயிக்க வேண்டுமென்றால், "மாம்சத்தின் பிடியிலிருந்து" விடுதலையாவதற்கு தீராத வாஞ்சை கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது.

**எல்லா தீமையிலிருந்தும் விடுதலையாகுதல்!**

இன்று அநேக விசுவாசிகள், "ஆண்டவரே, எங்களுக்கு மனுஷர்களிடத்திலிருந்தும் பிசாசிடத்திலிருந்தும் வரும் எல்லாத் தீமையிலிருந்தும் எங்களைக் காத்துக்கொள்ளும்!" என ஜெபிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். இவ்வாறு அவர்கள் ஜெபித்துக்கொண்டே சத்துருவின் ஏவலாளியான தங்கள் மாம்சத்திற்கு, அவை விரும்பியதை எல்லாம் கொடுத்து 'தீனி போட்டு' கொழுக்க வைக்கிறார்கள்! இவ்வாறு காரியம் எதிரும் புதிருமாக நடந்தால் தேவன் அவர்களை எங்ஙனம் எல்லாத் தீமையிலிருந்தும் விடுவித்துக் காக்க முடியும்? நாம் முதலாவது நம்முடைய மாம்சத்தின் இச்சைகளிலிருந்து விடுதலை பெற வாஞ்சிப்போமாக! அதற்குப் பின்பு, நாம் சாத்தானை ஜெயிப்பதோ எளிதாகி விடும்! இப்போது, மனுஷரிடமிருந்து புறப்படும் தீமையோ அல்லது பிசாசிடமிருந்து புறப்படும் தீமையோ நம்மைத் தொடக்கூட முடியாது என்ற உண்மையை நாம் **நிஜமாய்** அறிந்திருப்போம்!

அவ்விதமே ரோமர் 7:14-25 வசனங்களில், பவுல் தன் மாம்சத்தின் இச்சையிலிருந்து முற்றிலும் விடுதலையாவதற்கு **வாஞ்சித்ததைக்** குறித்து வாசிக்கிறோம். **அதற்கு பின்புதான்** ரோமர் 8:28-ல், "தேவன் நமக்கு சகலமும் **நன்மைக்கேதுவாக** நடத்துகிறார்" என்ற அருமையான வசனத்தை வாசிக்கிறோம். ஒன்றன் பின் ஒன்றாக மிக நேர்த்தியான வரிசையில் வசனங்கள் வைக்கப்பட்டிருப்பதைப் பாருங்கள்! ஆம், நாம் முதலாவது சத்துருவின் ஏவலாளியாகிய மாம்சத்திலிருந்து விடுதலை பெற வாஞ்சித்தால் மாத்திரமே ரோமர் 8:28-ல் கூறப்பட்ட இனிய வாசகம் நம் வாழ்வில் உண்மையாய் நடந்தேறும். இவ்வாறு ரோமர்.8:28-ல், எந்தத் தீமையும் நம் ஜீவியத்தை ஆட்கொள்ளாது எனக்காணும் வாக்குதத்தம் நம்மை எவ்வளவாய் பரவசமூட்டுகிறது! ஆம், சகலமும்...கொஞ்சமல்ல

அல்லது அதிகமல்ல அல்லது 99 சதவீதம் வரை மட்டுமல்ல, **சகலமும்** நமக்கு நன்மைக்கேதுவாகவே நடந்திட முடியும் என்பதை நீங்கள் உண்மையாகவே விசுவாசிக்கிறீர்களா?

உங்கள் வாழ்வின் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே நீங்கள் பார்க்கும்போது அவைகள் மகா கொடியவைபோல்தான் தோன்றும். ஆனால், அவைகள் யாவும் ஒன்றாய் கைகூடி இணைந்து வரும்பொழுது, சகலமும் நன்மைக்கேதுவாய் நடந்தேறும் கிரியையை நாம் கண்டிட முடியும்! அவ்வாறு நடந்தேற, நீங்கள் முதலாவது தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவரது தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய் இருந்திட வேண்டும். **அப்போது** இந்த வசனத்தின்படியே உங்களுக்கும் நடந்தேறும்! அவருடைய தீர்மானம் என்ன என்பதையும் அடுத்த வசனம் கூறுகின்றது. அது யாதெனில், நாம் முழுமையாக **பாவத்தின் பிடியிலிருந்து விடுதலையாகி** கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் மாறுவதே அவருடைய தீர்மானமாகும் (ரோமர்.8:29). எனவே, நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக வேண்டும் என்ற வாஞ்சையைப் பெற்றிருப்பீர்களென்றால், உங்கள் ஜீவியத்தின் ஒவ்வொரு சம்பவங் களையும் உங்கள் நன்மைக்கேதுவாகவே நடத்துவேன் என ஆண்டவர் வாக்குரைத்திருக்கிறார்! அல்லேலூயா!

யோசேப்பின் வாழ்க்கையை சற்று தியானியுங்கள். அவன் தனக்கு கிடைத்த வெளிச்சத்தின்படி **தீமையிலிருந்து விலகி** தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ வாஞ்சித்து முயற்சித்தான். அவன் தேவனை பிரியப் படுத்தவே சதா விரும்பினான். தேவனும் அவனை மன நிறைவோடு ஆசீர்வதித்தார்! இது ஒருபுறம் இருக்கட்டும்! "ஆனால்" அவன் எவ்விதம் ஜனங்களால் நடத்தப்பட்டான் என்பதைப் பார்த்தீர்களா? அவனுடைய பத்து சகோதரர்களும் சேர்ந்து அவன்மீது பொறாமை கொண்டு அவனை எகிப்தின் கையில் விற்றுப் போட்டார்கள். இந்நிகழ்ச்சியைக் காண்பது மகா கொடியதாய் இருக்கிறதல்லவா? "ஆனால்" யோசேப்பை எகிப்தின் இரண்டாவது அதிபதியாக தேவன் நியமிப்பதற்கு **இவைகள் யாவும்** தேவனுடைய திட்டமாய் இருந்ததென இறுதியில் காண்கிறோமே! அவனுடைய சகோதரர்கள் அவனுக்குச் செய்த தீமைகள் முடிவில் நன்மையாகவே விளங்கியது! பின்பு, யோசேப்பு எகிப்தை அடைந்தவுடன் போத்திபாரின் வீட்டில் வேலைக்காரனாக விற்கப்பட்டான். அங்கேயோ, போத்திபாரின் மனைவி அவனைத் தூண்டி சோதித்தாள். தெய்வபயம் கொண்ட யோசேப்போ அவளுடைய கபட ஆசைக்கு இணங்க மறுத்தான்! சோதிக்கப்பட்ட அந்த சூழலை விட்டே வெளியேறி ஓடினான்! உடனே போத்திபாரின் மனைவி அவனைப் பொய்யாகக் குற்றம் சாட்டி அவனைச் சிறைச்சாலைக்குள் தள்ளினாள்.

இந்நிகழ்ச்சியைக் காண்பதும் மகா கொடியதாய் இருக்கிறதல்லவா? "ஆனால்" யோசேப்பை சிங்காசனத்தில் அமர்த்துவதற்கு சிறைச்

சாலையின் வழியாகத்தான் தேவன் திட்டம் தீட்டியிருந்தார்! எப்படியெனில், அந்த சிறைச்சாலையில்தான் பார்வோனின் பானபாத்திரக்காரனை யோசேப்பு சந்தித்து அதன் விளைவாய் **இறுதியில்** பார்வோனுக்கு அறிமுகமானான் என்பதை நாம் யாவரும் அறிந்திருக் கிறோம் (ஆதி.39 -41).

யோசேப்பிற்கு, பல்வேறு ஜனங்கள் இவ்வாறு பொறாமையாலும் வெறுப்பினாலும் தீங்கு விளைவிக்க முயற்சித்தார்கள். "ஆனால்" தேவன் தன் சர்வவல்லமையுள்ள ஆளுகையைக்கொண்டு, யோசேப்பின் வாழ்க்கையைக் குறித்து தான் கொண்டிருந்த தீர்மானம் நிறைவேறு வதற்கு **அத்தீமைகள் யாவையும் நன்மையாக முடியும்படி** செய்தார்!

இதைப்போலவே நமக்கும் நடந்தேறும்! "சகலமும்" தேவன் நம் வாழ்க்கையைக் குறித்து கொண்டிருக்கும் திட்டம் நிறைவேறும்படிக்கே நடந்தேறும்! முடிவில், நம்மை கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் நிச்சயமாய் மாற்றுவார்! ஆனால் .... இவைகளை நாம் விசுவாசிக்க வேண்டும்! ஏனெனில், நம் விசுவாசத்தின் அளவின்படி மாத்திரமே நாம் தேவனுடைய வாக்குதத்தங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எஸ்தர் புத்தகத்தில், ஆமான் என்பவன் மொர்தெகாயை தூக்கிலிடுவதற்கு தூக்குமரத்தை ஆயத்தம் செய்தான் என வாசிக்கிறோம். ஆனால் முடிவில், ஆமான் மொர்தெகாய்க்கு ஆயத்தம்பண்ணின தூக்கு மரத்தில் ஆமானே தூக்கிலிடப்பட்டான்! (எஸ்தர் 7:10). இவ்விதமாய், தேவன் தன் ஜனத்தின் சத்துருவுக்கு விரோதமாகவே மேஜையைத் திருப்பிவிட்டார். இன்றும் அவ்விதமே தேவன், சாத்தானுக்குச் செய்கிறார்! அவர் தன் மிகுந்த ஞானத்தால் மேஜையைத் திருப்பி நம்மைத் தூக்கிலிட பிசாசு ஆயத்தம் செய்த அதே தூக்குமரத்தில் பிசாசே தூக்கிலிட்டுத் தொங்கும்படிச் செய்கிறார்! அல்லேலூயா!!

**ஒருவருக்கொருவர் நாம் அதிகமாய் தேவைப்படுகிறோம்!**

இந்த விண்ணப்பத்திலும் நம்முடைய ஜெபம், "தீமையினின்று என்னை இரட்சியும்" என இல்லாமல் "தீமையினின்று **எங்களை** இரட்சியும்" என இருப்பதைக் கவனியுங்கள். அதாவது, "தகப்பனே என் சகோதரனையும் என்னையும் தீமையினின்று இரட்சியும்; என் சகோதரியையும் என்னையும் தீமையினின்று இரட்சியும்" என்று ஜெபிப்பதாகும்!

ஆம், நாம் ஒருவருக்கொருவர் தேவையாயிருக்கிறோம். நாம் தீமையிலிருந்து இரட்சிக்கப்படவேண்டுமென்றால், **ஒருவருக்கொருவர் உள்ள ஐக்கியம்** மிகவும் அவசியமாகும். பிரசங்கி புத்தகத்தில், "ஒண்டியாய் இருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்... ஏனெனில், ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே" என வாசிக்கிறோம் (பிர. 4:9,10). 'இதனிமித்தமே' பிசாசானவன் **விசுவாசிகளைப் பிரித்து** அவர்களுக்குள் பிளவை உண்டு

*பண்ண முயற்சிக்கிறான்! 'இதனிமித்தமே' அவன்* **கணவனையும் மனைவியையும் பிரிக்க** *முயற்சிக்கிறான். ஒருவரை யொருவர் தவறாகப் புரிந்து கொள்ளும் சுபாவத்தையும் சாத்தானே எப்போதும் கொண்டு வருகிறான். மேலும், ஒரு நபர் ஒன்றையும்; இன்னொரு நபர் வேறொன்றையும் நம்பும்படி அவனே கிரியை செய்கிறான். இவ்விதமாய் எவ்வித தீய அசம்பாவிதமும் நடக்காமலேயே அவர்கள் இருவரையும் பிசாசு பிரித்துவிடுகிறான்! இவ்வாறு விசுவாசிகளை ஒருவரைவிட்டு ஒருவரைப் பிரித்துவிட்டால் அவர்களைத்* **தனித்தனியாக** *அடித்து வீழ்த்துவது எளிது என்பதை சாத்தான் நன்றாக அறிந்திருக்கிறான். இவர்கள் ஒன்றாய் இருக்கும்வரை அவனால் ஒன்றும் செய்யமுடியாது! ஆகவேதான் அவன் அவர்களைப் பிரிக்கிறான். இவ்விதம் ஒவ்வொரு விசுவாசியும் தனக்காகவே ஜீவித்து, பிறருக்காக அக்கறை கொள்ளாதிருக்கச் செய்வதில் சாத்தான் வெற்றியடைந்துவிட்டால், அந்த விசுவாசிகள் வெகு சீக்கிரத்தில் தேவனோடு தாங்கள் கொண்டிருந்த வலிமையான உறவை இழந்து போவார்கள் என்பதையும் சாத்தான் தெளிவாக அறிந்திருக்கிறான்!*

*இங்கு ஒரு உண்மையை நாம் நன்றாக உணர்ந்திருக்க வேண்டும். நமக்கு ஒரே ஒரு எதிரி மாத்திரமே இருக்கிறான்! அவன் சாத்தான்! காரியம் இப்படியாயிருக்க நாமோ ஒருக்காலும் ஒருவரோடொருவர் சண்டை போடாதிருப்போமாக! நாமோ ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பதற்கே கடமைப்பட்டுள்ளோம் .... எச்சூழ்நிலையிலும் அதை மாத்திரமே நாம் ஒருவருக்காக ஒருவர் செய்திடக்கடவோம்!*

**வீழ்ச்சியுற்ற சகோதரன்மீது காட்டிடும் கரிசனை!**

*"தீமையினின்று எங்களை இரட்சியும்" என்று ஜெபிப்பதின் மற்றும் ஓர் பொருள் யாதெனில், "என் சகோதரன் பாவத்தில் விழும்போது நான் மகிழ்ச்சியடைய மாட்டேன்" என்பதுதான். ஆம், அவனை நான் புறங்கூறி தூற்றித்திரிய மாட்டேன்! மாறாக, அவனுக்காக நான் வேதனை கொண்டு, அவனுக்காக ஜெபித்து, அவனை மீட்கும்படியே வாஞ்சிப்பேன்! நல்ல சமாரியன் உவமையில் ஆசாரியனின் (பாதிரியார்) மனோபாவத்திற்கும், சமாரியனின் மனோபாவத்திற்கும் உள்ள வேறுபாட்டைக் காண்கிறோம். வீழ்ச்சியுற்றுக் கிடந்த மனிதனை ஆசாரியன் கண்டு "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! நான் இவனைப்போல் வீழ்ச்சியடையவில்லை!" எனக் கூறி விலகிச் சென்றிருப்பான் (லூக்.10:30-37). இன்றும், ஒரு விசுவாசி வீழ்ந்தவுடன் இந்த ஆசாரியனைப் போலவே இன்னொரு விசுவாசி நடந்து கொள்ளுகிறார்! அவர் மற்றவர் களிடம் சென்று, "பாருங்கள், அந்த சகோதரன் விழுந்து விட்டார்" எனக் கூறுகிறார்! அங்கே இந்த விசுவாசி மறைமுகமாகக் கூறுவது யாதெனில், "பார்த்தீர்களா! நான் வீழ்ச்சியடையவில்லை!" என்ற ஜம்பம்தான்!*

*ஆனால், இவர்களுக்கெல்லாம் மாறாக நல்ல சமாரியன் என்ன*

செய்தான்? அவன், தான் பாவத்திலிருந்து ஜெயம் பெற்றதற்காக ஆண்டவரை ஸ்தோத்தரித்துவிட்டு விலகிச் செல்லவில்லை. அவன் உடனே கீழே இறங்கி, தூக்கி எடுத்து.... அவன் சுகமாகும்படி சத்திரத்துக்கும் கொண்டுபோனான்! இந்த உவமானத்தை இயேசு கூறிவிட்டு, "நீயும் போய் அந்தப்படியே செய்!" என்றே ஆணை யிட்டார் (லூக்கா 10:37). இன்று நீங்கள், ஓர் சகோதரனிடத்தில் பெலவீனத்தைக் காணும்பொழுது அல்லது அவன் தன் ஜீவியத்தின் ஒரு பகுதியில் வீழ்ச்சியடைவதைக் காணும்பொழுது இந்த நல்ல சமாரியனைப் போலவே மனோபாவம் கொண்டிருக்கிறீர்களா? அந்த சகோதரனை உங்கள் **ஜெபத்தினால் தூக்கியெடுத்து** அவன் குணமடையும்படி, இயேசுவினிடத்தில் கொண்டு செல்லுகிறீர்களா? ஆம், உங்கள் ஜீவியம் தேவனை மையமாகக் கொண்டிருக்கிறதா? இல்லையா? என்று அறிவதற்கு இவ்வித நிகழ்ச்சி நமக்குக் கிட்டும் நல்ல பரீட்சையாகும்.

"நான் மற்றவர்களைவிட மிகுந்த ஆவிக்குரியவன்!" என காண்பிக்க இச்சிக்கும் சுயம்-மையம் கொண்ட விருப்பத்தினால்தான்.... பிறர் பாவத்தில் விழும்போது அவர்களிடம் நாம் அக்கறை காட்டுவதில்லை. இது மகா கொடிய தீமையாகும். சாத்தானுடைய ஆவியே "நான் மற்றவர்களைவிட மேலானவன்!" என காண்பிக்கத் தூண்டுகின்றது. "பிதாவே தீமையினின்று **எங்களை** இரட்சியும்" என ஜெபிக்கும் ஒருவனிடம், ஆவிக்குரிய ஜீவியத்தில்தான் பிறரைவிட மேலானவன் எனக் காண்பிக்கும் விருப்பம் இருக்கவே இருக்காது!

நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாகவே இருக்கிறோம். என் இடது கைக்கு காயம் ஏற்பட்டால், அக்காயம் சுகமாவதற்கு என் வலதுகை உடனடியாக உதவிசெய்கிறது. என் வலதுகை மாத்திரமல்ல, என் சரீரத்தின் எல்லா **அவயவங்களும் ஒன்றுபட்டு** அக்காயத்தை சுகமாக்கும் பணியில் ஈடுபடுகின்றன. இதைப்போலவேதான் கிறிஸ்துவின் சரீரத்திலும் நிகழவேண்டும்!

**இரண்டு பிரதான கற்பனைகள்!**

ஆண்டவராகிய இயேசு பத்து கற்பனைகளை இரண்டு கற்பனைகளாகத் தொகையிட்டுக் கூறினார். முதலாம் கற்பனை யாதெனில், "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத் தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக" என்பதுதான். இரண்டாம் கற்பனை யாதெனில், "உன்னிடத்தில் நீ அன்புகூர்வதுபோல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" என்பதே ஆகும் (மத்தேயு 22:37).

இந்த இரண்டாவது கற்பனையைத்தான் இயேசு **புதிதான கட்டளை** எனக் குறிப்பிட்டு, "நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் **ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்**" என சீஷர்களிடம் அக்கட்டளையை வழங்கினார் (யோவான் 13:34).

*ஓர் உண்மையான இயேசுவின் சீஷன், தான் அறிந்த ஜீவிய பகுதிகளிலும் தான் அறியாத பகுதிகளிலும் தேவனையே மையமாகக் கொண்டு வாழ்ந்திட வாஞ்சிப்பான். தன் வாழ்வில் தேவன் கொண்டிருக்கும் சித்தத்திற்குப் புறம்பாகத் தனக்கென எவ்வித இலட்சியமோ அல்லது விருப்பமோ ஒருபோதும் கொண்டிட மாட்டான். இவ்விதம் தேவனை மையமாகக் கொண்டு ஜீவிக்கும் இந்த சீஷன், இயேசு தன்னை நேசித்தது போலவே தன் சகோதரர்களையும் பங்கமின்றி நேசிப்பான்!*

*நம் சகோதர்களிடம் நாம்* **கரிசனை** *கொள்வதே அவர்களை அன்புகூர்வதாகும். இந்த உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்காகவும் நாம் கரிசனை கொண்டிட முடியாது! அந்த அளவிற்கான திராணி தேவனுக்கு மாத்திரமே உண்டு. ஆனால் நம்முடைய திராணிக்கேற்ப நம்முடைய சக விசுவாசிகளிடம் நாம் நிச்சயமாய் கரிசனை காட்டிட வேண்டும். இவ்விதமாய் கரிசனை காட்டும் நம் திராணியின் அளவு தொடர்ந்து பெருகி கொண்டேயும் வரவேண்டும். நாம் முதலில் இவ்விதமாய் துவங்குவதில்லை. இருப்பினும், முதல் படியாக இயேசு நம்மை நேசிப்பது போலவே நம் வீட்டிலுள்ள குடும்ப அங்கத்தினர்களை அன்புகூர வேண்டும். பின்பு, இதோடு நாம் நின்று விடாமல் தேவனுடைய குடும்பத்திலிருக்கும் சகோதர சகோதரிகளை, இயேசு நம்மை நேசிப்பது போல அவர்களையும் நேசிக்கும்படி வளர்ச்சியடைய வேண்டும்!*

**இலக்கை நோக்கி** *முன் தொடர்வதுதான் பூரணமாகும்! பவுல் இவ்விதத் தீர்மானத்தோடுதான் முன்னேறிச் சென்று, "ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர்கிறேன்" எனக் கூறினார் (பிலி.3:13,14). 1) தேவனையே மையமாகக் கொண்ட ஜீவியத்தில் நாம் பிழையற்றவர்களாய், எல்லாவற்றிற்கும் மேலாக* **அவரையே நேசித்து** *2) இயேசு நம்மை நேசிப்பது போலவே* **நம் சகவிசுவாசிகளையும்** *பிறரையும் நேசிப்பதுமாகிய இந்த இரண்டு அன்பின் பிரமாணங்களே தேவன் நமக்கு முன் வைத்திருக்கும் பரம அழைப்பாகும்!*



# 9

## தேவனுக்கே சகல மகிமையும் உரித்தாகுக

“ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்”

*ஆண்டவர் நமக்குக் கற்றுத்தந்த இந்த ஜெபம், “உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக” என முதலாவது தேவனிலேயே ஆரம்பித்து, “ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே” என தேவனிலேயே முடிவடைவதைப் பாருங்கள்! தேவன் தன்னுடைய வார்த்தையில், “நான் அல்பாவும் ஒமெகாவுமாய் இருக்கிறேன்” என்றே கூறியுள்ளார் (வெளி.1:8). இவ்வாறு, இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு சீஷனுடைய வாழ்விலும் அவனுடைய சிந்தையின் துவக்கம் தேவனாயும், அவன் சிந்தையின் முடிவும் தேவனாயுமே இருத்தல் வேண்டும். ஆம், நம் ஜீவியத்தின் மையமும் சுற்றுச்சூழலும் தேவனாகவே நிறைந்திருக்க வேண்டும்! இவ்வாறு, அவர் நமக்காக திட்டம் செய்து வரைந்திருக்கும் வட்டத்திற்குள்ளாய் நாம் தங்கியிருந்து, அவருக்குள் பிழைத்து, அவருக்குள் அசைகிறோம்! இந்த வட்ட எல்லைக்குள் இருக்கும்போது மாத்திரமே நாம் தேவனை கண்டுகொள்ள முடியும்! (அப். 17: 26, 27).*

*இந்த ஜெபத்தின் முடிவில் காணப்படும் இம் மூன்று குறிப்புகளை, நம் ஆண்டவராகிய இயேசு வனாந்திரத்தில் இறுதியாக சோதிக்கப்பட்ட மூன்று சோதனைகளுக்கும் ஒப்பிட்டுக் கூறலாம்.*

**ராஜ்யம் கர்த்தருடையதே!**

*ஜெபத்தின் கடைசியில் வரும் மூன்று அறிக்கைகளில் “ராஜ்யம் உம்முடையதே” என்ற அறிக்கையே முதலாவது வருகிறது. இந்த அறிக்கையை இயேசு கடைசியாக சோதிக்கப்பட்ட மூன்றாவது சோதனையோடு ஒப்பிட்டுப் பாருங்கள்! அச்சோதனையில் பிசாசானவன், இயேசுவுக்கு இவ்வுலக ராஜ்யங்கள் அத்தனையையும் காட்டினான். பின்பு, “நீர் என்னைத் தாழப் பணிந்து கொண்டு, இவைகள் யாவையும் எடுத்துக் கொள்ளும்” என்றான். ஆனால் இயேசுவோ, “அது என்னால் ஒருக்காலும் முடியாது! ராஜ்யங்கள் பிதாவிற்கே உரியவைகள். அந்த ராஜ்யத்தில் அவர் ஒருவரே ராஜாதி ராஜா!” என ஆணித்தரமாக பிசாசிற்கு பதிலுரைத்தார். இதனிமித்தமே, இயேசு மாம்சத்திலிருந்த நாட்களெல்லாம் தன்னை ஒரு ராஜாவாக்கிக் கொள்ள ஒருபோதும் விரும்பவில்லை! ஓர் சமயம் ஜனங்கள் அவரை ராஜாவாக்கும்படி முயற்சித்தார்கள் (யோ.6:15).*

*ஆனால் அவரோ அவர்களை விட்டு விலகி ஓடிச் சென்றார்! அவர் எல்லா மனுஷருக்கும் ஓர் அடிமையைப் போலவே இவ்வுலகில் ஜீவித்தார்.*

*நாம் கற்றுக்கொள்ளும்படி இங்கு கடந்து வந்த போதகத்தைக் கேட்டீர்களா? ஆம், நாம் ஒருக்காலும் பிறருக்கு நம்மை ராஜாவாக்கிட முயற்சி செய்யவே கூடாது! தான் ஒரு தலைவனாக மாற வேண்டும் என விரும்பும் ஒருவன்! அல்லது ஓர் கிறிஸ்தவத் தலைவனாக கொடிகட்டிப் பறக்க விரும்பும் ஒருவன்! அல்லது இதுபோன்று ஏதாவது ஒரு வகையில் தன்னை தன் சக விசுவாசிகளைக் காட்டிலும் மேலாக உயர்த்த விரும்பும் ஒருவன்!.... "பிதாவே* **நீர் ஒருவரே ராஜாவாய்** *இருக்க பாத்திரர்!" என ஜெபிப்பதற்குத் தகுதியற்றவன்!! தேவனுடைய சபையில் தேவன் மாத்திரமே ராஜாவாய் வீற்றிருக்க வேண்டும். நாமோ ராஜாக்களாய் அல்ல.... அடிமைகளாகவே இருந்திட வேண்டும்!*

**வல்லமையும் கர்த்தருடையதே!**

*இரண்டாவதாக, "வல்லமையும் உம்முடையதே!" என்ற அறிக்கையை காண்கிறோம். ஆம், "வல்லமை தேவனுடையதே" என சங்கீதம் 62:11 பறைசாற்றிக் கூறுகின்றது. அவருடைய மகிமைக்காக உபயோகிக்கும் பொருட்டே வல்லமையை நமக்கு தற்காலிகமான கடனாகத் தேவன் கொடுக்கிறார். ஆனால் வல்லமையோ தேவனுக் குரியதே ஆகும்! சுயநல நோக்கத்திற்காக உபயோகிக்கும்படி தேவன் நமக்கு வல்லமையைத் தருவதில்லை. இந்த இரண்டாம் அறிக்கையை இயேசுவின் முதலாம் சோதனையோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அங்கே பிசாசு, ஆண்டவர் இயேசுவைப் பார்த்து, "நீ தேவனுடைய குமாரனாய் வல்லமை பெற்றிருக்கிறாய். அந்த வல்லமையைக் கொண்டு இந்த கல் அப்பமாகும்படிச் செய்து உன் பசியைத் தீர்த்துக்கொள்" என்றான். அதற்கு இயேசு, "அவ்விதம் நான் ஒருக்காலும் செய்ய மாட்டேன். சகல வல்லமையும் பிதாவிற்கே உரியதாகும். அவர் எனக்குச் சொல்லும்வரை நானாகவும், எனக்காகவும் அந்த வல்லமையை உபயோகிக்க மாட்டேன்" என கெம்பீரமாய் பதிலுரைத்தார்.*

*இன்று அநேக விசுவாசிகள் இந்தப் பகுதியில் உண்மையற்றவர் களாகவே இருக்கிறார்கள். தேவன் அவர்களுக்கு ஓர் ஆவிக்குரிய வரத்தைக் கொடுத்தவுடன், அவைகளை அவர்கள் தங்கள் சுயநல நோக்கங்களுக்காகவே உபயோகிக்கிறார்கள்! உங்களிடம் தீர்க்கதரிசன வரமோ அல்லது சுகமாக்கும் வரமோ அல்லது இன்னிசை வரமோ ஆகிய ஆவிக்குரிய வரங்களை நீங்கள் பெற்றிருக்கலாம். ஆனால் சகல வல்லமையும்* **கர்த்தருக்கே சொந்தம்** *என்றே நீங்கள் சதா நினைவிற் கொள்ளுங்கள். நம்மை நாமே உயர்த்துவதற்கென தேவன் ஒருபோதும் நமக்கு ஏதாகிலும் வல்லமையின் வரத்தைத் தருவதே இல்லை!*

*இதற்கு மாறாக, தேவனுடைய வரங்களை நம் சொந்த நலனுக்கென நாம் சுயநலமாய் உபயோகித்தால், அன்று இயேசு ஆலயத்திலிருந்து*

*துரத்திய 'காசுக்காரர்களாகவே' நாமும் முற்றுப்பெறுவோம். அங்கே அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?* **மார்க்கத்தின் பெயரால் தங்களுக்கென பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள்?** *ஆனால் அவர்களோ, "நாங்கள் தேவனுக்கு ஊழியம் செய்கிறோம்!" என்றுதான் கூறினார்கள். அந்தோ..... இவர்கள் உண்மையில் தங்களையே சேவித்துக் கொண்டிருந்தார்கள்! இன்றும் இதுபோன்ற ஜனங்கள்தான் நிரம்ப இருக்கின்றார்கள். இவர்கள், இயேசுகிறிஸ்துவின் பெயரால் தங்களுக் கென ஓர் பெயர் பிரஸ்தாபத்தை உண்டாக்குகிறார்கள். மேலும் தங்களுக் காகவும் தங்கள் குடும்பத்தினருக்காகவும் பணத்தை வாரி சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இவையெல்லாம் என்ன?... சுயநலம்... சுயநலமே!*

*இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஏதேனும் ஒன்றைச் செய்து அதன் மூலம் தங்களுக்கென பணத்தையோ புகழையோ பவுசையோ பதவி யையோ அல்லது படோடாபத்தையோ ஆதாயமாகத் தேடுவது மகா கொடிய தீங்காகும்! நமக்கு தேவபக்தி ஒருக்காலும் ஆதாயத் தொழிலாக இருக்கவே கூடாது (1 தீமோ.6:5). இன்றும், தேவனுடைய சபையிலிருக்கும் அவருடைய தீர்க்கதரிசிகள், இயேசுவைப் போலவே, இவ்வித காசுக் காரர்களை ஆலயத்தை விட்டுப் புறம்பே அடித்துத் துரத்த வேண்டும்!*

**மகிமையும் கர்த்தருடையதே!**

*கடைசியாக, "மகிமையும் உம்முடையதே!" என்பதே மூன்றாவது அறிக்கையாக உள்ளது.*

*இந்த ஆழமான ஆவிக்குரிய ஜெபத்தை நாம் உண்மையாகவே ஜெபித்த பின்பு... இதில் காணும் ஆவிக்குரிய ஜீவியத்தை அடைந்த பின்பு.... நாம் தேவனுக்கென அற்புதமான ஊழியத்தை நிறைவேற்றி முடித்த பின்பு.... ஆகிய எல்லாவற்றிற்கும் முடிவில், "நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர்கள் (அடிமைகள்), செய்ய வேண்டிய கடமையை மாத்திரமே செய்தோம்" என்றுதான் கூறவேண்டும் (லூக்கா.17:10). இன்றோ மாயமான தாழ்மையோடு, "தேவன்தான் எனக்கு உதவி செய்தார்" எனக் கூறும் ஜனங்களைப் பார்க்கிறோம். ஆனால் இப்படிப்பட்டவர்கள் தங்கள்* **இருதயத்தின் ஆழத்தில்** *தங்களைத் தாங்களே மெச்சிக் கொண்டு புகழைத் தங்களுக்கென கட்டித் தழுவிக் கொள்ளுகிறார்கள். இந்த மூன்றாவது அறிக்கையை இயேசு வனாந்திரத்தில் சந்தித்த இரண்டாவது சோதனையோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அங்கு, இயேசுவை தேவாலயத்தின் உப்பரிகையிலிருந்து கீழே குதிக்கும்படி சாத்தான் சோதித்தான். அவ்வாறு அவர் குதிப்பாரென்றால் தேவனுடைய அற்புத பாதுகாப்பைப் பெற்றிருப்பார்! கீழே தாழக் குதித்து விழுந்தும் ஒரு சேதமுமின்றி வீறு நடை போடுவார்! ஜனங்கள் அவருக்குப் புகழ் மாலை சூடுவர்! இதைக் காணும் ஜனங்கள் "இவரே மேசியா" எனப் பரவசத்தோடு ஏற்றுக் கொள்வர்! என்றெல்லாம் சோதித்தான். ஆனால் இயேசுவோ, "இவ்வாறு நான் ஒருக்காலும் செய்ய மாட்டேன்.* **என் பிதா**

**ஒருவருக்கே சகல மகிமையும் உரித்தாகும்!**'' என எக்காளமிட்டு முழங்கினார்.

ஆம், நம் தேவன் வைராக்கியமானவர்! அவர் தன் மகிமையை நம்மில் யாதொருவனுக்கும் கொடுத்திட மாட்டார் (ஏசாயா 42:8). எந்த மனுஷனும் தனக்கென மேன்மை பாராட்டும் பொருட்டு பரலோகத்தில் எதுவுமே காணப்படாது! சகல மகிமையும் தேவனுக்கே உரியதாகும். பரலோகத்தின் ஆவியை தன் இருதயத்தில் பெற்றிருக்கும் எந்த மனுஷனும் இவ்வித மனோபாவத்தை இப்பூமியில் இப்போதே பெற்றிருப்பான்! இப்படிப்பட்டவனே தன்னைப் பின்னாக வைத்து, தான் காணப்படாதவனாகவும்; அறியப்படாதவனாகவும் தன்னை வைத்துக் கொள்ள எப்போதும் வாஞ்சிப்பான். அவனுடைய வாஞ்சையெல்லாம், ஜனங்களின் கவனம் தன்னையோ அல்லது தன் கிரியைகளையோ நோக்கி ஈர்க்கப்பட விரும்பாமல் தேவனை நோக்கி ஈர்க்கப்படும்படியே வாஞ்சிப்பான்! இவ்விதமாய் தன் தேவன் ஒருவருக்கே மகிமை சேர்த்திடச் செய்வான்!!

இவ்வித மனிதன், தான் தேவனுக்கு என்ன செய்தோம் என்பதைக் குறித்தோ அல்லது தன் ஆவிக்குரிய மேன்மையைக் குறித்தோ **தன்னுணர்வு** கொண்டிருக்க மாட்டான். அவன் சகலத்தையும் தேவனிடமிருந்தே பெற்றுக்கொண்டான்! எனவே அவனால் எதைக் குறித்தும் மேன்மை பாராட்டவே முடியாது! (1 கொரி.4:7). அவன் மேன்மை பாராட்டுவானானால் பவுலைப்போல, ``நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்ட மாட்டேன்'' என்றே அறிக்கை செய்வான் (கலா.6:14).

பிலிப்பியர் 3:13-ல் பவுல், ``பின்னானவைகளை மறந்து'' எனக் கூறினார். அவ்விதம் பவுலுக்குப் பின்னாக இருந்தவைகள் யாது? ஓர் வெற்றியுள்ள ஜீவியமும்! தேவனுக்காக நிறைவேற்றிய வல்லமையான ஊழியமுமே! பவுலுக்குப் பின்னாக இருந்தது. ஆனால் பவுலோ அவை யாவற்றையும் தன் மனதிலிருந்து அகற்றினார். ஏனென்றால், அவர் தன் ஜீவியத்திற்காகவும் தன் ஊழியத்திற்காகவும் **தேவனுக்கே** சகல மகிமையையும் செலுத்தினார்!

நியாயத்தீர்ப்பு நாளில் தனக்கு முன் நிற்கும் இரு கூட்டத்தாரைக் குறித்து இயேசு குறிப்பிட்டுக் கூறினார். அதில் ஒரு கூட்டத்தார், ``கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் **உரைத்தோம்,** உமது நாமத்தினாலே பிசாசுகளைத் **துரத்தினோம்,** உமது நாமத்தினாலே அநேக அற்புதக் கிரியைகளைச் **செய்தோம்**'' என்பார்கள். ஆனால் ஆண்டவரோ, அவர்களைப் பார்த்து, ``அக்கிரம செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள்'' என்றே கூறுவார் (மத்.7:22, 23). ஆனால் ஆண்டவர் இரண்டாவது கூட்டத்தாரை குறிப்பிட்டுப் பேசும்போது, ``நான் பசியாயிருந்தேன் எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள்... வஸ்திரமில்லா

திருந்தேன் எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்... வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள்'' எனக்கூறுவார்.

**ஆனால் அவர்களோ தாங்கள் இவைகளையெல்லாம் செய்தோம் என்ற தன்னுணர்வு அற்றவர்களாகவே காணப்பட்டார்கள்.**

ஆகவே அவர்கள், ''ஆண்டவரே எப்பொழுது இவைகளையெல்லாம் உமக்குச் செய்தோம்? இவைகளையெல்லாம் செய்ததாக எங்களுக்கு நினைவில்லையே!'' என்பார்கள். ஆ... இது எத்தனை மகா அருமை! இவர்கள் பதிலைக் கேட்ட ஆண்டவர், ''என்னுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதற்கு **நீங்களே** பாத்திரவான்கள்!'' என கூறினார் (மத்.25:31-40).

ஓர் நீதிமான் நன்மையை செய்வான்....செய்து முடித்தவுடன், அவைகளை மறந்துவிடுவான். அநீதியான மனுஷனோ தான் செய்த எல்லா நன்மைகளையும் தன் மனதின் டைரியில் ஞாபகமாய் எழுதி வைத்துக் கொள்வான்! இவ்வாறு நீங்கள் தேவனுக்காகவும் பிறருக்காகவும் செய்த எல்லா நன்மைகளையும் குறித்து தன்னுணர்வு கொண்டு மகிமையில் மிதக்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் தவறான கூட்டத்தாரோடு சேர்ந்துவிட்டீர்கள்! நாம் ஜாக்கிரதையாயிருப்போமாக.

**தேவனுடைய மகிமையே என்றென்றும் நிலை நிற்கக்கடவதாக!**

இந்த ஜெபம் முடிவடையும் தருணத்தில், ''என்றென்றைக்கும்''... என கூறி நிற்பதைப் பாருங்கள். அதாவது சில வருஷங்களல்ல, என்றென்றைக்கும் சதா நித்திய காலமாய்... என்பதே இதன் பொருளாகும். ஆம், நாம் நித்திய நித்திய காலமாய் தேவனைத் துதித்து, அவருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்கே சதா செலுத்திக் கொண்டிருப்போம்! இவ்வாறு நம் எல்லா ஜெபங்களின் இறுதியிலும் சகல துதியையும், கனத்தையும், மகிமையையும் தேவனுக்கே செலுத்தி ஜெபத்தை முடிப்பது மிக அற்புதமான வழியாகும்!

நாம் எப்போதுமே, ஜனங்களின் கவனத்தை நம்மை விட்டு தேவனிடம் திருப்புவதற்கே வாஞ்சை கொண்டிருக்க வேண்டும். நாமோ, **பின்னாகத் தங்கி மறைந்திருப்பதையே** எப்போதும் நம் நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அப்போது மாத்திரமே, தேவன் நமக்காகவும் நமக்குள்ளாகவும் நம் மூலமாகவும் செய்திட விரும்பும் தன்னுடைய நோக்கத்தை அதிக அதிகமாய் நிறைவேற்றி முடித்திட முடியும்!

**அப்படியே ஆகக்கடவது!**

இந்த அருமையான ஜெபத்தின் இறுதி வார்த்தை, ''ஆமென்'' என்பதே ஆகும். ஆமென் என்ற அருமையான வார்த்தைக்கு, ''அப்படியே ஆகக்கடவது'' என்பதே பொருளாகும். ஆதியாகமம் 15:6-ல் ''ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான்'' என வாசிக்கிறோம். இங்கு கூறப்பட்ட ''விசுவாசித்தான்'' என்ற வார்த்தைக்கு, எபிரெய பாஷையில் ''ஆமென்'' என்ற பதம் குறிப்பிடப்பட்டுள்ளது. பிள்ளையில்லாமலிருந்த ஆபிராமை